தமிழ்க் கடல் வாசகம்

இரண்டாம் புத்தகம்

சென்னை
இராஜதானிக் கலாசாலை மாஜித் தமிழாசிரியரும்
'தமிழ்க் கடல்' வெளியீட்டுப் பதிப்பாசிரியரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
தமிழ்க் கடல் ஆபீஸ்
சாந்தோம், மயிலை
பதிவு செய்தது]   1935   [விலை 8 அணா

Printed at
The 'Tamil Kadal' Press,
Madras

முன்னுரை


இவ் வாசக புஸ்தகத்தில் வந்துள்ள பாடங்கள் படங்கள் அச்செழுத்து முதலிய அனைத்தும் புதியவை. வகுப்பிற்கு ஏற்க, உரை நடை நன்கு அமைந்துள்ளது.

வசன பாடத்திலும் செய்யுட் பாடத்திலும் வந்துள்ள அருஞ் சொற்களுக்குக் குறிப்புரைகள் இற்றில் சேர்க்கப்பட் டுள்ளன; அவை மாணாக்கருக்குப் பெரிதும் பயன்படுவன வாகும். வசன-பாடத்தின் குறிப்புரை அகராதி முறைப்படி அமைத்திருத்தலின், மாணாக்கர் அகராதி பார்க்கும் வழக்கமும் அடைவர்.

'கடலகம்'
சாந்தோம், சென்னை. } கா. நம.

அடக்கம்

செய்யுள்



[தஞ்சை நகரம் : பெரியகோயில், 98 - ஆம் பக்கம்]


தமிழ்க் கடல் வாசகம்

இரண்டாம் புத்தகம்

1. சென்னை நகர் — மதராஸ் - I

தேசசரித்திர விசாரணை செய்ய விரும்புவோர் எவரும், தாம் வாழும் நகரத்தின் வரலாற்றை முதற்கண் அறிந்துகொள்ளுதல் வேண்டும்; பின்னர், அஃது அடங்கி யிருக்கும் நாட்டின் வரலாற்றையும், அதன் பின்னர், இவ்வுலகத்திலுள்ள பற்பல நாடுகளின் வரலாறுகளையும் தெரிந்துகொள்ள முயலுதல் வேண்டும். வேறு நாடுகளின் சரித்திரங்களைமட்டும் உணர்ந்துகொண்டு, தமது நாட்டின் சரித்திரங்களை உணராமல் விட்டிருப்பது பெரும் பேதைமையாகும்.

நாம் வாழும் மாகாணத்திற்குச் சென்னை மாகாணம் என்று பெயர். இதில், இந் நாளில் சிறந்து விளங்குவது சென்னை நகரம்; அதுவே தலைநகரமுமாம். அதனால், இச் சென்னையின் வரலாறுகளை முதலில் ஆராய்ந்து அறிவோம்:


FORT ST. GEORGE IN 1733.
RIVER COOUM.
FORT
ST. GEORGE
CHARLES
CHURCH
ST. THOMAS
CHOULTRY GATE
MIDDLE GATE
Sea Gate
S E A
SCALE 500 FEET TO 1 INCH
500
1000

நமது நாட்டவர் பண்டைக் காலத்தின் செய்திகளை முறையாக எழுதி வையாமையால், அக் காலத்து வரலாறுகள் இக் காலத்தில் ஒரு சிறிதும் நமக்கு நன்கு விளங்குவதில்லை. ஆகவே, இச் சென்னைமா நகரின் பண்டைய வரலாறும் செவ்வையாகத் தெரிந்தபா டில்லை. ஆயினும், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி ஆகிய இவ் விரண்டு திருப்பதிகளும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு விளங்கி யிருந்தன என்பது, தேவாரம், திருவாய்மொழிகளால் நன்கு விளங்குகின்றது. பிரான்சியர் முதலிய ஐரோப்பியர் எழுதி வைத்துள்ள சாசனங்களால் பிற்காலத்து வரலாறுகள் ஒருவாறு தெரிகின்றன. ஆயினும், சென்னை நகருக்கு, 'மதராஸ்' என்னும் பெயர் எப்படி வந்தது என்பது இன்னும் திட்டமாகத் தெரியவில்லை.

1504-ஆம் வருஷம் போர்ச்சுகல் தேசத்தவர் மயிலாப்பூரை யடுத்துள்ள 'சாந்தோம்' (San Thome) என்னும் இடத்தில், வியாபாரத்தின்பொருட்டு வந்து இறங்கினர். எலிசபெத் மகாராணியார் இங்கிலாந்துதேசத்தில் அரசுசெலுத்தியபோது, அவ்வரசியாரிடம் அங்கிலவர்த்தகர் சிலர் 1600-ஆம் ஆண்டில் அநுமதி பெற்று, இஸ்ட் இந்தியா கம்பெனி (East India Company) எனப் பெயர் வைத்து, 1626-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து, சூரத்துப் பட்டணத்தில் வர்த்தகசாலை ஒன்றை ஏற்படுத்தினர்.

அவ்வருடத்திலேயே மசூலிப் பட்டணத்திலும் 1623-ஆம் வருஷத்தில் ஆறுமுகம் (Arumogum) என்னும் இடத்திலும் வர்த்தகசாலைகளை ஏற்படுத்தினர். இந்த இடங்களிலெல்லாம் பற்பல இடையூறுகள் ஏற்பட்டதனால், ஏற்றதோர் இடத்தை அன்னார் நாடலாயினர்.


சாந்தோம் என்னும் இடத்துக்குச் சற்று வடபுறத்தில் ஓர் இடம் கண்டு, அது யாதோர் இடையூறும் நேராததாகத் தோன்றினமையால், அதற்கு உரியவனைக்கொண்டு, அந்த இடத்தைவிலைக்குவாங்கிக்கொள்ளமுயன்றனர். இந்த நாடு முழுதும், அக்காலத்தே, சந்திரகிரி அரசனுடைய ஆளுகையில் அடங்கியிருந்தது. அவ்வரசனுக்குப் பிரதிநிதியாகிய பாளையக்காரனிடம் அங்கிலேயர் ஒப்பந்தம் செய்துகொண்டு, இங்கு ஒரு கோட்டை கட்டி, அதில் வியாபாரம் நடத்தும்பொருட்டு, வருஷம் ஒன்றுக்கு 1,200 வராகன் கிஸ்தி கட்டுவதாக ஒப்புக்கொண்டனர். அந்த நிலயம், கூவம் ஆற்றுக்கு வடக்கிலும், காசிமேட்டுக்கு அருகிலிருந்த சென்னப்ப நாய்க்கன் குப்பத்திற்குத் தெற்கிலும் அமைந்திருந்தது. அதன் அகலம், கிழக்கில் கடற்கரையிலிருந்து மேற்கில் பெரியமெட்டு வரையில் ஒரு மைல் பரப்புள்ளது.

2. சென்னை நகர் — மதராஸ் - II

அங்கிலேயர் தாம் பெற்ற நிலத்தில் சிறு கோட்டை யொன்று கட்டினர். அதை யடுத்து ஊர்கள் ஏற்படத் தொடங்கின. அவ்வூருக்குச் சந்திரகிரி அரசன் தன் பெயரையே வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, அவ்வாறே அதற்குச் ‘சென்ன பட்டணம்’ என்று பெயரிட்டனர். அவன் பெயர் சென்னப்ப நாய்க்கன் என்பது.

அங்கிலேயரும் துருக்கரும் சென்னையை மதராஸ் என்னும் பெயரால் வழங்குகின்றனர். இப் பெயர் இந் நகருக்கு எப்படி வந்தது என்பதை இங்கு ஆராய்வோம்: சிலர், மதில் என்னும் சொல் மருவி, மதராஸ் என்றாயிற்று என்கின்றனர்; அக் காலத்தே பெரிய மதில் ஏதும் இங்கு இல்லாமையாலும், மதில் என்பது மதராஸ் என்று மருவி வாராதாகையாலும் அது பொருந்தாது.

‘மத்ரிஸா’ என்னும் இந்துஸ்தானிச் சொல் மதராஸ் என மருவிற்று என்பர் ஒரு சிலர்; மத்ரிஸா என்பதற்குப் பாடசாலை என்பது பொருள். அக்காலத்தே மஹம்மதிய பாடசாலை ஏதும் இங்கு இல்லாமையால் அதுவும் பொருந்தாதாம். சிற்றரசர்களுக்கு ‘ஸாமந்த ராஜுலு’ என்னும் பெயர் தெலுங்கில் வழங்குகின்றது; அது, மந்தராஜு—மந்தராஜு பட்டணம்—


ARMENIAN STREET
NORTH BEACH ROAD
FORT ST GEORGE
NARASINGAPOORUM
PEOPLE'S PARK

மதராஸ் பட்டணம் என மருவி வழங்கலாயிற்று என்பர் வேறு சிலர். முன்பு, மதராஸ்பட்டணம் என்பதும் இதற்குப் பெயராக வழங்கி வந்துளது. அதனால், இந்தக் காரணம் ஒருவாறு பொருந்துவதாகக் காண்கிறது. அவ்வாறாயின், சதுரங்க பட்டணத்தை, 'ஸத்ராஸ்' என்று வழங்கியது எக்காரணம் பற்றியோ என்பது விளங்கவில்லை.

இங்கே முதலில் கட்டப்பட்ட கோட்டை இப்போதுள்ள கோட்டையின் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்தது. அதுமுதல் ஐந்து வருஷம் வரையில் அதற்குச் செலவான ரூபாய் 23,000. கோட்டையைக் காக்கும்பொருட்டு 26 ஆட்கள் நியமிக்கப்பெற்றனர். வியாபாரம் விருத்தியாகவே, மூன்று ஆண்டுக்குள் இவ்வூர் முக்கிய வியாபார ஸ்தலமாக விளங்கலாயிற்று.

1653-ஆம் ஆண்டில் கவர்னர் ஒருவரும், வர்த்தகர் இருவரும், இருபத்தாறு காலாட்களும் சேர்ந்து, கம்பெனியாருடைய காரியங்களை நடத்தி நிறைவேற்றி வந்தனர்.

1679-ஆம் ஆண்டில் இந்தக் கம்பெனி உத்தியோகஸ்தர்களுடைய முதற்பொருளையும் சம்பளங்களையும் கணக்கிட்டுப் பார்த்தால், இவ்வூர் மிகச் சிறியதா யிருந்திருக்கவேண்டும் என்று தோன்றும். வருஷம் ஒன்றுக்கு, கவர்னருக்குச் சம்பளம் 3,000 ரூபாய்; கணக்குப் பார்ப்பவருக்கு 1,000 ரூபாய்; பண்டகசாலைத்

தலைவருக்கு 700 ரூபாய்; தரகரிக்கு 500 ரூபாய்; வர்த்தகர் இருவரில் ஒவ்வொருவருக்கும் 500 ரூபாய். இவர்களே கம்பெனி உத்தியோகஸ்தர்கள்.

கோட்டைக்குச் சுற்றுப் பக்கங்களில் வீடு கட்டிக்கொள்ளும்பொருட்டுப் போர்த்துக்கேசியர் முதலியோருக்குக் கம்பெனியார் இடங் கொடுத்தனர். சிலருக்குப் பொருளுதவியுஞ் செய்தனர். அதனால், கோட்டையின் அருகில் வெள்ளைக்காரப்பட்டணம் (White Town) ஒன்று தோன்றிற்று; அதற்குச் சுற்றிலும் சுவர் எழுப்பி, நான்கு பீரங்கிப் பத்திரிமேடைகளும் கட்டப்பட்டன. கோட்டைக்குத்தெற்கில் செம்படவர் குடிசைகளும், அரங்கம் என்னும் காலிநிலமும், இவைகளுக்குத் தெற்கில் சாவடிவெளி என்னும் மைதானமும் இருந்தன. மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, நுங்கம்பாக்கம், இராயப்பேட்டை முதலிய கிராமங்கள் விளங்கின.

கோட்டையின் வடக்கே ஒரு நகரம் உண்டாயிற்று. அதற்குக் 'கறுப்பு மனிதர் நகரம்' (Black Town) என்பது பெயர். ஜியார்ஜ் சக்கரவர்த்தி சென்னைக்கு விஜயஞ் செய்த காலத்தில், அப் பெயரை மாற்றி, அவர் பெயரால் 'ஜியார்ஜ்டவுன்' (Georgetown) என்னும் பெயரை அமைத்து வழங்கிவருகின்றனர்.

3. பூலோகத்து ஏழு அதிசயங்கள் - I

1. பிரமிட் கோபுரங்கள் :

பண்டைக் காலத்து அறிஞர்கள், கண்டோர் வியக்கத்தக்க சிறந்த காட்சிப் பொருள்களை ஆங்காங்கே அழகுபெற அமைத்துள்ளனர். அவற்றுள் ஏழு பொருள்கள் பெரிதும் வியக்கத்தக்கனவாக இயன்றுள்ளன. அவற்றிற்கு, 'பூலோகத்து ஏழு அதிசயங்கள்' என்று பெயர். அவையாவன :

(1) எகிப்து தேசத்துப் பிரமிட் கோபுரங்கள் — (The Egyptian Pyramids)

(2) ஆர்த்திமிசியா என்பவள் கட்டிய ஞாபக ஸ்தம்பம் — (The Mausoleum erected by Artemisia)


(3) எபேசு நகரத்துத் தையானு தேவியின் ஆலயம் — (The Temple of Diana at Ephesus)

(4) பாபிலோன் நகரத்துக் கோட்டை-மதில்களும் பூந்தோட்டங்களும் — (The Walls and Hanging Gardens of Babylon)

(5) ரோட்ஸ் நகரத்துத் தாமிரச் சிலை — The Colossus at Rhodes)

(6) ஜூப்பிட்டர் ஒலிம்பியஸ் சிலை—(The Statue of Jupiter Olympius)

(7) அலெக்ஸாந்திரியா நகரத்துப் பேரஸ் என்னும் காவற் கோபுரம் — The Pharos or Watch Tower of Alexandria)



இவற்றுள், பிரமிட் கோபுரங்களே இப்போதும் அழியாமல் உருக்கொண்டு விளங்கி நிற்கின்றன. பிரமிட் கோபுரங்கள் எகிப்து தேசத்தில், நயில் நதியின் கரையில் உள்ளன. அவை—அடிபருத்து, மேல்நோக்கிச் செல்லச் செல்லச் சிறுத்து, உயர்ந்து, முனை குவிந்து விளங்குகின்றன. அக்கோபுரங்கள், மானிடரின் ஆயுள் நிலையைக் குறிப்பதற்கு அறிகுறியாகக் கட்டப்பட்டவை என ஒரு சிலர் உரைக்கின்றனர்; அஃதாவது—மானிடரின் ஆயுட்காலமும், அடிநாளில் மிகப்பெருமையாயிருந்து, வயது செல்லச் செல்லச் சிறுத்து, இறுதியில் அடங்கி ஒடுங்கிப்போகின்றது என்பதாம்.

பிரமிட் கோபுரங்கள், இப்பொழுது சுமார் 60 உள்ளன; அவற்றுள் மூன்று முக்கியமானவை. உலகத்தில் மானிடரால் கட்டப்பட்ட கட்டடங்கள் அனைத்திலும் இக்கோபுரங்களே பெருமையும் உயரமும் வாய்ந்தவையாகையால், முற்காலத்தவர் இவைகளை அதிசயப் பொருள்கள் என மதித்தனர்.

கோபுரம் - 1: முக்கியமான அம் மூன்று கோபுரங்களுள் பெரிய கோபுரம், கியாப்ஸ் (Kheops) என்னும் அரசன் கட்டினமையால், அதற்கு, 'கியாப்ஸ் பிரமிட்' என்னும் பெயர் வழங்குகின்றது. அது வெண்கற்களால் இயன்றுள்ளது. அதன் அடிப்படை, பதின் மூன்று ஏக்கராப் பரப்புள்ளது. கியாப்ஸ் அரசனது

சவத்தை, முற்காலத்து முறைப்படியே, தைல மாட்டி அழியாமற் காத்து, கல்லாற் செய்த சவப்பெட்டிக்குள் வைத்து, அதனுள் அடக்கம் செய்தனர்.

அக்கோபுரத்தைக் கட்டிமுடிக்க இலட்சம் தொழிலாளர் தொழில் செய்து வந்தனராம். கற்றச்சர்கள் தவிர, மற்றையோர், ஆண்டு ஒன்றுக்கு மூன்று மாதமே வேலை செய்வது வழக்கம். அம் மூன்று மாதமும் நயில் நதியில் வெள்ளப்பெருக்குமிகுதியாதலால், அப்போது குடியானவர்களுக்குப் பயிர்த்தொழில் முதலிய வேலைகள் இருப்பதில்லை; அதனால் அம் மூன்று மாதங்களிலும் பெருங் கூட்டமான மாந்தர், பிரமிட் கோபுரத்தைக் கட்டுவதற்கு வேலை செய்து வந்தனர்; அவ்வாறு யாண்டு ஒன்றுக்கு மூன்று மாதமாக, இருபது யாண்டுகள் வேலை நடந்தது. அந்த இருபது யாண்டுகளில் பணியாளருக்கு உணவின் பொருட்டுச் செலவழிந்த ரூபாய் சுமார் 31 இலட்சமாம்.

இந்தப் பெரிய பிரமிட் கோபுரத்தின் உயரம் 800 அடி. இக்காலத்தே தலயாத்திரை செய்து, தேசங்களைச் சுற்றிப்பார்த்து வருபவர், இதன் அகலம் நீளம் உயரம் முதலிய அளவுகளைக் கணக்கிட்டுப் பார்க்க முயன்றும், அடிப்பரப்பு மணலினால் மூடுண்டிருப்பதனால், சரியான அளவைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்கின்றனர்.

பிரமிட் கோபுரத்தின் உள்ளே செல்வதற்கு, அதன் வடபுறத்தில் ஒருவாயில் உண்டு; அதனை ஒரு பெரிய கல்லினால் மூடி, அக் கல்லைச் சுவரோடு சுவராக அணைத்து வைத்திருந்தனர். அஃது, இப்போது பெயர்த்து எடுத்து, அப்பால் வைக்கப்பட்டுள்ளது. உள்ளே செல்பவர், அங்குள்ள காட்சிகளைக் கண்டு வியந்து மகிழ்ந்து, வெளியே வருகின்றனர்.

அடிமட்டத்துக்குக் கீழ், பரந்த நிலவறை ஒன்று இருக்கிறது. அதற்கு மேலே, அரசிக்குரிய மாளிகையும் அதற்குமேல் அரசற்குரிய மாளிகையும், அமைந்துள்ளன. அதன் உள்ளேயிருந்து, வானத்தில் விளங்கும் நட்சத்திரங்களைப் பார்த்துக் கணிதஞ் செய்ய, 342 அடி நீளமுள்ள குழாய் ஒன்று சாய்வாக அமைக்கப்பட்டுள்ளது. அக் குழாயின் வழியாக, பட்டப் பகலில் வானத்தை நோக்கினாலும், கண்ணொளி மழுங்காமல், நட்சத்திரங்களைக் காணலாம். அக் கோபுரத்து நிலவறையிலிருந்து, உட்புறத்தின் உச்சியை நோக்கினால், சுமார் 500 அடி உயரம் இருக்குமாம். அதன்மேல் ஏறி, உச்சியில் நின்று பார்த்தால், அதன் அடிவாரத்திற் செல்பவர் சிறிய பூச்சிகள் ஊர்ந்து செல்வதுபோலத் தோன்றுகின்றனராம்.

கோபுரம் - II: மேற் சொன்ன முதற் கோபுரத்துக்குத் தென்மேற்கில் 500 அடி தூரத்துக்கு அப்பால் இரண்டாங் கோபுரம்

விளங்குகின்றது. அது, முதற்கோபுரத்துக்குச் சற்றுச் சிறியது; ஆயினும், மேட்டுப்பாங்கில் அமைக்கப்பெற்றுள்ளது.

இரண்டாங் கோபுரத்துள், மாளிகைகள் இல்லை; நிலவறை ஒன்றே உண்டு. அது கியாப்ஸ் அரசனுக்கு உடன்பிறந்தவனாகிய ஸிப்பிரினெஸ் (Sippreness) என்பவனால் கட்டப்பட்டது. அதன் அடிப்படையின் அகலமும் நீளமும் சமமாக 805 அடி அளவுள்ளது. அதன் உச்சிமுதல் அடிவரையில் 577 அடி.

கோபுரம் - III: இஃது அழகினாலும் வேலைப்பாட்டினாலும் மற்ற இரண்டையும்விட மிகச் சிறந்தது. இதில் மூன்று நிலவறைகள் இருந்தன. இதற்குள் ஜாத்கோப் பேகலெப் (Jathcope Bagalep) என்னும் ஒருவனது சவப்பெட்டகம் அடக்கம் செய்யப்பெற்றிருந்தது. அதனைப் பேர்த்தெடுத்து, கப்பலில் வைத்து, அங்கில நாட்டுக்குக் கொண்டுபோனபோது, அக் கப்பல் கடலில் மூழ்கிப் போகவே, அப்பெட்டகமும் கடலுக்கு இரையாகிவிட்டது. இந்தக் கோபுரத்தின் அகலமும் நீளமும் ஒரே அளவானது; அது தனித்தனி 352 அடியுள்ளதென்று கூறுகின்றனர்; உச்சி முதல் அடிவரையில் 283 அடியாம்.

எகிப்து தேசத்து யாத்திரை செய்வோரனைவரும் இப் பிரமிட்கோபுரங்களை உள்ளும் புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தும், உச்சியில்

ஏறிச் சுற்றுப்புறங்களைக் கண்டும், உவப்பும் வியப்பும் அடைகின்றனர்.

பிரமிட்கோபுரங்கள் 6,000வருடங்களாகப் பார்ப்பவர்கட் கெல்லாம் வியப்பைத் தந்து, உயரிய மலைகள்போல நிலையாகி நிற்கின்றன.

4. அறுபட்ட உறுப்புக்கள்

சில நூற்றாண்டுகளுக்கு முன்வரையில், கல்வி கற்றவர்களும், உயிரினங்களின் உறுப்புக்கள் அறுபட்டுப் போனால், அவை மறுபடியும் வளர்வதில்லை என்றே எண்ணியிருந்தனர். ஆயினும், செம்படவர்மட்டும் அக்கொள்கையை மேற்கொள்ளாமல், நண்டுவகைகளின் கால்கள் அற்றுப் போனால், அவை மீண்டும் முளைத்து வளருந் தன்மையுடையவை என்றே சொல்லிவந்தனர்.

பல்லிக்கு வால் அறுந்து போனால், அது மறுபடியும் வளருந் தன்மை யுடையது என்பதைப் பலரும் இப்போது அறிவர். ஆயினும், அவை அனைத்தும் கட்டுக்கதைகள் என்றே கற்றோரும் முன்னாளில் எண்ணியிருந்தனர்.


1212-ஆம் ௵ புலவர் ஒருவர் கடற்கரைக் குச்சென்று, அங்குநீர்வாழ்வனவற்றைஉற்றுப் பார்த்து, கல்வியறிவற்ற கரையார் சொல்-

ஓவதே உண்மை என்று கண்டனர். அவர், சில நண்டுகளைப் பிடித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலைத் தறித்து, கடலோரத்தில் ஓர் ஊற்றுக்குழியில் விட்டுவைத்து, அவற்றை ஒவ்வொருநாளும் போய்ப் பார்த்துக்கொண்டே யிருக்கையில், சிலமாதங்களுக்குள் அக்கால்கள் வளர்ந்திருப்பதைக் கண்டு, அவ்வுண்மையைப் பலருக்கும் வெளியிட்டனர்.

சில யாண்டுகளுக்குமுன் புலவர் ஒருவர் ஓர் ஏரிகரைமேல் சென்றுகொண் டிருக்கையில், ஒரு மெல்லிய கொடிபோல் சாம்பல் நிறமான பொருள் ஒன்று கிடக்கக்கண்டு, அஃது என்ன என்பதை ஆராய்ந்தார்; அதனைத் துண்டு துண்டாக வெட்டினர். உடனே ஒவ்வொரு துண்டும் நகர்ந்து செல்லத் தலைப்பட்டது. மறுபடியும் அவற்றுள் இரண்டைப் பிடித்து, நீளத்தில் கிழித்து, ஒன்றன் பாதியை மற்-ெறான்றன் பாதியோடு வைத்து ஒட்டிப்பார்த்-தார்; அவ் விரண்டு பாதியும் ஒன்று சேர்ந்து, வேறொரு வகையான உயிராயிற்று. அவ்-வுயிர்களின் தலை வால் இரண்டையும் அறுத்-துப் பார்த்தார்; அவ் வுயிர்களுக்கு அவையும் உடனே உண்டாயின. அதனால், நரம்பு, எலும்பு, தசை முதலியவைகளும் புதியனவாக உண்டாகும் என்பதைக் கண்டறிந்தனர். உயிர், உடலின் ஒரு புறத்தில்மட்டும் தங்கி யிருப்பதில்லை; உயிரணு உடலெங்கும் பரவி

யிருக்கிறது என்பது மேற்கண்ட உதாரணத்தால் நன்கு விளங்கும்.

அறுபட்ட உறுப்புக்கள் மறுபடியும் முளைத்து வளருந் தன்மை, உயிர்த்தொகைகள் எல்லாவற்றிற்கும் ஒரே விதமானது அன்று; சிற்றுயிர்களுக்கே அவ்வன்மை அதிகம் என்



னலாம். பெரிய உயிர்களுக்கு உறுப்புக்களை வளர்த்துக்கொள்ளும் வல்லமை குறைந்துபோகின்றது. ஒரு சிலந்திக்குக் கால் அறுபட்டுப்போனால், அது திரும்பவும் வளரும்; இக்குத் தும்பி அறுந்துபோனால், மறுபடியும் தோன்றும்; மானிடருக்கு அவ்வாறு உண்-

டாவதில்லையே! மானிடச் சிசுக்களுக்குக் கை கால் முதலிய உறுப்புக்கள் முறிந்துபோனால், அவற்றைப் பொருத்தி அசையாமல் உறுதிப்படக் கட்டிவைப்பின், அவை ஒன்றுகூடிப்போகும்; ஆனால், அறுபட்ட உறுப்புக்கள் மறுபடியும் வளர்வதில்லை.

நாம் ஒரு பல்லியின் வாலைப் பிடித்துக்கொண்டால், அஃது அதை அறுத்துக்கொண்டு ஓடிப்போகும். அறுபட்ட அவ்வால், இரண்டு மூன்று மாதத்திற்குள் வளர்ந்து, முழுவுருவடையும். ஆயினும், அவ் வாலில், தசை, தசைநரம்பு, இரத்த நரம்பு, இரத்தம், மாமிசம் முதலிய அனைத்தும் உண்டாயினும், எலும்புமட்டும் உண்டாவதில்லை. இக்காலத்துப் பெரும் புலவர்கள் நன்கு சோதித்து, இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பின்பு, அஃது உண்டாகும் என்று கூறுகின்றார்கள். மூஞ்சூறு, சுண்டெலி முதலியவைகளுக்கு அறுந்த வால் முளைக்க வெகு நாள் செல்லும்; ஏனெனின், அவை மழைக்காலமெல்லாம் ஓர் இடத்தில் உறங்கிக் கிடக்கும். உறங்கிக்கிடக்குங் காலத்தில் உயிர்களுக்குச் சக்தி குறைவாகையால், அறுபட்ட அவயவம் வளரப் பலநாள் செல்லும்; அது முளைத்தாலும் கூழையாகவே இருக்கும்.

தென்கடலிலுள்ள தீவுகளின் கரையில் பலவகையான நண்டுகள் உள்ளன. அவை, தரைக்குள்ளே வளை செய்துகொண்டு வாழ்-

கின்றன. அந்த நண்டுகள் இராக்காலங்களில் தண்ணீர் குடிக்கக் கடலுக்குச் செல்லும். அவை, வழியிலுள்ள புல்பூண்டுகளில் நுழைந்து செல்ல வேண்டியிருப்பதனல், சில வேளைகளில் அவற்றின் கால்களில் மண் ஒட்டிக்கொள்ளும்; அப்போது அவை நகர்ந்து செல்ல முடியாமல் தத்தளிக்கையில், தம் கால்களை ஒடித்துவிட்டாவது நொண்டிக்கொண்டு நகர்ந்துசெல்லும். சிறிது காலத்துக்குப் பின் அவற்றிற்குப் புதிய கால்கள் முளைக்கும். முளைத்தாலும், அவை, முன்னிருந்த நீளமும் அழகும் அமையப்பெறு.

ஒட்டு மாமரம் எப்படி உண்டாகின்றது? மாமரங்களை ஒன்றோடொன்று கட்டி, ஒட்டுவதனல் உண்டாகின்றது. ஒரு மாஞ்செடியின் கிளையை, ஒரு பெரிய மரத்தின் கிளையோடு ஒட்டவைத்துக் கட்டுவர்; கட்டுமுன், இரண்டு கிளைகளையும், பால் வடியும்படி சீவிவிடுவர்; சில நாளுக்குப் பிறகு அக் கட்டை அவிழ்த்துவிட்டால், இரண்டும் ஒன்றுசேர்ந்து ஒட்டிக்கொண்டிருப்பதைக் காணலாம். அவை அப்படி ஒட்டிக்கொண் டிருந்தாலும், வேற்றுமை மாத்திரம் நன்ருகத் தெரியும். இத்தகைய அமைப்பு மனிதருக்கும் உண்டாகுமானல், ஒருவரது உறுப்பை, அஃது இல்லாத மற்ருெருவருக்கு வைத்து அமைக்கலாமே! அதையும் அறிஞர் இப்போது ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.



5. ஜேம்ஸ் பெர்கூஸன்

ஜேம்ஸ் பெர்கூஸன் (James Ferguson) என்பவன் ஓர் இடைப் பிள்ளை. அவன் தந்தை, அன்றாடம் கூலிவேலை செய்து, வந்ததைக்கொண்டு வயிறு வளர்ப்பவன்; ஆயினும், அவன் பெருந்தன்மை வாய்ந்தவன். இரக்கம், அன்பு, ஈசுவர பக்தி முதலிய நற்குணங்கள் அவனிடத்துக் குடிகொண் டிருந்தன. அவன், மிக்க ஏழையா யிருந்தமையால், தன் மகன் ஜேம்ஸ் என்பவனைப் பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பிக்க அவனால் இயலவில்லை; மற்றப்-

பிள்ளைகளுக்கெல்லாம் எழுதப்படிக்க அவனே கற்பித்து வந்தான். ஜேம்ஸ் என்பவன்மட்டும் செல்வப்பிள்ளையாய்க் காலங் கழித்துவந்தான்.

ஜேம்ஸ், எப்படியோ எழுத்துக் கூட்டிப் படிக்க ஒருவாறு கற்றுக் கொண்டான். அண்ணன்மார் கற்றுக்கொள்வதை அறிந்து, இவனும் அவ்வாறே கற்றுக் கொண்டான்-போலும்!

சில வேளைகளில் தன் தமையன்மாருடைய புத்தகங்களை யெடுத்துப் பார்த்து, படித்துப் படித்து, சொற்களையும் சொற்றொடர்களையும் ஜேம்ஸ் உணர்ந்துகொள்வான். எளிதில் பொருள் விளங்காத கடுஞ்சொல் ஏதாவது நேர்ந்தால், அதன் பொருளைமட்டும் அண்டை வீட்டுக் கிழவியிடம் சென்று தெரிந்து-கொள்ளுவான்; கல்வி கற்பதில் அவன் பிறரிடம் கற்றுக்கொண்டது இவ்வளவே.

ஜேம்ஸ் ஒருநாள் குரலெடுத்துப் படிக்கக் கேட்ட தந்தை, அதிக ஆச்சரியம் அடைந்தான். எட்டு வயதிலேயே ஜேம்ஸ் துலாக்கோல், சக்கரம், இருசு ஆகிய இவற்றின் தத்துவங்களை நன்கு உணர்ந்து, அவற்றைப் பிரகிருதி சாஸ்-திரத்தின் விஷயங்களைக் கண்டுகொள்வதற்கு ஆதாரமாக உபயோகித்தான். அவற்றின் உண்மைகள் உலகத்தார்க்கு முன்னரே தெரிந்தவையாயினும், அவனுக்குமட்டும் அவை புதியனவென்றே சொல்லவேண்டும்.

பெற்றோர், ஜேம்ஸ் என்பவனைச் சின்னஞ் சிறு வயதிலேயே ஆடு மேய்க்குந் தொழிலுக்கு அனுப்பிவிட்டனர். ஆடுகள் புலத்தில் மேய்ந்துகொண் டிருக்கையில், ஜேம்ஸ் தன் கத்தியினால் மரத்துண்டுகளைச் சீவி, மாதிரி யந்திரங்களைச் செய்த வண்ணமாகவே யிருப்பான். இதுவே அவன் பகற்பொழுதிற் செய்யும் வேலையாம்.

இரவிலும் அவன் அப் புலங்களிலேயே தங்கியிருப்பான். இருளடர்ந்த இரவில் அவன் வெளியே சென்று, வானத்தை நோக்கி, அங்குள்ள நட்சத்திரங்களை ஆராய்ச்சி செய்து, அரிய செய்திகளைக் கண்டறிவான். அவன் இரவிற் செல்லும்போது, ஒரு சிறு விளக்கும், மணிமாலையும் கொண்டு போவது வழக்கம்; கம்பளியினால் தன் உடலை நன்கு போர்த்துக்கொண்டு, மல்லாந்தபடியே படுத்து, மணிமாலையைக் கையிற்கொண்டு, ஒரு கிரகத்துக்கும் மற்றொரு கிரகத்துக்கும் உள்ள இடைவெளியையும், அந்தக் கிரகங்கள் செல்லும் நிலையையும் கணக்கிட்டு வருவான்.

ஜேம்ஸுக்கு எஜமானன் மிக்க அன்புடையவன்; ஜேம்ஸினிடத்து இன்பமாகப் பேசுவான்; அவன் பெயர் ஜேம்ஸ் கிளேஷன் என்பது. பெயர் ஒற்றுமையினால் அவ்விருவரும் அன்புற்று இன்புற்று இருந்தனர் போலும்! ஜேம்ஸ் கிளேஷன், ஆடு மேய்க்குஞ் சிறுவ-

னாகிய ஜேம்ஸ் என்பவனைச் சில வேளைகளில் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, அவன்வேலையைத் தானே செய்துவந்தான். இப்படிப்பட்ட செய்திகளை ஜேம்ஸ் தான் பெயர் பெற்று விளங்கிய காலத்தில் அடிக்கடி எடுத்துப் பேசி, அவனுக்கு நன்றி பாராட்டுவது வழக்கம்.

ஜேம்ஸ் பெர்கூஸன், பின்பு பலரிடத்து வேலையில் அமர்ந்தான்; அன்னார் அவனிடத்தில் அவ்வளவு அன்பு பாராட்டினவர் அல்லர்; அவனைப் பெரிதும் வருத்தியே வேலை வாங்கினர். அத்தகைய வேலையைச் செய்யுங்காலத்தும், சிறிது ஓய்வு கண்டு, ஜேம்ஸ் இடைவிடாது படித்து வந்தான்.

ஒரு காலத்தில் கடிகா யந்திரத்தின் முக்கிய அம்சங்களைப்பற்றி ஒருவர் சொல்லக் கேட்டவுடனே, அவன் அதை ஊகித்து, மரத்தினாற் கடிகாரமொன்று செய்து முடித்தான்; அஃது அவன் கைவன்மையை நன்கு விளக்கிற்று.

ஒரு சமயம் ஒரு தோட்டத்து வாயிலின் கடைச்சுவரின்மேல் இரு புறங்களிலும் இரண்டு கற்குண்டுகள் வைத்திருக்கக் கண்டான். அவற்றுள் ஒன்றைப் பூகோளமாகவும், மற்றொன்றைக் ககோளமாகவும் மனத்தில் எண்ணிக்கொண்டான். அவ் விரண்டைக் கொண்டே சூரிய கடிகாரமும் பூகோளபடமும் ஏற்படுத்திக்கொண்டு, அவற்றை அழகுபெறச் செய்து முடித்தான்.

ஜேம்ஸுக்குச் சித்திரம் வரைவதில் சிறிது திறமையுண்டு; அதில், மேலும் திறமை யடையப் பல வகையில் முயன்ருன். ஓவியப் புலவரிடஞ் சென்று தனக்கு அதனைக் கற்றுக்கொடுக்கும்படி பெரிதும் வேண்டிக்கொண்டான். அவர்கள் அனைவரும், 'ஏதேனும் கட்டணம் செலுத்தினாலன்றிக் கற்றுக்கொடுக்கமுடியாது' என்றனர். கட்டணம் செலுத்த அவன் கையிற் காசு ஏதும் இல்லையே! என்ன செய்வான்! தன் அறிவைச் செலுத்தி, ஓவியத்தொழிலை விடாது பயின்று, அதிற் பெரும் புலமை யடைந்தான். படைப்புப் பொருள்களைப் பார்த்து அவ்வாறே வரைவது அவனுக்கு ஒரு பெருஞ் செயலாகத் தோன்றவில்லை. ஆயினும், அவன் தொழில், ஓவியத் தொழில் ஒன்றே யன்று; அவன்நோக்கம் ககோள சாஸ்திரத்தின் விசாரத்திலேயே பதிந்திருந்தது; அதனால், வானத்தின் கிரகங்களைக் குறிக்கும் யந்திரங்களை முயன்று செய்துவந்தான். ககோள சாஸ்திரத்தைப்பற்றி அநேக உபந்நியாசங்கள் செய்து, அவற்றையெல்லாம் நூல்களாக எழுதி வெளியிட்டான். ககோள சம்பந்தமான ஆராய்ச்சி நேரும்போதெல்லாம், அக்காலத்தவர், ஜேம்ஸையே மத்தியஸ்தனாகக் கொள்ளுவாராயினர். அவன் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களைப் பிரஞ்சு, ஜர்மன் முதலிய பாஷைகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டனர்.

ஜேம்ஸ் கி. பி. 1210 - ஆம் வருஷத்தில் பிறந்தவன். ஐம்பத்தைந்து வருஷம் இவ்வுலகில் வாழ்ந்து, 1265 - ஆம் வருஷம் இவ்வுலக வாழ்க்கையை நீத்தான்.

எளிய குடும்பத்திற் பிறந்து, இடையர்தொழிலைச் செய்துவந்த ஜேம்ஸ் என்பவன், தன் முயற்சியினாலேயே சிறந்த புலவனானான். இவனுக்குச் சிற்பசாஸ்திரம், யந்திர சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், ககோள சாஸ்திரம் ஆகிய இந் நான்கிலும் நல்ல புலமை ஏற்பட்டிருந்தது. இவன்வரலாறு மாணாக்கர்களுக்குப் பெரும் பயனை விளைப்பதே யன்றி, அவர்களை நன்முயற்சியிலும் செலுத்தத் தக்கதாகும்.

---

6. காடுகள்

காடுகள் இரண்டு வகைப்படும்: அவை, செடியடர்ந்த காடுகள், மரமடர்ந்த காடுகள் என்பனவாம். செடியடர்ந்த காடுகளில் முட்புதர்களும், சிறு செடிகளும், சிறு மரங்களும் அடர்ந்திருக்கும். மரமடர்ந்த காடுகளில், உயரிய மரங்களும் பருமரங்களும் அடர்ந்து விளங்கும். அவற்றைக் கண்டால், மாந்தர் வியப்புக்கொண்டு, நிலைத்து நின்றுவிடுவர். அங்கே ஏதோ கடவுட்டன்மை விளங்குவது-

போற் காணும். குளிர்ந்த நிழல் மாந்தருக்கு மகிழ்வை விளைக்குமன்றோ! அதனால், அவர், 'நாம் இங்கேயே தங்கி இன்பமடைந்து அமைதியுற்று வாழலாமே!' என்றும் எண்ணுவர்.

கம்பன், காளிதாசன் முதலிய கவிஞர் இக்காடுகளில் வனதேவதைகளும், நதிதேவதைகளும் வாழ்கின்றன என வியந்து வர்ணித்துப் பாடியிருக்கின்றனர். முற்காலத்துக் கிரேக்கர் ரோமர் முதலாயினோரும், பெருங் காடுகளில் வனதேவதைகள் வசிப்பனவாகவே எண்ணியிருந்தனர். அக்காலத்தே எந்நாட்டினருக்கும் இந் நம்பிக்கையே ஏற்பட்டிருந்தது. வனங்களெல்லாம் புண்ணிய பூமிகள்; உயர்மரங்களெல்லாம் வனதேவதைகள் என்னும் எண்ணம் அவர்கள் மனத்தில் குடிகொண்டிருந்தது. இக் காலத்தும் பலர் பெருமரங்களைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றன ரன்றோ!

ஒரு காட்டில் பல்லாயிரம் மரமுஞ் செடியும் வளர்ந்து விளங்கினும், அவற்றை யெல்லாம் வகுத்துச் சில வகையில் அடக்கிவிடலாம். தேக்கமரம், அடிபருத்து உயர்ந்து வளரும்; அகன்று நீண்ட இலைகளும், குஞ்சம் குஞ்சமாகப் பருத்துத் தொங்கும் பூங்கொத்துக்களும் உடையதாய் விளங்கும். ஆலமரம் அடி பருத்துப் பல கிளைகளை யுடையதாய்ப் பரவி வளரும்; அந்தக் கிளைகளில் விழுது இறங்கி,

வேரூன்றி மரம்போலாகி, தாய்மரத்தைத் தாங்கி நிற்கும். சுமார் அரைமைல் அளவு அகன்று பரவியுள்ள ஆலமரமும் உண்டு. இவ்வாறே மற்ற மரங்களும் ஓங்கி வளர்ந்து அடர்ந்து நிற்கும்.

மரங்கள் ஒன்றின் நிழலில் மற்றொன்று நிலைத்து வளர்வதில்லை. அவை அப்படி வளர நேர்ந்தால், வளைந்து சென்று, சூரியன் ஒளியில் தனித்து நின்று வளரும். அம் மரங்களை அழகிய கொடிகள் சுற்றிச் சுற்றிப் படர்ந்து செல்லும். அவற்றுள் சில வலப்புறமாகவும், சில இடப்புறமாகவும் சுற்றிப் படரும்; சில-வகைக் கொடிகள் நிலத்தின்மேல் படர்ந்து வளர்ந்து செல்லும்.

இன்பம் தருவனவாகிய அக் காடுகளில், புலி சிங்கம் கோநாய் முதலிய கொடிய விலங்குகள் வாழ்ந்திருப்பதனால், மாந்தர் அங்கே நிலைத்து வாழ்வதற்கு இடையூறு ஏற்படுகின்றது. அத்தகைய காடுகளுக்கு இன்பம் விளைப்பவை சில; துன்பம் விளைப்பவை சில. அவற்றைப்பற்றி இங்கு ஆராய்வோம்:

துளிர்த்துத் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்கும் மரங்களை அழித்து ஒழிக்கப் பகையான உயிரினங்கள் அவ்வக்காலத்தே தோன்றுகின்றன; அவற்றுள் ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் ஈறாகப் பற்பலவான வகைகள் உண்டு. வண்டுகளும் பூச்சிகளும்

கூட்டங் கூட்டமாகக் கூடி, மரங்களை அழித்துவிடுகின்றன. அவற்றுள் பறப்பன சில, நடப்பன சில, ஊர்வன சில, மரங்களிலேயே நிலையாக நிலைத்து வாழ்வன சில.

பட்டாம்பூச்சி முதலிய சில சிற்றுயிர்கள் இலையில் முட்டையிடும்; அம்முட்டைகள் புழுக்களாகி இலைகளைத் தின்று நாசஞ் செய்யும்; சில வண்டுகள் பூவரும்புகளில் முட்டையிட, அம் முட்டை காய்க்குள் சென்று, அக் காய் கனியானவுடன் புழுவாகும்; அப்புழு வண்டாகி, அக் கனியை அறுக்கும்போது, அவ் வண்டு வெளியே வருவது மிகப் பெரிய வியப்பன்றோ! ஒரு வகை வண்டு பேரரும்பில் முட்டையிட, அவ்வரும்பு முதிர்ந்து உருண்டை வடிவமான காயாகிறது. மாந்தர், ஆனி ஆடி மாதங்களில் அக் காய்களைப் பறித்துக் கொண்டுபோகின்றனர். அந்தக் காய்க்கு உள்ளே யிருக்கும் பொடியே சாயச்சரக்கு ஆகின்றது.

இலையுதிரும் மரங்களுக்கு வசந்தப்புழு என்னும் ஜந்துவினல் பெருஞ்சேதம் உண்டாகின்றது. அப் புழு, மூன்று வருஷங்கள் பூமிக்குள்ளேயே யிருந்து, மரத்தின் சல்லி வேரைத் தின்று, அம் மரத்திற்குத் தீமை விளக்கும். பின்னர், அது பூச்சியாகி வெளிவந்து, மரத்தின் இலைகளைத் தின்று நாசஞ்செய்யும்.

மரங்களுக்கு இவ்வாறு கேடுவிளக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு விரோதிகளும் அவ்-

வப்போது தோன்றுகின்றன. அவை, பற்பல வகைப்பட்ட வண்டுகள், பறவைகள் முதலியனவாகும். வண்டுகள் ஆயிரக் கணக்காகப் புறப்பட்டு, புழுக்களைப் பற்றித்தின்று அழிக்கின்றன. எறும்புகளும் கிரிப்பிள்ளைகளும் இப் புழு பூச்சிகளுக்குக் கொடிய பகையாளிகளாகும். சில வண்டுகள், கம்பளிப் பூச்சியின் முதுகில் முட்டையிட, அம் முட்டை பொரிந்து புழுவாகி, அக் கம்பளிப் பூச்சியின் ஊனை உண்டு வளர்கிறது. இதுவும் புதுமையன்றோ!

மரத்தை அரிக்கும் புழுக்களுக்கும் பூச்சிகளுக்கும் மற்றும் பல வைரிகள் உள்ளன. ஆந்தை, பல்லி, தவளை, பாம்பு முதலிய உயிர்கள், பூச்சிகளைக் கூட்டமாக வதைத்துத் தின்கின்றன. மைனா முதலிய பறவைகளே இப் புழு பூச்சிகளைக் கருவறுக்கும் வைரிகள் என்று கூறலாம்.

பருந்து முதலிய பறவைகள், எவரும் ஏற முடியாத மலையுச்சிகளில் கூடு கட்டிக்கொண்டு வாழும்; செங்கால்நாரை இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லும்; அன்றிலும் குயிலும் இன்பமாகப் பாடும். ஆதலால், பறவைகள் இல்லாவிடின், மாந்தர்க்கு இன்பமே யில்லை என்னலாம். பறவையில்லாத பூமி பாழடையும். பறவையின் அழகு, நம் கண்ணுக்குக் காட்சி யளிக்கும்; அவற்றின் இசை, காதுக்கு இனிமை தரும். அன்றியும், அவை புழுக்களையும் பூச்சி-

களையும் அழித்து, மாந்தருக்கு மட்டில்லாத பயனை விளைக்கின்றன.


மரங்குத்தி முதலிய பறவைகள் மரப்பட்டைக்கு உள்ளிருக்கும் செல் முதலிய பூச்சிகளைத் தேடிப்பார்த்துத் தின்றுவிடும். மற்றப் பறவைகள் தின்னாத கம்பளிப் பூச்சியை, குயில் இன்பமாகத் தின்னும். சிறு பறவைகளுள் சில, தானியங்களையே தின்னும். ஊர்க்குருவி நெல்லைக் கொறித்துத் தின்று நஷ்டம் உண்டாக்குகின்றது எனக் குடியானவர் அதன்மீது குறைகூறுகின்றனர். ஆணும் பெண்ணுமான ஒருஜதை ஊர்க்குருவி, ஒரு மணிக்கு நாற்பது புழுக்களைக் கொண்டுபோய், தம் கூட்டில் சேர்க்கும். ஆகலின், ஒரு வாரத்தில் சுமார் மூவாயிரம் பூச்சிகளை அவை அழித்துவிடும். இது மாந்தர்க்கு எவ்வளவு பெரிய நன்மை என்பதை எண்ணிப் பாருங்கள்!

இதுவரையில் பூச்சிகள் முதலியவைகளால் காட்டுக்கு உண்டாகும் நன்மை தீமைகளை எடுத்து உரைத்தோம்; இனி, சாகபட்சணிகளான விலங்குகளாலும் தாவரங்களுக்குச் சேதம் உண்டு என்பதைப்பற்றிக் கூறுவோம்: சுருங்கச் சொல்லின், யானை, மான், மரை முதலிய விலங்குகளால் காடுகளுக்கு உண்டாகுந் தீமைக்கு ஓர் அளவும் உண்டோ!

வேறொரு பகையும் காட்டுக்கு உண்டு; அப் பகையால் உண்டாகும் தீமையே பெரிது.

விறகு வெட்டுவோர், வீடு கட்டுவோர், கட்டை விற்போர், மரச்சாமான் செய்வோர், சாயம் ஏற்றுவோர், வைத்தியர் முதலானவர் மரங்களை யழிக்கும் பகைவ ராவர். அன்னார், தத்தமக்கு வேண்டிய பொருள்களைமட்டும் எடுத்துக்கொண்டு, மரம் செடிகளை அழியவிடுகின்றனர். ஆயினும், அவர்களையெல்லாம் தீமைசெய்பவர்கள் என்று சொல்லுதல் கூடாது. அவர்கள் செய்யுஞ் செய்கையால் மாந்தர்க்கு நன்மையே விளைகின்றது. அன்னார், அளவு கடந்து செய்தால், நாளடைவில் காடுகளெல்லாம் அழிந்துபடும். அவ்வாறின்றி, இன்ன காரியத்திற்கு இவ்வளவுதான் அழிக்கலாம் என்னும் ஒரு நியதி இருக்கவேண்டும். அந்த நியதியை ஏற்படுத்துவதற்கே, வனபரிபாலன உத்தியோகஸ்தர்களை நமது துரைத்தனத்தார் நியமித்திருக்கின்றனர்.

மக்கள், பண்டைக்காலத்தே காடுகெடுத்து நாடாக்கி வாழ்ந்து வந்தனர். முனிவரர் உலகப் பற்றை முற்றத் துறந்து, காட்டிற் சென்று பேரின்பந் துய்ப்பா ராயினர். அக்காடுகளில் வாழும் மாந்தரை நாகரிகமற்றவர் என்று இழித்துக் கூறுகின்றோம். ஆயினும், நாகரிகமுற்ற மக்களே பெரிதும் நலிவடைகின்றனர். அமைதியான வாழ்க்கைக்கு அரணியவாசமே சாலச் சிறந்ததாகும்.



7. பூலோகத்து ஏழு அதிசயங்கள் - II

2. ஆர்ட்டிமிசியா கட்டிய ஞாபகச்சின்னம்

ஆசியா கண்டத்தின் மேற்குப் பக்கத்தில் துருக்கி தேசத்திற்கு மேற்கில் கேரியா (Caria) என்னும் நாடு ஒன்று முற்காலத்தில் விளங்கி-யிருந்தது. அதற்குத் தலைநகரம் ஹாலிக்கர்-னஸஸ் (Halicarnassus) என்னும் பட்டணமாம். முன்னொரு காலத்தில் மாஸோலஸ் (Mausolus) என்னும் மன்னன் அந்நகரிலிருந்து செங்கோல் செலுத்தி வந்தான். ஆர்ட்டிமிசியா (Artemisia) என்பவள் அவனுக்கு வாழ்க்கைத் துணைவி யாயினள். அவ் விருவரும், உயிரும் உடலும்-போலவும், மலரும் மணமும் போலவும் உள்ள-மொத்து உவந்து வாழ்ந்திருந்தனர்.

அவர்கள் அன்புற்று இன்புற்று வாழும் நாளில், மாஸோலஸ் என்னும் அம் மன்னன் இறந்துபட்டான். அது கிறிஸ்து நாதருக்கு 354 யாண்டுகளுக்கு முன்னராகும்.

தன் கண்ணேபோன்ற கணவன் இறந்து-பட்டதும், ஆர்ட்டிமிசியா பெருந் துயரங் கொண்டு, துன்பக் கடலில் ஆழ்ந்தாள். இவ்-வுலகமெல்லாம் அவளுக்குத் துன்பம் நிறைந்த வெற்றிடமாகவே தோன்றிற்று.

அவள், தன் கணவனது உடற் சாம்பலை அணுவளவும் விடாது எடுத்து, ஒரு பொற்-பெட்டகத்தில் அடைத்து வைத்திருந்தாள்;

நாள்தோறும் அந்தச் சாம்பலில் சிறிதெடுத்து ஒரு பொற் கிண்ணத்தில் இட்டு, தண்ணீர் விட்டுக் கலக்கி, அதனைப் பேரன்புடன் பருகிவந்தாள்.

அவள், தன் கணவன் நினைவை உலகில் நிலைநிறுத்தும் பொருட்டு, அக்காலத்திலிருந்த மிகச் சிறந்த சிற்பிகளைக்கொண்டு ஞாபகச் சின்னம் ஒன்று கட்டுவித்தாள். அவர்கள் அதனை அழகு பெறக் கட்டிக்கொண்டிருக்கையிலேயே, ஆர்ட்டிமிசியா அந்தக் கட்டடத்துக்குள்ளே அமர்ந்து, தன் காதலனை நினைந்து நினைந்து, மனம் உருகி, இரண்டு யாண்டுகளுக்குள் உயிர்துறந்தாள். அவளது உள்ளன்பைக் கண்ட சிற்பிகள் பெரிதும் இரங்கி, தம் சொந்தச்செலவில் அந்தச் சின்னத்தைக் கட்டி முடித்தனர். அதன் அடிவாரம் நீண்ட சதுர வடிவமானது. அதன் சுற்றளவு 411 அடி; அதன் உயரம் 130 அடி. அது முற்புறத்தில் 36 தூண்கள் வாய்ந்தது; முகப்பு வாசலுக்குப் படிகள் 24 உண்டு. அது முற்காலத்தில் மிகச் சிறப்புற்றோங்கி விளங்கினமையால், அதனைப் பூலோகத்து அதிசயங்கள் ஏழனுள் ஒன்றாக மாந்தர் மதித்திருந்தனர். அதற்கு 'மாஸோலியம்' (Mausoleum) என்று பெயர். ஆர்ட்டிமிசியாவின் அன்பே அன்பு; அவள் கொண்டிருந்த கற்பே கற்பு. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்பதற்கு இவளே இலக்கன்றோ!

3. டையானா தேவி ஆலயம்

ஆசியா கண்டத்துத் துருக்கி தேசத்தின் மேற்குப் புறத்தில் அயோனியா (Ionia) என்னும் பேர்பெற்ற நாடு ஒன்று இருந்தது. அந் நாட்டின் தலைநகர் எபேஸஸ் (Ephesus) என்னும் நகரமாம். அந்நகரத்தில் செங்கோல் செலுத்திய கோத்ரஸ் (Codrus) என்னும் மன்னனுக்கு அந்திரோக்ளஸ் (Androclus) என்பவன் ஒரே புதல்வன். அச்சிறந்த நகரம் அவனால் நிருமிக்கப்பட்டது.

எபேஸஸ் நகரின் துறைமுகம், வியாபாரம் மிகுதியாக நடைபெறத் தக்க வாய்ப்புடையது. அதனால், அந்நகரம் பெரியதோர் வியாபாரஸ்தலமாக விளங்கிற்று. யுத்தங்களாலும் பூகம்பங்களாலும் அந் நகர் அழிபட்டுப் போகவே, அதன் நிலைமை அடிக்கடி மாறுவதாயிற்று.

எபேஸஸ் நகரில் கிரேக்கரும் லத்தீனரும் டையானா தேவியைத் தம் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தனர். அதனால், அவ்வம்மைக்குச் சிறந்த கோயிலொன்று கட்டி முடித்தனர். அத் தெய்வதைக்குக் கிரேக்க பாஷையில் ஆர்ட்டிமிஸ் என்றும், லத்தின் பாஷையில் டையானா என்றும் பெயர். அவ் வம்மை, ஜூபிட்டர் (Jupiter) தேவனுக்கு லட்டோனா (Latona) தேவியின் வயிற்றில் பிறந்தவள்; அவள் தம்பிக்கு அபாலோ (Apollo) என்பது பெயர்.

டையானாதேவி ஆலயம், எபேஸஸ் நகரத்திற்கும், அதன் துறைமுகத்திற்கும் இடையே கட்டப்பட்டது. அடுத்த நாடுகளில் உள்ளவர் அனைவரும் ஒருங்குகூடி நீண்டகாலம் தொழில் செய்து, அதனைக் கட்டி முடித்தனர். அதன் நீளம் 465 அடி; அகலம் 200 அடி; அதிலுள்ள தூண்கள் 172; ஒவ்வொரு தூணும் 60 அடி உயரமுள்ளது. கிரீஸ் தேசத்துச் சிறந்த சிற்பிகளால் செய்யப்பெற்ற அரிய உருவச் சிலைகளும், சித்திரப் பதுமைகளும் அதனுள்ளே அமைக்கப்பெற்றிருந்தன.

பிலினி (Pliny) என்னும் சிறந்த இத்தாலிய ஆசிரியரது காலத்துக்கு முன்னரே ஏழெட்டு முறை அந்த ஆலயம் அழிவுற்றது. ஹெறொஸ்டிரேட்டஸ் (Herostratus) என்பவன் எபேஸஸ் நகரத்துக் குடியானவர்களுள் ஒருவன். அவன், 'யான் இத்தனை வருடங்களாக இவ்வுலகில் இருந்ததனால் என்ன பயன்! உடல் வன்மையினாலும், கல்வியறிவினாலும், செல்வப்பெருக்கினாலும் பலர் தம் புகழை இப் பூவுலகில் நிலைநாட்டி, மாண்டுபோகின்றனர்; அன்னார் இறந்துபட்டும், அவரது கீர்த்தி என்றென்றும் விளங்குகின்றதே! நாம் இறந்து பட்டபின் நம் பெயர் நிலைநிற்குமாறு என்ன காரியஞ் செய்யலாம்! நம் நகரத்தில் சிறப்புறக் கட்டியுள்ள டையானா தேவி ஆலயத்தைத் தகர்த்துப் போடுவதே தக்கது; இவ்வாலயத்தைத்

தீ வைத்து எரித்துப் போடுவேனாயின், என் பெயர் என்றென்றும் நிலைபெற்று நிற்கும்' என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, ஒருநாள் இரவு சமயம் பார்த்து, அதனைத் தீவைத்து எரித்துவிட்டான். அது கிறிஸ்துநாதருக்கு 356 வருஷங்களுக்கு முன்னராகும்.

டையானா தேவி ஆலயம் தீக்கிரையாகி, சாம்பலாய்ப் போயிற்று. மதில்களும் சில தூண்களுமே மொட்டையாய் நின்றன. நகரமாந்தர், தீயிட்டவனை அடித்துக் கொன்றுவிட்டனர். அவன் அபகீர்த்தியே யடைந்தான்.

அயோனியா நாட்டு மந்திராலோசனைச் சபையார் உடனே ஒருங்குகூடி, 'இக் கொள்ளியின் பெயரை இனி ஒருவருஞ் சொல்லக் கூடாது; இவன் பெயர் பின்னுள்ளோருக்குத் தெரியாமற் செய்யவேண்டும்' என்று தீர்மானஞ் செய்தனர். என்ன செய்தாலும் இத்தகைய கொடியவன் பெயர் எப்படி மறையும்! தேயோபாம்பஸ் (Theopompus) என்னும் கிரேக்க கவிஞர் ஒருவர் தம் நூலில், டையானா தேவி ஆலயம் இவனால் எரிக்கப்பட்டது என்று எழுதி வைத்திருப்பதனால், அக்கொள்ளியின் பெயர் எந்நாளும் இவ்வுலகத்தில் நிலவுவதாயிற்று. அவ் வாலயம் எரிக்கப்பட்ட அன்றிரவே, மகாவீரனாக விளங்கிய அலெக்ஸாந்தர் என்னும் அரச குமாரன் பிறந்தான். அஃதும் ஒரு பெரிய வியப்பன்றோ!


எபேஸஸ் நகரத்தார், அழிந்துபட்ட அவ்வாலயத்தை மிக்க சிறப்பாக மீண்டுங் கட்டி முடித்தனர்; அந் நகரத்துப் பெண்மணிகள் தம் அரிய அணிகளைக் கழற்றி, அத் திருப்பணிக்கென்று அன்புடன் கொடுத்துதவினர்.

முற்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய அந் நகரம், இப்போது சீரழிந்து பாழடைந்து கிடக்கின்றது. அச் சிற்றூருக்கு இப்போது அயசலூக் (Ayasaluk) என்று பெயர்.

8. அன்னப் பறவை

லண்டன் நகரத்துத் தேம்ஸ் நதிக் கரையில் அன்னப் பறவைகள் அமிதமாக வாழ்கின்றன. அவை அங்குள்ள மச்சங்களை அழிக்கின்றன என்று எண்ணி, பலர் அவற்றை அங்குநின்றும் துரத்த முயன்றனர். சிறிது காலத்துக்கு முன் அரிதாயிருந்த அன்னப் பறவை, இப்போது அளவிறந்தனவாகக் கூடி வாழ்வதை எவரும் காணலாம். ஒருவர், ‘அவ் வாற்றங் கரையிலுள்ள மரங்களின் இலைகளை எண்ணினாலும் எண்ணலாம், அங்கே வாழும் அன்னப் பறவைகளை எண்ண முடியாது’ என்கின்றனர்.

அன்னப் பறவைகளுக்கு நீரில் விளையும் ஒருவகைத் தானியமும், நீரோரங்களி லுள்ள



பலவகைக் கோரைகளுமே ஆகாரம். அவைகளுக்கு இன்பமான உணவு மீன்முட்டைகளே. தேம்ஸ் நதியின் கரையில் உள்ள மரக்கிளைகள் தழைத்துத் தண்ணீரில் ஆழ்ந்திருக்கும். அவ்விலைகளில் மீன் முட்டைகள் ஒட்டிக்கொண்டு தோரணம்போலத் தொங்குவதைக் கண்டு, அன்னப் பறவைகள் அகங் களித்து, அவற்றை இன்பமாக அருந்தும். ஆதலால், மீனை உண்ணும் விருப்பமுள்ள மாந்தர், அவ் வன்னங்களை அங்குநின்றும் துரத்த முயன்றனர். அப்படி ஓட்டினால் அன்னங்கள் அஞ்சி ஓடிவிடுமா!

ஓர் அன்னம், படகு தள்ளும் துடுப்பின்மேல் தன் சிறகினால் அறைந்த அறை, அதனைப் பிடித்திருந்தவன் கையை ஒரு மணிநேரம்வரையில் ஒரு தொழிலும் செய்யவொட்டாமல் வருத்திவிட்டதாம்.

அங்கில துரைத்தனத்தாரது அடையாளம் இல்லாமலும், அநுமதி இல்லாமலும் அன்னப் பறவையை எவரும் வைத்திருத்தல் கூடாது. அநுமதி பெற்று வைத்திருக்கும் பறவையை மற்றொருவன் திருடினால் பெருங்குற்றமே யாகும். அதற்கு, அக் காலத்தில் தண்டனை என்னவெனில், திருடின பறவையை நேராக நிற்கவைத்து, அதன் தலையளவான உணவை, திருடினவன், அதன் சொந்தக்காரனுக்குக் கொடுத்தல்வேண்டும். பறவை அகப்படாவிட்டாலும், திருடினது உண்மை என்று

ஏற்படுமாயின், அதுபோன்ற வேறொருபறவையின் அளவுக்கு உணவு கொடுத்தல் வேண்டும்; பூனையைத் திருடினாலும், தண்டனை அப்படிப்பட்டதாகவே யிருந்தது.

அன்னப் பறவையை முற்காலத்தில் அரசரும் செல்வருமே வளர்த்து வந்தனர். ஒரு பறவையின் விலை அக் காலத்தில் 25 ரூபாய்க்குக் குறையாதாம். அதனால், பறவைகளைக் காக்கவேண்டிய வழிவகைகளைப்பற்றி அத்தேசத்தார் ஒரு வகையான சட்டம் ஏற்படுத்தி யிருந்தனர். அதனை நடத்த வேண்டிய அதிகாரமும் சிலருக்கே உண்டு.

அன்னப் பறவைகளுக்குத் துரைத்தனத்தார் முத்திரை போடுவர்; அஃது எப்படியெனின், அவை குஞ்சுகளாக இருக்கும்போதே பிடித்து, இறக்கைகளில் முத்திரை குத்தி, புத்தகத்தில் பதிவு செய்துகொள்வர். அதனால் அன்னப் பறவைகள் இத்தனை உண்டு என்னும் கணக்கும் ஏற்பட்டுவிடும். முத்திரை யில்லாத பறவை ஒன்று அகப்படுமாயின், உடனே அதைப் பிடித்து, அதன்மேல் முத்திரை இடுவர்; அதிகாரிகள் தவிரப் பிறர் எவரும் முத்திரை இடுதல் கூடாது.

அன்னத்தின் கூடு அவ்வளவு அழகானது அன்று; வைக்கோல் புல் துரும்பு குச்சி முதலியவற்றைச் சேர்த்து, அன்னம் கூடு கட்டும். ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும்போது,

அன்னம் அக் கூடுகளைத் தூக்கிக்கொண்டு அப்புறம் போகும். மரங்கள் அடர்ந்திராத வெளிகளில் அது கூடு கட்டுகின்றது. கூட்டின்மேல் வெயில் நன்றாக உறைக்கவேண்டும். 'நமக்கு யாதொரு தீங்கும் நேராமல் காக்கத்தக்க காவலர் இருக்க, நம் கூட்டை எங்கே கட்டினால்தான் என்ன!' என்று எண்ணியே அப் பறவை அப்படிக் கட்டுகின்றது போலும்.

அன்னப்பேடு ஒரு முறைக்கு ஐந்துக்குக் குறையாமல், எட்டுக்கு மேற்படாமல் முட்டையிடும். அம் முட்டை பசுமை கலந்த வெண்ணிறமாய், நாலங்குல நீளமுள்ளதாய் இருக்கும். சுமார் 1½ மாதத்திற்குப் பின், அம் முட்டைக்குள்ள பசுமை நிறம் மாறி, வெண்மை நிறம் உண்டாகும்.

பெடையன்னம், அடைகாக்குங்காலத்தில், வேறொன்றும் அருகில் நாடவொட்டாமல் ஆண்அன்னம் காவல் காத்துக்கொண் டிருக்கும். குஞ்சுபொரித்துச் சிலநாள் ஆயினபிறகு, அக் குஞ்சு வெளுத்துக் காட்டும். வெண்மை நிறம் வந்ததென்று கண்டால், தாய் தன் குஞ்சுகளைத் தன்னண்டை வைத்திராது. இளமை முதல் வருந்தி பாடுபட்டால்தான், பிற்காலத்தில் தனக்கு இரை தேடிக்கொள்ளத் திறமையுண்டாகும் என்று எண்ணியே, அஃது அவ்வாறு துரத்தி விடுகின்றது போலும்! பின்னர் இளவன்னம் இரை தேடப் புறப்படும். அது வெகு-

தூரம் பறந்து சென்று, ஆராய்ந்து பார்த்து, இரை கிடைக்கத்தக்க இடத்தை நாடி, அங்கே தங்கி வாழும்.

அன்னப் பறவை நெடுங்காலம் உயிரோடு வாழ்ந்திருக்கும். 300 யாண்டுகள் வாழ்ந்திருந்த அன்னமும் உண்டாம். அங்கில தேசத்தார் 50, 60 யாண்டுகளுக்கு அன்னப் பறவைகளைக் குத்தகைக்கு விடுகின்றனர். சாதாரணமாக அன்னப் பறவைகள் 70, 80 யாண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கின்றன.

இங்கிலந்து தேசத்தை ஆண்டுகொண்டிருந்த அரசியார் ஒருவர், அன்னப் பறவை ஒன்றை அன்பாக வளர்த்துவந்தனர்; அஃது அரசவையில் வந்து அமர்ந்திருப்பதில் மிக்க விருப்பம் உள்ளது. அதன் தைரியமும் வீரமும் பெரிதும் வியக்கத்தக்கனவாம். ஒரு பொருளை ஆற்று வெள்ளத்தில் எறிந்துவிட்டால், அஃது அதனை எடுத்துக்கொண்டு வாராமல் திரும்பாதாம்; அத்தகைய திறமை, சிறந்த நாய்களுக்கும் இல்லை என்னலாம். அந்த அன்னம் ஒரு வாத்துப் படையை எதிர்த்துப் போர் செய்து இறந்துபட்டதாம்.

ஓர் அன்னம் நாள்தோறும் தன் எஜமானன் வீட்டுக்குக் காலந்தப்பாமல் ஒழுங்காக வந்துகொண்டிருந்தது. ஒருநாள் அது வரவில்லை. காரணம் என்னவென்று ஆராய்ந்ததில், அஃது, ஒருவன் தெருவில் வைத்துக்

கொண்டிருந்த தின்பண்டத்தை அடித்துப் பிடுங்கிக் கொண்டுபோய், ஓர் ஆற்றண்டை அமர்ந்து தின்றுகொண்டு, அங்கேயே தங்கியிருந்ததாம்.

அன்னப் பறவைகள் முன்னெச்சரிக்கை உள்ளவை. ஓர் அன்னப்பேடு, தன் கூட்டில் 5, 6 முட்டையிட்டு, குஞ்சு பொரித்து வாழ்ந்திருந்தது. அது, தன் அண்டை அயலிலுள்ள அன்னங்களிடத்தில் மிக்க நட்புப் பாராட்டி வந்தது. மற்ற அன்னங்கள் அதனை வியந்து மெச்சிக் கொண்டன. ஒரு நாள் அது, புல் பூண்டு செத்தைகளை விரைவிற் கொண்டுபோய், தன் கூட்டை முன் இருந்ததைவிட 2½ அடி உயரத்தில் கட்டிற்று. அன்றிரவு பெருமழை பெய்யவே, மற்ற அன்னக் கூடுகளுக்குப் பெருஞ்சேதம் நேரிட, அந்த அன்னப் பறவை தன் கூட்டில் குஞ்சுகளுடன் இன்பமாக நிலைத்து நின்றுகொண்டிருந்தது. இப்படிப்பட்ட அறிவு மாந்தருக்கும் இல்லையே!

அன்னம், நீரில் வாழும் பறவை; வாத்தின் இனத்தைச் சேர்ந்தது. இக் காலத்தே கருநிற அன்னங்களும் உள்ளன.

‘நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’

எனப் பெரியோர் கூறுவர்.

9. எது!

காட்டை யழித்து, கரம்பைத் திருத்திக் கண்ணுக்கு இனிமையாகச் செய்வது எது?

நிலத்தை உழுது, கொழுமையாக்கிப் பயிர் செய்து, விளைவை யறுத்து உணவுக்குப் பயன்படும்படி செய்வது எது?

பூமியிலிருந்து கருங்கல்லை வெட்டியெடுத்து, அரசர்களுக்கான அழகிய அரண்மனைகளையும், கோயில்களில் உயர்ந்து விளங்குங் கோபுரங்களையும் கட்டுவது எது?

செங்கல்லைச் சூளையிலிட்டுச் சுட்டெடுத்து, வீடுகளையும் மெத்தைகளையும் மாடங்களையும் மாளிகைகளையும் கட்டுவது எது?

பூமியிற் புதைந்து கிடக்கும் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்களை எடுத்து, நாணயங்களாகவும் நகைகளாகவும் யந்திரம் முதலிய கருவிகளாகவும் செய்வது எது?

இரும்பைப் புகைக்கப்ப லாக்கி, கடலின் வழியாகவும் பெருங்கடலின் வழியாகவும் புயலுக்கு அஞ்சாமல் பல திசைகளிலும் செலுத்தி, ஆங்காங்கே கிடைக்கும் பொருள்களைப் பிறநாடுகளுக்குக் கொண்டுபோகச் செய்வது எது?

மணலாலும் மண்ணாலும் உண்டாகக் கூடிய கண்ணாடிகளைச் செய்து, அவற்றைத் தக்கவாறு ஒன்றோடொன்று சேர்த்துப் பார்வைக்கு அழகியதாகச் செய்வது எது?

மிகச் சிறிய அணுவளவு பொருளையும் மிகப் பெரிய மலையளவாகக் காட்டவும், தூரத்திலுள்ள பொருள்களை, அருகிலுள்ள பொருள்போலத் தோன்றச் செய்யவும் வல்லது எது?

ஏதுக்கும் பயனில்லையென்று எறியத்தக்க பொருள்களை, மிகவும் உயர்ந்த பொருள்களாக மாற்றி, மாந்தர்க்குப் பயன்படச் செய்வது எது?

வெள்ளங்கொண்டு அதிக வேகமாக ஓடும் யாறுகளை அளவிட்டு, அதன்மேல் பாலங்கள் கட்டவும், தொங்குபாலங்கள் அமைக்கவும், மலையைத் தொளைதது அதன் ஊடே செல்ல வழியை உண்டாக்கவும் வல்லது எது?

பள்ளம் மேடாகவும், மேடு பள்ளமாகவும், கடல் நிலமாகவும், நிலம் கடலாகவும் மாற்ற வல்ல ஆற்றலுள்ளது எது?

நிலத்திலும் மலையிலும் இரும்புக் கம்பிகளைப் பதித்து, வாயுவேகம் போல வண்டித்தொடர் செல்லும்படி செய்வது எது?

இரும்புக் கம்பிகளும் இல்லாமலேயே மூலை முடுக்குக்களிலும் செல்லத்தக்க மோட்டார் வண்டிகளை உண்டாக்குவது எது?

பகலிலும் இரவிலும் மழையிலும் காற்றிலும் ஒரே விதமாக, உயரத்திற் பறக்கும் வானவூர்திகளை உண்டாக்குவது எது?

அச்செழுத்துக்களை உண்டாக்கி அடுக்கி, யந்திரத்தில் கொடுத்து நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான பிரதிகளை வெளியிடுவது எது?

ஒருவன் ஓரிடத்தில் நின்று பேச, அதைப் பல காவதத்துக்கு அப்பாலுள்ளவன், எதிரில் நின்று கேட்பது போலக் கேட்கச் செய்வது எது?

ஆயிரக் கணக்கான மைலுக்கும் அப்பாலுள்ள ஒருவன் பாட, அப் பாடலை அவன் பாடியவாறே அருகிலிருந்து கேட்பது போலக் கேட்கச் செய்வது எது?

ஓரிடத்தில் உண்டாகும் ஒலி, உலகெங்கும் பரவி, ஆங்காங்கே இருப்பவருக்குச் செய்திகளைத் தெரிவிப்பது எது?


ஒருவன் ஒரு பாட்டுப்பாட, அதை அவ்வாறே ஒரு கருவியிற் பிடித்துக் கொண்டு, நமக்கு விருப்பமான போதெல்லாம் அதனைக் கேட்டு மகிழச் செய்வது எது?

இவற்றிற்கும் இவை போல்வன பலவற்றிற்கும் காரணமா யிருப்பது எது எனின், உழைப்பு என்னும் சிறந்த முயற்சி ஒன்றே யாகும்.

உழைப்பு எவ்வளவு சிறந்தது! இதனாலன்றோ, நம் நாட்டில்,

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்'

என்னும் முதுமொழி நிலவுவதாயிற்று.



10. இஸ்பெஹான் நகரம்

இஸ்பெஹான் நகரம் பாரசிக தேசத்தின் தலைமைப் பட்டணம். பாரசீக தேசம், பெரும்பாலும் மேட்டுப் பாங்கானது; குன்றுகளும், மலைகளும், மணல் வெளிகளும் ஆங்காங்கே நிறைந்து, நிலம் பயனற்றதா யிருப்பினும், நீர்வளம் நிலவளம் நிறையப்பெற்றுச் செழித்த பள்ளத்தாக்குக்களும் பற்பல இடங்களில் பரவி யுள்ளன; அவற்றுள், இஸ்பெஹான் நகரமும் ஒன்று. அஃது அழகும் செழிப்பும் வாய்ந்தது.

இஸ்பெஹான் நகரத்தைச் சேய்மையினின்று பார்க்கும்பொழுது, மரங்கள் அடர்ந்த தோப்புக்களும் தோட்டங்களும், அந்நகரத்தின் காட்சியைப் பெரிதும் விளங்கச் செய்கின்றன. அண்மையிற் சென்றால், அதன் அழகிய கட்டடங்கள் அனைத்தும் சிதைந்து சீரழிந்து, சோலைகளால் மறைபட்டு மங்கித் தோன்றும்.

அரண்மனை முதலிய பழைய கட்டடங்கள் அனைத்தும் பாழடைந்திருப்பினும், அவற்றின் அழகும் சிறப்பும் இன்னும் அழிந்துபோகவில்லை. வெள்ளிக்கதவுகள் அமைந்த வித்தியாசாலைகளும், வனப்பு மிக்க வாராவதிகளும், கண்ணைக் கவரும் கடைத்தெருக்களும், பலரும் இறங்கி முழுகத்தக்க படித்துறைகள் அமைந்த நீர்நிலைகளும் ஆங்காங்கே அழகாக அமைந்துள்ளன.

அந் நகரில் ஜிண்டெஹ் ரூட் (Jindeh-rud) என்னும் யாறு பெரிதும் பெயர்பெற்றது. அந்த யாற்றின் இருகரையிலும் அடர்ந்துள்ள மரங்கள், ஞாயிற்றின் வெப்பம் நிலத்திற் பரவாவண்ணம் நிழல்செய்கின்றன. 'மந்தியும் அறியா மரம் பயில் அடுக்கம்' என்பது அவ்விடத்திற்கே தகும். பூஞ்செடிகள் மலர் நிறைந்து, குமுகுமு என்று நறுமணம் வீசும்; பழமரங்கள் பழுத்துப் பல விடத்தும் பரவிநிற்கும். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த இஸ்பெஹான் நகரத்தின் இனிய காட்சியை என்னென்று எடுத்துக் கூறுவது!

பாரசீக தேசத்தில் வாழும் மாந்தர் அறிவும், ஆற்றலும், சுறுசுறுப்பும் வாய்ந்தவர். ஆயினும், அவர்களுடைய உணவும் உடையும் இல்லமும் அத்துணைச் சிறப்புடையன அல்ல. அவர்கள் தம் கருமமே கண்ணாக இருப்பர்; தம் வழக்குக்களில் தைரியமாகப் பேசுவர்; எப்போதும் சிரிப்பும், கெலிப்பும், கேளிக்கையுமாகவே காலங்கழிப்பர்.

நகரவாசிகளான மக்களுக்கு நடை உடை பாவனைகள் வேறு; அன்னார் சிறந்த உடைகள் உடுத்துவர்; உயர்ந்த உணவுகள் உண்பர்; நாகரிகம் பெற்று நன்கு வாழ்வர். பெரிய நகரங்களில் பாடசாலைகளும், கல்லூரிகளும் உண்டு. அவ்விடத்தில் வாழ்பவர், எழுதவும் படிக்கவும் மிக்க வல்லவர்களாகவே இருப்பர்.

ஆயினும், ஏழை மக்களுக்குக் கல்விப் பயிற்சி என்பதே கிடையாது.

இஸ்பெஹான் நகரத்து மக்கள் கைத்தொழிலில் தேர்ச்சிபெற்றவர்கள். அந் நகரம், அயல் நாட்டு வர்த்தகர்கள் போக்கு வரவு செய்ய ஏற்ற இடமாகும். அவ்விடத்து வர்த்தகர்களுள் பலர், தங்களுக்குள்ள ஆஸ்தியை உயிர் போயினும் வெளியிடார். 'உடையது விளம்பேல்' என்னும் மூதுரை இவர்களுக்கே தகும். செல்வத்தைத் தேடுவதில் நோக்கமேயன்றி அதைச் செலவழிப்பதில் எண்ணமே கிடையாது; வயது ஏற ஏற அந்த எண்ணமும் ஏறிக்கொண்டே வரும். அதனை விளக்க ஒரு கதை கூறுவோம்:

இஸ்பெஹான் நகரத்தில் செல்வனை ஒருவன் இருந்தான். அவன் உண்பதும் செய்யான், உடுப்பதும் செய்யான்; உலர்ந்துபோன பழைய ரொட்டியைத் தவிர மற்றொன்றையும் அவன் தின்றறியான்; தன் சிறுவனையும் அவ்வாறே பழக்கிவந்தான்.

ஒருநாள் தன் உயிர்த்தோழன் ஒருவன், பாலாடைக் கட்டியைப் பற்றிப் பலபடப் புகழ்ந்து பேசியதனால், அச் செல்வன் அதை வாங்க எண்ணங்கொண்டான். நீடு நினைந்து, ஒருவாறு துணிந்து, சிறிது பாலாடைக்கட்டியை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான்; வந்து உட்கார்ந்து, 'என்ன காரியஞ் செய்தோம்!

வீணே பொருளைச் செலவழித்தோமே! நம்மைப்போல் மூடன் ஒருவனும் இந் நகரத்தில் இரானே!' எனத் தன்னை நொந்துகொண்டு, பாலாடைக் கட்டியை ஒரு பரணியிற்போட்டு அடைத்துவிட்டு, 'இஃது இவ்வாறே இருக்கட்டும், பின்னர்ப் பார்ப்போம்' என்று ஒருவாறு திருப்தி யடைந்தான். அவன், தன் புதல்வனைக் கூப்பிட்டு, 'பிள்ளாய், பாலாடைக் கட்டியை இந்தப் பரணியில் வைத்திருக்கிறேன். இதனைத் திறவாதே; ரொட்டியைப் பரணியின்மேல் ஒற்றிக்கொண்டு தின்றுவிடு' என்று கட்டளையிட்டான்.

ஒருநாள் அவ்வர்த்தகன் வெளியேசென்று வீட்டுக்கு வர நேரமாயிற்று. அப் பிள்ளைக்கு மிக்க பசியா யிருந்தமையால், கதவைத் திறந்து பரணியை எடுக்க முயன்றான். கதவு பூட்டப்பட்டிருந்ததனால், அதைத் திறக்க முடியவில்லை. பிள்ளை அது கண்டு ரொட்டியைக் கதவில் தேய்த்துத் தேய்த்துத் தின்றுகொண்டிருந்தான். இதற்குள் தந்தை வந்து, அவன் செய்ததைக் கண்டு, 'பிள்ளாய், அங்கே என்ன செய்கிறாய்?' என்று கேட்க, அவன், 'வேளை ஆய்விட்டது; பசி பொறுக்கமுடியவில்லை. தாம் திறவுகோலைக் கையோடு கொண்டுபோய்விட்டதனால், கதவைத் திறந்து, பரணியை எடுக்க இயலவில்லை; அதனால், ரொட்டியைக் கதவில் தேய்த்துத் தின்கிறேன்' என்று கூறினன்.

அது, தன்னை இளைஞன் இழித்துக் கூறுதற்குச் சொன்ன குறிப்புரை யென்பதை அறிந்துகொண்டு, தந்தை அதை வெளிக்குக் காட்டாமல், 'உனக்கென்ன இவ்வளவு அவசரம்! சிறிது நேரம் பசியோடிருக்கக் கூடாதோ?' என்று அவனை முனிந்து கூறி, 'உனக்குப் பாலாடைக் கட்டியின்மேல் இவ்வளவு பேரவா இருந்தால், நீ எப்படிச் செல்வன் ஆவாய்; எப்படிச் சீர் அடைவாய்!' என்று வெறுத்து உரைத்தான். இத்தகைய கதைகள் இன்னும் எத்தனையோ அங்கு வழங்குகின்றன.

11. வேலையும் கூலியும்

'வேலைவாங்கிக்கொண்டு கூலிகொடு' என்பது ஒரு பழமொழி. வேலைக்கு இடாகக்கொடுப்பது கூலி. விலை கொடுத்துப் பொருள்வாங்குவதுபோல, கூலிகொடுத்து வேலை வாங்குவது வழக்கம். பொருளின் விலை, காலத்துக்குத் தக்கபடி நயமாகவும் நஷ்டமாகவும் மாறுவது போலவே, வேலையும் கூலியும் மாறுபடும்.

வேலை என்னும் பொருளைக் கொடுப்பவர் சிலராகவும், வாங்குவோர் பலராகவும் இருந்தால், வாங்குவோருக்கு நஷ்டம் உண்டாகும். வேலை என்னும் பொருளைக் கொடுப்போர்

பலராகவும், வாங்குவோர் சிலராகவும் இருந்தால், வாங்குவோருக்கு மிக்க நயமே உண்டாகுமன்றோ ?

முதலாளிகள் இருவருக்கு வேலைக்காரர் ஒவ்வொருவர் வேண்டியிருக்கையில் வேலைக்காரர் அறுவர் அவர்களிடம் வருவாராயின், கூலி குறைந்துபோம். அப்படியின்றி, தலைவர் அறுவர்க்கு அறுவர் வேலைக்காரர் வேண்டியிருக்க, வேலைக்காரர் இருவரே இருந்தால், கூலி உயரும்.

உணவுப் பொருள்கள் நயமாகக் கிடைத்தால், வேலைக்காரர் குறைந்த கூலிக்கு வருவர் என்றும், உணவுப் பொருள் அரிதாயிருந்தால், வேலைக்காரர் குறைந்த கூலிக்கு வரமாட்டார் என்றும் சிலர் எண்ணுகின்றனர். உணவுப் பொருள்கள் அரியனவா யிருந்தால், வேலைக்காரருக்குக் கூலி மிகுதியாக அகப்படுவது உண்மையேயாயினும், பொருள்களின் விலைக்கும் வேலையின் கூலிக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்னலாம். வேலை என்னும் பொருளின் இருப்பு இவ்வளவு, செலவு இவ்வளவு என்பதன்மேல் கூலி தீர்மானம் ஆகின்றது. உணவுப் பொருள்கள் அருமையாய் இருக்குங் காலத்தில், வேலை கொள்பவர்களாகிய முதலாளிகள், தம் வேலைக்காரர் சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். அஃது உண்மையே, நியாயமே.

ஒரு முதலாளி, சொற்ப சம்பளத்துக்கு வர மனமுள்ள வேலைக்காரரை வேண்டா என்று தள்ளிவிட்டு, அதிக சம்பளம் கொடுத்து வேலைக்காரரை அமைத்துக் கொள்ளுவானேயாயின், மற்ற முதலாளிகள், தள்ளப்பட்ட வேலைக்காரரை அமர்த்திக்கொண்டு, அதிக லாபம் அடைவார்கள். அவன் தள்ளிவிடும் வேலைக்காரர்களை ஒருவரும் வைத்துக்கொள்ளாவிடில், அவ்வேலைக்காரர் பிழைப்பின்றிப் பட்டினிகிடக்க நேருமன்றோ?

வேலைக்காரருக்கு, தங்களுக்குள் சிலருக்கு மாத்திரமே வேலை அகப்படவேண்டும் என்னும் பொறாமையும் இல்லை; தங்கள் முதலாளிகள் நஷ்டம் அடையட்டும் என்னும் கெட்ட எண்ணமும் இல்லை. ஆதலால், அவ்வக் காலத்துக்குத் தக்கபடி கிடைக்குஞ் சம்பளத்தைக் கொண்டே வேலைக்காரர்கள் திருப்தியடைதல் வேண்டும். பொருள்களை விற்கிறவர்களுக்கும் வாங்குகிறவர்களுக்கும் உள்ள சம்பந்தமே வேலை செய்கிறவர்களுக்கும், வேலை கொள்ளுகிறவர்களுக்கும் உள்ள சம்பந்தமாகும்.

எல்லா வேலைக்கும் ஒரே அளவான கூலி இல்லை என்பது அனைவரும் அறிந்த செய்தியே. கூலியில் ஏற்றத் தாழ்வு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள. வேலையின் சுலபத்திற்கும் கஷ்டத்திற்கும், கௌரவத்திற்கும் அகௌரவத்திற்கும் தக்கபடி கூலி ஏற்படும்.

எந்தக் காலத்தும் கிடைக்கத்தக்க வேலை சில உள; மூட்டை சுமக்கிறவனுக்கு வருஷம் முழுவதும் வேலை அகப்படும். கொல்லத்துக்-காரனுக்கோ மழைக் காலங்களில் வேலை கிடைக்காது; மற்றக் காலங்களில் எவரேனும் கூப்பிட்டால்மட்டுமே வேலையுண்டு. அதனால், அவனுக்குப் பல நாள் வருவாய் கிடைக்காது; வேலை செய்யும் நாளில் கிடைக்குங் கூலியைக்-கொண்டே, வேலையில்லாத நாளுக்கும் அவன் ஈடு செய்துகொள்ளவேண்டும். அதுபற்றியே கொல்லத்துக்காரனுக்குக் கூலி அதிகமாகவும், மூட்டை சுமப்பவனுக்குக் கூலி குறைவாகவும் கொடுக்கிறோம்.

பொன், வெள்ளி முதலிய உலோகங்களைக்-கொண்டு, வேலை செய்யும் பொன்வினைஞர், வெள்ளிவினைஞர் முதலிய வேலைக்காரர் நம்-பிக்கை உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஆதலால், அவர்கள் செய்யுந் தொழிலுக்குக் கூலி அதிகம். இப்படியே வேலையின் ஏற்றத் தாழ்ச்சிக்கு ஏற்றபடி கூலியும் வேறுபடும்.


முதலாளிகள் வேலைக்காரரை அன்பாக நடத்தவேண்டும்; வேலைக்காரர் உண்மையாக உழைக்கவேண்டும். ஆனால், முதலாளிகள் தம் வேலைக்காரரிடத்துக் கடுமையா யிருப்பதும், வேலைக்காரர் முதலாளியை ஏமாற்றுவதுமே இப்பொழுது வழக்கமா யிருக்கிறது.

12. பூலோகத்து ஏழு அதிசயங்கள் - III

4. பாபிலோன் நகரத்துக் கோட்டை மதிலும் ஆகாயப் பூந்தோட்டமும்

பண்டைக்காலத்தில் பாபிலோன் நகரம், பாபிலோன் நாட்டிற்குச் சிறந்த தலைநகராய் விளங்கி யிருந்தது. கிறிஸ்துநாதர் இவ்வுலகில் அவதாரஞ் செய்வதற்கு 2000 யாண்டுகளுக்கு முன்னர் அந் நகரத்தை நிருமித்தவன் நிம்ரோத் (Nimrod) என்னும் நிருபனுவன். பின்னர், அது பீலெஸர் (Pileser) என்பவனுல் பெருமைபெற்றது. அவனுக்குப் பின்பு, செமிரமிஸ் (Semiramis) என்னும் அரசி அதனை அழகுபெறச் செய்தனள். முடிவில் நெபுகத்நெஸார் (Nebuchadnezzar) என்னும் மன்னன் ஒருவன் அதனை விசாலமான நகரமாக்கிப் பெரிதும் அழகுறச் செய்தான். ஆதலால், அஃது அக்காலத்தே அதிசயப் பொருள்களுள் ஒன்ருகி விளங்கலாயிற்று.

பாபிலோன் நகரம், நீர் நில வளங்கள் நிரம்பி விளங்கிய நிலப்பகுதியின் இடையில் அமைந்திருந்தது. இயூப்பிரதீஸ் (Euphrates) என்னும் நதி, வடக்கினின்றும் தெற்குமுகமாக, நகரின் நடுவில் ஓடி, அதை இரண்டு பிரிவுகளாகச் செய்தது. அப்பிரிவுகளில் கீழ்ப்புறத்திலுள்ளது பூர்வநகரம்; மேற்புறத்திலுள்ளது நூதன நகரம். அந் நகரம் முழுவதும் ஒரே




பாபிலோன் நகரத்து ஆகாயப் பூங்தோட்டம்

சுற்றுமதிலுக்குள் அடங்கி யிருந்தது; அது சதுர வடிவமானது.

ஹெரோடாட்டஸ் (Herodotus) என்னும் சரித்திராசிரியர், அந் நகரத்தின் வரலாற்றை முதலில் எழுதி வைத்தனர். அவர் எழுதியபடி பாபிலோன் நகரம், பக்கத்துக்குப் பக்கம் 15 மைல் நீளமும், 60 மைல் சுற்றளவும் உள்ளதாய் விளங்கிற்று.

பாபிலோன் நகரத்துக் கோட்டைக்கு, பக்கத்துக்கு 25 ஆக, நான்கு பக்கத்துக்கும் 100 வாயில்கள் அமைந்திருந்தன. அவ் வாயி-லின் நிலைகளும் கதவுகளும் வெண்கலத்தால் இயன்றவையாம். அவ் வாயில்களுக்கு இடை-யிடையே யுள்ள மதிற்பாகங்களில் ஒவ்வொன்-றின்மேல் பப்பத்தடி உயரமுள்ள மும்மூன்று கோபுரங்கள் கட்டப்பெற்றிருந்தன. கிழக்கு மேற்காக அமைந்துள்ள மதிலின் 25 வாயில்-களுக்கு நேர் நேராக 25 வீதிகளும், வடக்குத் தெற்காக அமைந்துள்ள மதிலின் 25 வாயில்-களுக்கு நேர்நேராக 25 வீதிகளும் ஏற்பட்-டிருந்தன. ஆக, தெருக்களின் தொகை 50 ஆகும். ஒவ்வொரு தெருவும் 15 மைல் நீளமும், 150 அடி அகலமும் உள்ளது. கிழக்கு மேற்கு வீதிகள் இருபத்தைந்தும், தெற்கு வடக்கு வீதிகள் இருபத்தைந்துக்குக் குறுக்கேசென்று, நகரமுழுதும் சிறு சிறு சதுரங்களாகச் செய்து-விட்டமையால், 676 சிறு சதுரங்கள் அந்நகரத்-

பாபிலோன் நகரத்துத் தரைப் படம்



ஒரு பக்கத்து மதிற்சுவர் 15 மைல், அதற்கு அடி	79200
ஒரு பாதைக்கு 150 அடியாக, 25 பாதைக்கு அடி	3750
போக நிகரம்	75450
ஒருவரியில் 26 சதுரங்கள் : ஒவ்வொரு சதுரத்துக்கும் பக்கத்துக்கு அடி	2902

துக்குள் ஏற்பட்டிருந்தன. ஒவ்வொரு சிறு-சதுரத்தின் நாலுபக்கங்களிலும் தெருமுகமாக வீடுகளும், நடுவில் வட்ட வடிவமான தோட்டமும் அமைந்திருந்தன.

மேற்கண்ட சரித்திராசிரியர் எழுதியபடி, பாபிலோன் நகரத்து மதிலின் கனம் 87 அடி; அதன் உயரம் 350 அடி. அந்த மதிலின்மேல், 6 தேர்கள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாகச் சேர்ந்து செல்லக்கூடுமாம். அம் மதில் பச்சைவெட்டுக் கற்களால் கட்டப்பெற் றிருந்தது. சுண்ணத்துக்குப் பதிலாக ஒரு வகையான நிலப்பிசினை உபயோகித்தனர். அம் மதிலைச் சுற்றி அகழியும் தோண்டி, அவ் வகழியின் மண்ணைக்கொண்டே கல் அறுத்து, 60 மைல் சுற்றளவும், 87 அடி அகலமும், 350 அடி உயரமும் உள்ள அம் மதிற்சுவரைக் கட்டினராம். அக் கிடங்கின் ஆழந்தான் என்னே!

கோட்டைமதிலுக்கு ஒப்ப, வேறு இரண்டு மதில்கள் நதியின் இரு கரையிலும் கட்டி, அவற்றிலும் 55 வாயில்களைக் கோட்டைவாயில்களுக்கு எதிரெதிராக ஏற்படுத்தியிருந்தனர். அவ் வாயிலின் நிலைகளும், கதவுகளும் வெண்கலத்தாற் செய்யப்பட்டவையாம்.

அந் நகரத்தின் இடையே இயூப்பிரதீஸ் நதியின் குறுக்காக 60 அடி அகலமுள்ள பாலம் ஒன்று நிருமித்திருந்தனர். அந்தப் பாலத்தின் இறுதிப் பக்கங்களில் அழகிய

இரண்டு அரண்மனைகளைச் சிறப்புறக்கட்டினர். பெல் (Bel) என்னும் தேவனுக்கான கோயில், மேற்கண்ட சதுரங்களுள் ஒன்றில் அடங்கி, கீழ்ப்புறத்து அரண்மனைக்கு அருகில் விளங்கிற்று. ஓர் அரண்மனையிலிருந்து மற்றோர் அரண்மனைக்குச் செல்ல நதிக்குக்கீழே நிலவறைப் பாதை ஒன்று உண்டாக்கப்பட்டிருந்தது. கீழ்ப்புறத்து அரண்மனை, ஒன்றுக்குள் ஒன்றாகக் கட்டப்பட்ட மூன்று மதில்களையுடையது. மேற்புறத்து அரண்மனை, கீழ்ப்புறத்து அரண்மனையைக் காட்டிலும் நான்கு மடங்கு விசாலமுள்ளதாய், எட்டுமைல் சுற்றளவுள்ளதாய் விளங்கிற்று.

நெபுகத்நெஸார் என்னும் அரசர் பெருமான், மேதியா (Media) நாட்டு அஸ்தியேஜஸ் (Astyages) என்னும் அரசனுக்குப் புதல்வியாகிய அமித்திஸ் (Amytis) என்னும் அழகியை மணந்தபின், அவளுக்கு இன்பம் உண்டாக்க, மேற்புறத்து அரண்மனையின் பக்கத்தில் மிக்க வனப்பு வாய்ந்த ஆகாயப் பூந்தோட்டம் ஒன்று அமைக்கச் செய்தான். அப் பூந்தோட்டம், பக்கத்திற்குப் பக்கம் 400 அடி நீளமுள்ள சதுரவடிவம் வாய்ந்தது. அத் தோட்டத்தின் நடுவில் ஒன்றன்மீது ஒன்றாக மாடங்கள், கோட்டை மதிலின் உயரத்துக்கு ஒப்பாகக் கட்டப்பட்டிருந்தன. ஓர் உப்பரிகையிலிருந்து மற்றொன்றிற்கு ஏறப் பத்தடி அகலமுள்ள

படிக்கட்டுகள் அடுக்கடுக்காக அமைந்திருந்தன. உப்பரிகைகளைத் தாங்குதற்கு வில்வளைவான கோணங்கள் ஒன்றன்மே லொன்றாகக் கட்டப்பட்டிருந்தன. அவ் வில்வளைவுகளைத் தாங்குதற்கு 22 அடி அகலமுள்ள மதில்கள் நாற்புறமும் ஏற்பட்டிருந்தது.

உப்பரிகைகளின் உன்னதமான உயர்நிலத்தில், தோட்டத்திற்கு வேண்டிய மண்ணைத் தாங்கவும், அதற்குப் பாய்ச்சுந் தண்ணீர் கீழே இறங்காமல் தங்கவும் கற்களால் தளவரிசை செய்யப் பெற்றிருந்தது. அதில் பாவப் பெற்ற கற்களில் ஒவ்வொன்றின் நீளம் 16 அடி; அகலம் 4 அடி. அந்தத் தளவரிசைக்குமேல் பிசின்தைலம் பூசிய நாணல்கள் படைபடையாக நெருக்கி அழுத்தப்பெற் றிருந்தன. அதற்கு மேல் செங்கற்கள் ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு வரிசைகள் அழுத்தமாகப் பதிக்கப்பெற் றிருந்தன. அதற்குமேல் இயத்தகடுகளைப் பாவி, அத் தகட்டின்மேல், பெருமரங்கள் இடையூறின்றி வேரிறங்கும்படி, மண்ணும் எருவும் நிரம்பக் கொட்டியிருந்தனர். உப்பரிகையின் ஒரு புறத்தில், தோட்டத்திற்குப் பாய்ச்ச வேண்டிய தண்ணீரைக் கட்டிவைக்க ஒரு சிறு குளம் உண்டாக்கப்பட்டிருந்தது. அந்தக் குளத்துக்கு வேண்டிய தண்ணீர், யந்திரங்களைக் கொண்டு நதியினின்றும் இறைத்து அதனுள் சேர்க்கப்பட்டது.

அந்தநீர், வாய்க்கால்களின் வழியே தோட்டமெங்கும் போய்ப் பாயும்; அத் தோட்டத்தில் அழகிய பூஞ்செடிகளும், பலவிதப் பழமரங்களும், பற்பலவான படர்கொடிகளும் வைத்து வளர்க்கப்பட் டிருந்தன.

இவ்வகையான காட்சிகளை யுடையதாயிருந்ததனால், அந்நகரம் முற்காலத்தில் பூலோகத்து அதிசயங்களுள் ஒன்றாக மதிக்கப்பட்டிருந்தது.

---

13. நமது நாட்டுக் கைத்தொழில்

‘முயற்சி திருவினையாக்கும்’ என்னும் முதுமொழி ஒருபோதும் பொய்யாகாது. செய்து முடிக்க முடியா என்று தோன்றுஞ் செயல்களெல்லாம், முயன்று முடித்தால் முடிந்துவிடும். எந்நாட்டினர் முயற்சியைக் கைவிடாது, காரியங்களைச் செய்து வருகின்றனரோ, அம் முயற்சிக்கேற்பவே, அன்னார் கீர்த்தியும் அடைவர். அதனால், ‘முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்’ என்னும் பழமொழி பிறந்திருக்கின்றது.

முற்காலத்தில் கிரீஸ், ஸ்பார்ட்டா (Sparta) முதலிய தேசங்களில் வாழ்ந்தவர் பெருமுயற்சியுடையவரா யிருந்தனர். ஸ்விஸ் (Swiss) தேசத்தார், ஏதுக்கும் உதவாத மலைநாட்டில் வாழ்ந்துகொண்டு, குடியரசை மேற்கொண்டு, அயல்

நாட்டரசர் தம்மை அசைக்கா வண்ணம், தம் நாட்டைப் பாதுகாத்து வருகின்றனர். டென்மார்க் (Denmark), பெல்ஜியம் (Belgium) முதலிய தேசத்தவர்களும், கடலின் நீர்மட்டத்திற்குத் தாழ்ந்த இடத்தில் வாழ்ந்துகொண் டிருந்தும், அன்னார் அணைகள் கட்டி, கடல்நீரினால் தம் நாட்டிற்கு இடையூறு நேராதபடி தம்மைக் காத்துக்கொண்டு, நன்முயற்சி செய்து, தக்கவாறு பயிர்த் தொழில் நடத்திவருகின்றனர்; அன்றியும், கடலில் யாத்திரை செய்வதில் முதன்மை யானவர்கள் என்றும் பேரெடுத்து, ஆப்பிரிக்கா, ஆசியா கண்டங்களில் ஆங்காங்கே சிற்சில நாடுகளைக் கைப்பற்றி, ஆண்டு வருகின்றனர்.

ஒரு நாட்டில் இயற்கையான செல்வம் அமைந்திருப்பது முயற்சிக்கு இடையூறாகும் என்பர் சிலர். அதற்கு உதாரணம் வேண்டுமானால், வேறு யாண்டும் போகாமல், நமது நாட்டிலேயே அதனைக் காணலாம். இப் பெரிய உலகத்தில், இந்தியா தேசம் இயற்கை வளங்களெல்லாம் இனிது அமையப்பெற்றது என்னலாம். அஃதாவது, இந்தியா, இவ்வுலகின் சாரமெல்லாம் திரண்டு ஓர் உருவமானது என்பதாம்.

இவ்வுலகத்தில் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள சீதோஷ்ணங்களெல்லாம் இந்தியாவில் உண்டு. ஆல்ப்ஸ் (Alps) மலைகளின் பனியையும், துருவங்களிலுள்ள குளிரையும் இமயமலையில்

காணலாமே! ஆப்பிரிக்காவில் உள்ள சகாரா (Sahara) என்னும் பாலைநிலத்திற்குப் பதிலாக, இந்தியாவில் அஜ்மீர் (Ajmere) என்னும் நாட்டில் ஒரு பாலைநிலம் உண்டு. அந்தந்த நாடுகளில் விளையும் மரவகைகள் இந்தியாவில் விளைகின்றன. உருளைக் கிழங்கு, தேயிலை, காப்பிக்கொட்டை முதலிய பிறநாட்டுப் பயிர்வகைகளும் இந்தியாவில் பயிராகின்றன. இவற்றிற்கெல்லாம் இயைந்த நீர்வளமும் நிலவளமும் அமைந்திருப்பதனால், நம் நாட்டவர்க்கு முயற்சி குறைந்துவிட்டது என்று சிலர் கூறுகின்றனர்.

ஏழைக் குடிகள், நிலத்தை உழுது, எருவிட்டுக் கொழுமையாக்கி, விதை விதைத்து, நீர்பாய்ச்சி, களையெடுத்துப் பாதுகாத்துப் பாடுபட்டு உழைக்கின்றார்கள். ஆயினும், இன்னும் சிறிது முயற்சி செய்வாராயின், இரண்டத்தனை மாசூல் ஏற்படும் என்பது அவர்களுக்குத் தெரியவில்லையே! செல்வமுள்ள சீமான்களுக்காவது இச் செய்தி மனத்திற் படுவதில்லையே! பட்டாலும், அம் முயற்சியைக் கைக்கொள்ள அவர்களுக்கு மனமில்லையே!

அரிசியும், மற்ற உணவுப் பொருள்களும் போதுமான அளவு இக்காலத்திற் கிடைப்பது அரிதாகின்றது. சுமார் நாற்பது யாண்டுகளுக்கு முன்னர், ஓரணாவுக்கு ஒருபடி அரிசி கிடைத்தது. ஜனத்தொகை அதிகப்படவும்

பயிர்த்தொழில்மட்டும் ஒரே நிலையில் இருப்பதனால் தானியவிலை ஏறிவிட்டது. இத் தேசத்தில் விளையும் நெல் போதாது. யாண்டுதோறும் வெளிநாடுகளிலிருந்து பெருவாரியான சரக்கு இறக்குமதி யாகின்றது. கரம்புநிலங்களைத் திருத்திச் சாகுபடி செய்தும், சாகுபடியாகும் நிலங்களை மேலும் சீர்திருத்தியும் விளைவை விருத்திசெய்தல் வேண்டும்.

இவ்வகையில் ஏதுந் தெரியாத ஏழைக்குடிகளை இழித்துக் கூறுவது என்னே! பெருவாரியான நிலங்களுக்குத் தலைவர்களாகும் தனவான்களையே குறை கூறுதல் வேண்டும். செல்வர்கள் முயன்று, சிறந்த வழி வகைகளைக் காட்டுவாராயின், ஏழைமக்களும் பின்தொடர்வார்கள் என்பதில் சிறிதும் ஐயம் உண்டோ?

நமது நாட்டில் கைத்தொழில்கள் அடியோடு இல்லை யெனச் சொல்வதற் கில்லை. ஆங்காங்கே கைத்தொழில்கள் நிலைபெற்று வருகின்றன. பம்பாய் நகரத்தில் பஞ்சு வர்த்தகம் ஏராளமாக நடைபெற்று வருகின்றது. இவ்வர்த்தகம் தொடங்கிய காலத்தில், இங்கிலந்திலுள்ள மான்செஸ்டர் (Manchestor) நகரத்துக்குப் பஞ்சை ஏற்றுமதி செய்து வந்தனர். அப் பஞ்சு முழுதும், இங்கிலந்தில் துணியாகித் திரும்பவும் நம் நாட்டிற்கே வருவது கண்டு, துணி நெய்யும் தொழிலையும் இங்கேயே நடத்துவது நலமென்று கொண்டு, அதனைச்

செய்யத் தீர்மானித்தனர். அதற்காகச் சுமார் இருநூறு லட்சம் ரூபாய் முதற்பணம் வைத்து, வேலை தொடங்கினர்; அதனால் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் இலாபம் கிடைத்தது.

வங்காள நாட்டில் மற்றொரு கைத்தொழில் விருத்தியாகின்றது. அங்கே சணற்செடியைப் பயிராக்கி, நார் உரித்து, நாரினால் கோணிப்பைகள் செய்து, பல இடங்களுக்கும் அனுப்புகின்றனர். இவ்வாறே மற்ற இடங்களிலும் முயன்று செய்வார்களாயின், நம் நாட்டுக்குப் பெரும் பயன் உண்டாகும். எத்தேசத்து விளைபொருள்களும் எளிதில் விளையத்தக்க பூசாரம் நம் நாட்டில் உண்டென்பது எவரும் அறிந்ததே யன்றோ? எடுத்து மாளாத செல்வப் பொருள் நம்மைச் சுற்றிலும் புதையுண்டிருக்கிறதே! முதற்பணம் போட்டு முயற்சி செய்வோமாயின், அப் புதைபொருளெல்லாம் நமக்கு எளிதிற் கிட்டுமன்றோ?

நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களுள் முதன்மையானது அரிசியாகும். நெல் விளைவே அரிசிக்கு ஆதாரம்; இங்கு விளையும் நெல்லில் பெரும் பகுதி, பிற நாடுகளுக்குப் போய்விடுவதனால், நமக்குப் பஞ்சம் உண்டாகிறதென்று சிலர் முறையிடுகின்றனர். அக்காரணம் அவ்வளவு உண்மையானது அன்று; ஒன்றுக்கு இரண்டாக விளையுங்காலத்திலும் ஏராளமான நெல் அல்லது அரிசி, பர்மா(Burma)

முதலிய தேசங்களிலிருந்து இங்கு இறக்குமதியாகின்றது. இது நம் நாட்டுக்குப் பெருங் குறைவன்றோ? செல்வர்களோ, தம் செல்வம் அனைத்தையும் . பெட்டியிலிட்டுப் பூட்டிவைப்பதே சிறந்த செயலென்று கருதுகின்றனர்; அல்லது பாங்கியிற் (Bank) போட்டு, அதனால் வரும் சொற்ப வட்டியைக்கொண்டு வாழ்வதே இன்பமான வாழ்வென்று எண்ணுகின்றனர். செல்வர்கள் இப்படிக் கருதுவார்களாயின், ஏழைமக்களின் கதி என்னாவது!

பயிர்த் தொழில் நடத்துவதில் மற்றொரு குறையும் உண்டு. பயிர்த் தொழிலுக்குப் பயன் படும் கால்நடைகளின் கதி பெரிதும் இரங்கத் தக்க தாகும். 'ஆடு மாடுகள் மேயப் பசும்புற்றரை அருகில் இல்லையே! கன்று காலிகளை மேய்க்கக் காடுகள் இல்லையே! என்ன செய்வது!' என்பர் சிலர். கால் நடைகளை நாள்தோறும் குளிப்பாட்டி, தூய்மையான தொழுவங்களிற் கட்டி, ஏற்ற உணவு வைத்தால் அவை பருத்து வளருமன்றோ!

கைத்தொழில்களிலும் குறைகள் உண்டு. கந்தைத்துணி, தேங்காய்நார், மூங்கில் முதலிய பொருள்கள் குப்பையிற் போகின்றனவே; அவை யனைத்தையும் காகிதம் செய்யப் பயன்படுத்தினால், எவ்வளவு இலாபம் ஏற்படும்.

14. ராஜா ராம் மோஹன ராய்

ராஜா ராம் மோஹன ராய் என்பவர், இந்துஸ்தானத்தில் வர்த்தமானபுரம் (Baradvan) ஜில்லாவில் ராதாநகரத்தில் 1774 - ஆம் யாண்டில் பிறந்தவர். இவர் அந்தணர் மரபினர். இவருடைய பாட்டனர், மூர்ஷதாபாத்தில் அரசு செலுத்திய முகலாயரின்கீழ் உத்யோகம் செய்திருந்து, ஆண்டே காலமாயினர்.



அதன்பின்னர், மோஹன ராயின் தந்தையாராகிய ராமகாந்த ராய் என்பவர், மூர்ஷதாபாத்தில் சிறிது காலம் இருந்து, அவ்விடம் விட்டு, தமது ஊராகிய ராதாநகரம் வந்து சேர்ந்தார்.

ராம் மோஹன ராய், சிறு வயதிலேயே தம் தந்தையாரிடம் பாரசிக பாஷையைக் கற்றுத் தேர்ந்தார்; பின்னர், பாட்னவுக்குச் சென்று, அங்கே அரபி பாஷையைக் கற்கத் தொடங்கி, அதிலும் சிறந்த புலமை பெற்று, தம் ஆசிரியர், கிரீக் பாஷையிலிருந்து அரபி

பாஷையில் மொழிபெயர்த்து வைத்திருந்த க்ஷேத்திரகணிதம் முதலிய நூல்களையும் கற்றுணர்ந்தார். அதனுல் அவருக்கு நுண்ணறிவு மிகுவதாயிற்று. எந்தப் பாஷையிலாயினும், எவ்வளவு கடுமையான விஷயமாயினும், அதனை எளிதில் உய்த்துணரும் வன்மை அவருக்கு எளிதில் ஏற்பட்டது.

அதன் பின்னர், அவர் காசியம்பதிக்குச் சென்று, அங்கு ஆரியபாஷையைப் பயின்று, தருக்கம், வியாகரணம் முதலிய நூல்களையும் கற்றுணர்ந்தார். கற்ளுேர், அவரைக் 'கல்விக் களஞ்சியம்' எனப் புகழ்ந்து கூறுவாராயினர். பெரும் புலவராய்த் திகழ்ந்த மோஹன ராய், அதன்பின் தம் ஊரை யடைந்தனர்.

மோஹன ராய், தெய்வபக்தி வாய்ந்தவர்; நாடோறும் பகவத் கீதையைப் பாராயணஞ் செய்வர்; மதசித்தாந்த நூல்களையும் ஆராய்ந்து, அவற்றிலுள்ள உண்மைகளை நுணுகி அறிவர். இவ்வாறிருக்கையில், தந்தைக்கும் மகனுக்கும் மதசம்பந்தமான சிற்சில விவாதங்கள் நேரவே, மோஹன ராய் அவ்வூரி லிருக்க மனமின்றி, வேறு பல நாடுகளுக்குச் சென்று, அங்கங்கே வழங்கும் பாஷைகளைப் பயின்றுவந்தார்.

அவர் இமயமலையின் வடபாலுள்ள திபெத் நகரத்திற்குச் சென்று, அங்கே பரவியுள்ள புத்த சமயத்தின் நூல்களைக் கற்றுணர்ந்து, அச் சமயத்தின் உண்மைகளையும் அறிந்தார்.

சிறிது காலத்திற்குப்பின் அவர் இந்தியாவுக்கு வர, தந்தை மோஹனராயைத் தம் ஊருக்கு வரும்படி அழைத்தனர்; அவரும் வீடுவந்து சேர்ந்தனர். பின்னர், அவர் அங்கே ஆங்கில பாஷையைக் கற்கத் தொடங்கி, அதில் சிறந்த புலமையை அடைந்தவராயினர்.

1804 - ஆம் வருடத்தில், அவர்தம் தந்தையார் காலஞ்சென்றனர்; சகோதரர்களும் சிறிது காலத்தின்பின் உயர்கதி யடைந்தனர்.

பிறகு, மோஹனராய், இஸ்த் இந்தியா கம்பெனியாரிடம் (East India Company) உத்தியோகத்தில் அமர்ந்தனர். 1815-ஆம் வருடத்தில் கல்கத்தாவுக்குச் சென்று, அங்கிருந்த பண்டிதர் பலரைச் சேர்த்து, அவர்களோடு மதவிஷய மாகவும், சாஸ்திரவிஷய மாகவும் பிரசங்கம் செய்துவந்தார். அன்றியும், ஸம்ஸ்கிருதத்திலிருந்து, வேதாந்த விஷயங்களை வங்காளி பாஷையிலும், இந்துஸ்தானி பாஷையிலும் மொழிபெயர்த்து, அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

பெண்டிர் உடன்கட்டை ஏறுவது தகாது என்று, வினவிடையாக அவர் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். அதனைப் பார்த்து, 1825 - ஆம் வருடத்தில் கவர்னர் ஜனரலாக வந்த வில்லியம் பெண்டிங் பிரபு (Lord William Benting), பெண்டிர் உடன் கட்டை யேறுதல் கூடாது என்று ஒரு சட்டம் ஏற்படுத்தினர். இவரது புலமையை,

அயர்லந்து தேசத்தின் ஒரு பகுதிக்குத் தலைவரான துரைமகனார் ஒருவர் கேள்வி யுற்று, இவருக்குக் கடிதம் எழுதி, இவரோடு நண்பு பாராட்டிப் பெருமகிழ் வடைந்தனர்.

பின்னர், டில்லி பாதுஷா தம் வியவகாரங்களைக் குறித்து, லண்டன் (London) நகருக்குச் சென்று, பார்லிமெண்ட் (Parliament) சபையில் வாதிக்கவேண்டும் என்று மோஹனராய்க்கு அதிகார பத்திரம் கொடுக்க, அதை அவர் பெற்றுக்கொண்டு, 1831 - ஆம் வருடம் இங்கிலந்துக்குச் சென்றனர். அங்கிருந்த புலவர் பலர், மோஹனராய் சகலகலா பண்டிதரா யிருந்த திறமையைக் கண்டறிந்து, அவரை மரியாதையுடன் வரவேற்று, அன்பு பாராட்டி உபசரித்தனர்.

மோஹன ராய், தாம் மேற்கொண்டு சென்ற செயல்களெல்லாம் நிறைவேறிய பின்னர், ஐரோப்பாவிலுள்ள பற்பல நாடுகளையும் சுற்றிப்பார்த்து, பல பண்டிதர்களையும் பிரபுக்களையும் கண்டு பேசி, மீண்டும் இங்கிலந்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

டாக்டர் கார்பெண்டர் (Dr. Carpenter) என்னும் புலவர், மோஹனராயைத் தம் ஊராகிய பிரிஸ்டல் (Bristol) நகருக்கு வரவழைத்தார். அவரும் அங்கே சென்றிருந்தனர்; அங்குக் காய்ச்சல் கண்டு, தம் 60 - ஆம் வயதாகிய 1833 - ஆம் வருடம் அவர் தேகவியோக மாயினார்.

அவரது உடல், பிரிஸ்டல் நகரில், 'அர்நால்ட்' (Arnold) என்னும் நந்தவனத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

ராஜா ராம் மோஹன ராய்க்கு உற்ற நண்பராகிய துவாரநாத் தாகூர், அவருடைய ஞாபகச்சின்னமாகப் பெரிய சமாதி யொன்று அங்கே கட்டி வைத்தார்.


ராஜாராம்காலத்திற்குப்பின், அவருடைய தாயார் முதலியோர் தம் ஊரைவிட்டு, ஜகந்நாதம் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்து, அங்கேயே காலங்கழித்துக் கதியடைந்தனர்.

ராஜா ராம் மோஹன ராய் செய்த சீர்திருத்தங்கள்:

1. கடவுள் ஒருவரே உண்டு என்னும் கொள்கையை மேற்கொண்ட பிரம சமாஜ மதத்தை நிறுவியது.
2. விக்கிரக ஆராதனை கூடாது என்னுங் கொள்கையைப் பரவச் செய்தது.
3. ஜாதிபேதம் இல்லை; சகலரும் சமானர் என்று சாதித்துப் பேசியது
4. பெண்டிர் உடன்கட்டை யேறுதல் என்னுந் தீயவழக்கத்தை ஒழித்தது.
5. இந்துமதம், மகம்மதியமதம், கிறிஸ்து-மதம், பௌத்தமதம் முதலிய மதங்களின் உண்மைகளை ஒருசேர அமைத்து, ஒரே கொள்கையை உண்டாக்கியது முதலியனவாம்.

மோஹன ராயின் சமாதிச் சிலையில், அடியிற் கண்ட கருத்துள்ள வரிகள் எழுதப்பட்டுள்ளன :

'ராஜா ராம் மோஹன ராயின் தூய உடல், இதன் கீழ் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. இவர், "கடவுள் ஒருவரே" என்னும் உறுதியான கோட்பாடு உடை-யவர்; தெய்வ பக்தியிலேயே தம் வாழ்நாளைக் கழித்தவர்; கடவு-ளருளால் பிறப்பிலேயே பேரறிவு படைத்தவர்; இளமைப் பருவத்-திலேயே பற்பல பாஷைகளைக் கற்றுத் தேர்ந்து, பண்டிதர் எனப் பட்டம் பெற்றவர்; இந்து தேசத்து ஜனங்களுக்குப் பற்பல நன்மைகள் உண்டாக்க வேண்டும் என்று பல வழிகளிலும் பாடுபட்டவர். இந்தியாவில் பிறந்து வளர்ந்த இவர், கடைசியில் இங்கிலாந்தில் தேகவியோக மாயினார்.'


MEDITERRANEAN SEA
Morocco
Algeria
Sahara
P. Sudon
Berbera
Timbuktu
Niger

15. சகாரா என்னும் பாலைநிலம்

நீரும் நிழலும் அற்ற பரந்த மணல்வெளிக்குப் பாலைநிலம் என்று பெயர். தமிழ் நூல்களில், மலையும் காடும் தம் இயல்பு திரிந்து மாறிய இடத்தைப் பாலைநிலம் என்று புலவர் கூறுவர். இவ்வுலகத்தி லுள்ள பெரிய பாலைநிலங்களுள் சகாரா என்பதும் ஒன்று. இது, ஆப்பிரிக்காக் கண்டத்தின் வடக்கிலுள்ள ஒரு பெரிய மணல்வெளி யாகும். இது, மேற்கில் அட்லான்டிக் சமுத்திரம் முதல், கிழக்கில் அரபிக்கடல் வரையில் பரவியிருக்கின்றது. இதையே இவ்வுலகில் மிகப் பெரிய பாலைநிலம் என்னலாம்.

மங்கோபார்க் (Mongopark) முதலிய அறிஞர்கள், பூகோள சாஸ்திர விசாரணைக்காக அவ்விடத்தைப் போய்ப் பார்த்து, புஸ்தகம் எழுதியிருக்கின்றனர். பலர் போய் அதனைப் பார்த்திருப்பினும், மங்கோபார்க் என்பவரே அதனை முற்றும் சுற்றிப் பார்த்த பேரறிஞராவர். அவர் எழுதிய நூலினால் பல செய்திகள் தெரியவருகின்றன.

ஆப்பிரிக்கருடைய ஜாதி வேறுபாடுகளும், பாஷைகளும், தன்மைகளும், நடை உடை பாவனைகளும், மதமும் இன்னவை யென்று அவ்வறிஞர் அறிந்து எழுதி யிருக்கின்றனர். மற்றும் அங்கே நடைபெற்று வரும் வர்த்தகம், தொழில் முதலியவற்றையும் விவரித்துக் காட்டி-

யிருக்கின்றனர். அங்குள்ள மரவகைகள், உயிர்ப் பொருள்கள், நிலவளம் முதலியவற்றைப் பற்றியும் அவர் எழுதாது விடவில்லை.

ஆப்பிரிக்காக் கண்டம் நாகரிகமில்லாத நாடுகள் நிறைந்தது என்று பலர் கூறுவர். அஃது அவ்வளவு உண்மையானது அன்று. சிற்சில இடங்களில் மாந்தர்க்குக் கல்விப் பயிற்சியும் உண்டு.

சகாராவிற்கும், சௌதானம் (Soudan) என்னும் நகருக்கும் இடையே திம்பக்தூ (Timbuctu) என்னும் நகரம் ஒன்று உண்டு; அது வியாபாரத்தில் சிறந்தது; அங்கிருந்து பல நகரங்களுக்குச் செல்ல வழிகள் உண்டு. அதன் வடக்கில் நைகெர் (Niger) என்னும் நதி பாய்கின்றது. அதனால் தரைவழியாகவும், நீர்வழியாகவும் வியாபாரம் நடத்தப் போதிய சாதனம் ஏற்பட்டுள்ளது. அந் நகரை, அந் நாட்டினர் பரிசுத்தமான திவ்விய க்ஷேத்திரம் என்று பாராட்டுகின்றனர். அயல்நாட்டவர் அங்கே போவதாயிருந்தால், வர்த்தம் மேலும் மேலும் விருத்தியாகும்; நாகரிகமும் பெருகும்.

சௌதானத்தில் ஐரோப்பியர் சென்று வியாபாரம் செய்கின்றனர். இங்கிலந்திலிருந்து யாண்டுதோறும், மூன்று கோடி ரூபாய்க்கு அதிகமான விலையுள்ள பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. ஐரோப்பிய வர்த்தகர், சரக்கை ஆப்பிரிக்காவின் வடக்கில் உள்ள பார்பரி

(Barbary) தேசத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பர்; அவற்றை ஒட்டகங்களின்மீது ஏற்றி, அத்லாஸ் (Atlas) என்னும் மலையைக் கடந்து, சகாரா வழியே திம்பக்தூவுக்கும், சௌதானத்துக்கும் அனுப்புவர். ஆனால், அவ் வழியில் ஜனங்களுக்கும் ஒட்டகங்களுக்கும் அருந்தத் தண்ணீர் கிடைக்காமையால், அடிக்கடி உயிர்ச் சேதம் உண்டாகின்றது. அதனால், வர்த்தகர் சரக்குக்களை ஒன்று சேர்த்து, ஆயிரக்கணக்கான ஒட்டகங்களின்மேல் ஏற்றிக்கொண்டு குடும்பத்துடன் பிரயாணஞ்செய்வர். அவர்கள், கோழி, குருவி, புறா, நாய், பூனை, ஆடு முதலியவற்றையும் ஒட்டைகளின்மீது ஏற்றிக்கொண்டு, மொராகோ (Morocco) முதலிய நகரங்களிலிருந்து நைகெர் நதியின் கரைக்குச் செல்லுவர்.

சௌதானத்துக்குச் செல்ல மற்றொரு வழியும் உண்டு. ஐரோப்பியர், அட்லான்டிக் சமுத்திரத்தின் வழியாக ஆப்பிரிக்காவின் மேற்குப் புறத்தை யடைந்து, தரை வழியாகச் செல்லுவர். சகாரா வழியாய்ச் செல்வதைக் காட்டிலும் இது சமீபமானதே. ஆயினும், இவ் வழி முழுவதும் கொள்ளைக்காரர்களால் அபாயம் நேரிடுவ துண்டு. அன்றியும், காட்டுவிலங்குகளின் உபத்திரவமும் உண்டாகும். ஆதலால், இவ்வழி பயன்படுவ தில்லை.

இனி, வேறு வழி தேடவேண்டும்: சகாரா பாலைநிலத்தில் ஆங்காங்கே நீரும் நிழலும்

புற்றரையும் உண்டு. அத்தகைய இடங்களில் பத்து லக்ஷத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அந்த வழியாகச் சென்றால் ஒருவாறு அனுகூலமாக இருக்கும்.

சகாராவுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையே அல்ஜீரியா (Algeria) என்னும் மாகாணம் ஒன்றுண்டு. அதனைப் பிரான்ஸியர் அளந்து பார்த்தபோது, அது மேட்டுப் பாங்கான நிலம் என்றும், சகாரா பள்ளத்தாக்கான நிலம் என்றும் கண்டறிந்தனர். அஃது உண்மையாயின், பண்டைக் காலத்தில் மத்திய தரைக் கடல், அல்ஜீரியா நாட்டின் வழியாகச் சகாராவுக்குச் சென்றிருக்க வேண்டும் என்பது திண்ணம்; சகாராவும் கடலாகவே இருந்திருக்க வேண்டும். அல்ஜீரியா தேசத்தின் வழியாகத் தண்ணீர் சென்ற வாய்க்கால் தூர்ந்து போகவே, சகாரா பாலைநிலமாக மாறிப் போயிற்று; மறுபடியும் வாய்க்கால் வெட்டி வழியுண்டாக்கினால், மத்திய தரைக் கடலின் நீர் உள்ளே செல்ல, சகாரா முன் போலவே குடாக்கடல் ஆகிவிடும். பிரான்சு துரைத்தனத்தார் ஏராளமான பொருளைச் செலவுசெய்து அதனை முடிக்கவேண்டும் என்று முயன்றனர். செலவுக்கு எண்பது இலட்சம் ரூபாய் வேண்டியிருந்ததனால், அம் முயற்சியைக் கைவிட்டனர். அந்தக் காரியம் முடிவுபெறுமோ என்னும் ஐயமும் அவர்க்கு உண்டாயிற்று.

அங்கிலேயர் ஒருவர் வேறுகூறுகின்றனர்: 'சகாராவில் மத்திய தரைக்கடல் செல்லவில்லை. அட்லான்டிக் சமுத்திரம், வடமேற்கு வழியாகப் பாய்ந்துகொண் டிருந்தது; அவ்வழி தூர்ந்துபோகவே, சகாரா பாலைநிலமாயிற்று' என்பதாம். அவர் எண்ணியபடியே, பெல்டா நதியின் முகத்துவாரமுதல், திம்பக்தூ வரையில் சுமார் 50 மைலுக்குக் கடல் பெருகியிருக்கவேண்டும்; அப் பரப்பு, பள்ளத்தாக்காகவே காண்கிறது. அன்றியும், அட்லான்டிக் சமுத்திரத்தில் கிடைக்கும் கல்வகைகளும் சிப்பிகளும் அங்குங் கிடைக்கின்றன. கடலுப்பும் பூமியில் படிந்திருக்கின்றது. பெல்டா நதியின் முகத்துவாரத்தில் உள்ள மணல்மேட்டை எடுத்துவிட்டால், சமுத்திரஜலம் பள்ளத்தாக்கில் ஓடிப்பாயும். ஆனால், சுற்றிலும் மேட்டுநிலத்தில் அமைந்துள்ள சுமார் 30 நகரங்களை அழிக்க நேரிடும்.

பள்ளத்தாக்கில் நீர் பாய, அது கடலாக மாறினால், வர்த்தகத்திற்கு வசதியான வழி ஏற்படும். கப்பல்கள் திம்பக்தூவுக்கு அருகிற் செல்லும். சௌதானத்திலிருந்து — பருத்தி, தானியங்கள், மர எண்ணெய், பிசின், காப்பிக்கொட்டை, யானைத் தந்தம் முதலிய அரும் பொருள்கள் பலவற்றை வாரிக்கொண்டு வந்து, பெரும்பயன் அடையலாமே!



16. பூலோகத்து ஏழு அதிசயங்கள் - IV

ரோட்ஸ் (Rhodes) நகரத்துத் தாமிரச் சிலை

பண்டைக் காலத்தே உருவச் சிலை செய்வதில் எகிப்தியரும், கிரேக்கரும் சிறந்த திறமை வாய்ந்தவர்களாயிருந்தனர். ஆயினும், இந்தியர் அவர்களுக்குப் பின்வாங்கினவர் அல்லர்.

ரோட்ஸ் தீவுக்குத் தலைநகராகிய ரோட்ஸ் நகரத்தில் தாமிரச்சிலை யொன்று நிலைநிறுத்தப்பட்டது. ரோட்ஸ் என்னுந் தீவு, மத்தியதரைக் கடலில் கிரேத் (Crete) தீவுக்கும், ஸைப்ரஸ் (Cyprus) தீவுக்கும் இடையில், ஆசிய துருக்கித் தேசத்துத் தென் கடற்கரைக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ளது. அதன் நீளம் 36 - மைல்; அகலம் 14 - மைல்.

ஒரு காலத்தே ரோட்ஸ் தீவினர் கிரேக்கரோடு ஒற்றுமை யுற்று வாழ்ந்திருந்தனர்; பின்னர், அவர்களை விட்டுப் பிரிந்து, எகிப்து தேசத்து அரசனாகிய தோலமி சோத்தேர் (Ptolemy Soter) என்னும் மன்னனோடு சேர்ந்துகொண்டனர். அப்போது, கிரீஸ் தேசத்தைச் சார்ந்த மஸிதோனியா (Macedonia) என்னும் நாட்டை யாண்ட தெமிட்ரியஸ் (Demetrius) என்னும் அரசன், சேனைகளைத் திரட்டிக்கொண்டு சென்று, ரோட்ஸ் நகரைச் சூழ்ந்துகொண்டான். கொள்ளவே, எகிப்து தேசத்து அரசனான தோலமி சோத்தேர் என்பவன், தன்

சேனையோடு போந்து, ரோட்ஸ் தீவினருக்குத் துணைநின்றான். தெமிட்ரியஸ் என்னும் பகையரசன், எதிரிகளின் ஆற்றலுக்கு அஞ்சித் தோற்று ஓடினான். அதனால், ரோட்ஸ் தீவினர், கிரீஸ் தேசத்து அரசனுக்கு ஒரு மரியாதை செய்ய மனங்கொண்டனர். அஃது என்னையெனின், ஒரு தாமிரச்சிலை வார்த்து, அதனை நிலையாக நிறுத்துவதாகும்.

அந்த ஞாபகச் சின்னத்தைச் சூரியனைக் குறித்துச் செய்யத் தீர்மானித்தனர். அச் சிலையை வார்க்க, கேரஸ் (Chares) என்னும் சிறந்த சிற்பியை நியமித்தனர். கேரஸ் அந்தச் சிலையைத் திருத்தமாக வார்க்க முயன்று, செய்துவரும்பொழுது, அவனிடம் அவ்வூரார் ஒப்பித்திருந்த பொருள் அனைத்தும் செலவாய்விட்டது. அது கண்டு, அவன் பெரிதும் மனங்கலங்கி, நான்றுகொண்டு, உயிர் துறந்தான்.

அதன்பின், கேரஸ் என்பவனோடு வேலை செய்துவந்த லிஸிப்பஸ் (Lysippus) என்பவன் அதனை முயன்று முடித்தான். அது முற்றுப்பெற 12 யாண்டுகள் சென்றன. அப் பெருஞ் சிலையை முடித்து, ரோட்ஸ் நகரத்தில் குறித்த இடத்தில் நிறுத்தினான். அச் சிலையின் உயரம் 120-அடி. அதன் கைப்பெருவிரல் சிலர்கூடிக் கையோடு கையைக்கோத்து அணைத்துக்கொள்ளக்கூடிய பருமன் உடையது; கைவிரல்களில் ஒவ்வொன்றும் ஓர் ஆள் நீளம் உள்ளது.

அச் சிலையின் கால்களை, ரோட்ஸ் நகரத்துத் துறைமுகத்தின் இரு புறங்களிலும் இருந்த கல்மலைகள் இரண்டின்மேல் அமைத்து நிறுவினர். அத் துறைக்குள் செல்லும் கப்பல்கள் அனைத்தும், அச்சிலையின் கால்களுக்கிடையே செல்லவேண்டும். அச் சிலை, நிறுத்தப்பெற்ற 60 யாண்டுகளுக்குப் பின்னர், பூகம்பத்தின் அதிர்ச்சியினால், அது முழந்தாள் ஒடிந்து கீழே விழுந்துவிட்டது. கி. பி. 684 - ஆம் வருஷம் சரசேனர் (Syracuse) அத் தீவுக்குப் படையெடுத்துப் போய், அதனைக் கைப்பற்றிய பிறகு, அத் தாமிரச்சிலையைக் கண்டங் கண்டமாகத் துண்டித்து, யூதவர்த்தகன் ஒருவனுக்கு அவற்றை விற்று விட்டனர். அவ் வியாபாரி தாமிரத் துண்டங்களை 900 ஒட்டகங்களின் மீது ஏற்றிக்கொண்டு போயினனாம்! இத் தகைய பெருஞ் சிலையை உலகத்திலுள்ள அற்புதமான பொருள்களுள் ஒன்றாக மதித்திருந்தனர் என்பது ஒரு வியப்போ!

6. ஜூபிட்டர் ஒலம்பியஸ்

கிரேக்கர்கள் வணங்கும் பல தெய்வங்களுள் ஜூபிட்டர் தேவன் சிறந்தவன். கிரேக்கர்களுக்குச் சிறந்த மலை ஒலிம்பியஸ் என்பது. அம் மலையில் வீற்றிருப்பவன் ஜூபிட்டர் தேவனாதலால், அவனுக்கு 'ஜூபிட்டர் ஒலிம்பியஸ்' என்பது பெயர்.

கிரீஸ் தேசத்தின் அத்தேனை (Athens) புரியில், பிதியஸ் (Pytheas) என்னும் சிறந்த சிற்பி ஒருவன் இருந்தான். அவன் வாழ்ந்தது, கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு 144 யாண்டிற்கு முன் என்பர். பிதியஸ், ஜூபிட்டர்ஒலிம்பியஸ் தேவனுக்கு அழகிற் சிறந்த சிலை ஒன்றை உருப்படுத்தினான். அஃது ஒரு சிறந்த காட்சிப்பொருளா யிருந்தமையின், பண்டைக் காலத்தவர் அதனை அதிசயமான பொருள்களுள் ஒன்றெனக் கொண்டிருந்தனர்.

ஜூபிட்டர் தேவனது உருவச்சிலை ஒரு சிங்காதனத்தின்மேல் உட்காந்துள்ள வண்ணமாக வார்க்கப்பட்டது. அத் தேவனது ஆலயத்தைச் சுற்றிப் பொன்னாற் செய்த ஒலிவ (Olive) மலர் மாலை நான்றுகொண் டிருந்தது. உடலின் அடியிற் பல மடிப்புக்களாகத் தொங்கிய சால்வையால் மூடியதுபோல் அவ்வுருவம் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சால்வை பசும் பொன்னால் இயன்றது. சிலையின் வலக்கையில் வெற்றி மகளின் வில் ஒன்று வீறுபெற விளங்கிற்று. அவ்வில் பொன்னாலும் தங்கத்தாலும் செய்யப்பட்டதாம். இடக்கையில் செங்கோல் ஒன்று நிலைத்திருந்தது. அச் செங்கோலின்மேல் கழுகு உட்காந்திருப்பதுபோல் உருவம் அமைந்திருந்தது.

இவ்வுருவம் இவ்வாறு இருக்கவேண்டும் என்பது அப் பிதியசுக்கு எப்படித் தெரியும்?

பிதியசுக்குக் கல்வி யறிவும் சிறிது இருந்தது. அதனால், ஹோமர் என்னும் பெரும் புலவர் கிரேக்க பாஷையில் எழுதிய 'இலியட்' (Iliad) என்னும் காப்பியத்தில், ஜுபிட்டர் தேவனது உருவ அமைப்பைப் பற்றி வருணித்திருப்பதைப் படித்தறிந்து, பிதியஸ், இவ் வுருவச் சிலையை உண்டாக்கினன் என்று ஸிஸிரோ (Cicero) என்னும் மகாகவி எழுதியிருக்கின்றார். அந்தச்சிலையைச்சுற்றி மிக்க அழகிய சித்திரத்திரை ஒன்று தொங்குகிறது. அது, பார்ப்பவர் மனத்தில் பெருமிதத்தையும் வியப்பையும் உண்டாக்குகிறது. அதனால் அஃது உலகத்து அதிசயங்களுள் ஒன்றாக விளங்கிற்று.

7 அலெக்ஸாந்திரியா நகரத்துப் பேரஸ் கோபுரம்

அலெக்ஸாந்திரியா நகரத்துக்கு மிக்க சிறப்பை உண்டாக்குவது அதன் துறைமுகமே யாகும். அத் துறைமுகம், கப்பல்கள் வந்து தங்கத்தக்க பேராழமுள்ளது. அத் துறைமுகத்தின் ஒரு புறத்தில் கடற்கரைப் பூமி (Delta) ஓங்கி உயர்ந்து, கடலுக்குள் நீண்டு வளைந்து செல்கின்றது. அதன் எதிர்ப்புறத்தில் பேரஸ் (Pharos) என்னும் தீவு அடைமதிலேபோல் அமைந்து நிற்கின்றது.

பேரஸ் தீவின் கீழ்புறத்தில் கலங்கரை விளக்கம் ஒன்று கட்டப்பட்டது. அதன் உயரம் 500 அடியாகும்.


அக் கலங்கரை விளக்கம், பல தட்டுக்களால் இயன்ற மச்சுக்களை உடையது. அம் மச்சுக்கள் ஒன்றன்மேல் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. கப்பற்காரர் கரையைக் கண்டுகொள்ள, கோபுரத்தின் உச்சியில் இராக்காலங்களில் பெரிய விளக்கொன்று வைக்கப்படும். அக் கோபுரம் கிறிஸ்து நாதருக்கு 300 யாண்டுகளுக்கு முன்னர்க் கட்டப்பட்டது. அந்தத் தீபஸ்தம்பம் முற்காலத்தில் மிகப் பெரியதாய், உயர்வானதாய் விளங்கினமையால் அதனைப் பூலோகத்து அதிசயங்களுள் ஒன்றாக மாந்தர் மதித்து வந்தனர்.

17. பால்

உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பொருள்களுள் மிகச் சிறந்தது பாலேயாகும். குட்டி போடும் உயிரினங்கள் அனைத்தும், தம் குட்டிகளைப் பெரும்பாலும் பாலூட்டியே வளர்க்கும். மானிடக் குழந்தைகள், முதல் முதலில் பாலையே உணவாகக் கொண்டு வளர்கின்றன. குழந்தைப் பருவத்தில் உணவாவது பால்; இறுதிக் காலத்தே உணவாக வார்க்கப்படுவதும் பாலே. நோயாளிகளுக்கு உணவாவதும் பாலேயாம்.

குழந்தை பிறப்பதற்குமுன் சுரவாத பால், அது பிறந்தவுடன் சுரந்து வருவது பெரியதோர் வியப்பன்றோ? அத்தகைய பாலில், உடலின் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் ஏற்ற அளவாகக் கலந்திருப்பது வியப்பினும் வியப்பேயாகும்.

நாம் உட்கொள்ளும் உணவில், உடலை வளர்ப்பதற்கான ஆறுவகைப் பொருள்கள் கலந்திருத்தல் வேண்டும். அந்த ஆறுவகைப் பொருள்களும் பாலில் அளவாகவே கலந்துள்ளன. அவை உடலுக்குக் காரணமான சப்த தாதுக்களையும் வளர்க்கத் தக்கவை யாகும்.



பாலில் கலந்துள்ள ஆறுவகைப் பொருள்களாவன :

1. உலோகப்பொருள் (Minerals).
2. தசையை வளர்க்கும் பொருள் (Protein) — அது, ஜீவவர்க்கத்தில் உண்டாவது, தாவரவர்க்கத்தில் உண்டாவது என இருவகைப்படும்.
3. சர்க்கரைப் பொருள் (Corbohydrate)
4. நெய்ப் பொருள் (Fat).
5. விடமின் (Vitamine) என்னும் சத்துப் பொருள்.
6. நீர் (Water) — என்பனவாம்.

நமது உடல் — எலும்பு, தசை, ஜவ்வு, கொழுப்பு, தோல் ஆகிய ஐந்து முக்கியமான உறுப்புக்களால் இயன்றுள்ளது. இவ்வைந்தனுள், எலும்பை வளர்ப்பது உலோகப்பொருள்; தசையை வளர்ப்பது சர்க்கரைப் பொருளும், தசைப் பொருளும், நீரும்; கொழுப்பை வளர்ப்பது நெய்ப்பொருள்; கோளங்களை (Glands) வளர்ப்பது, விடமின் என்னுஞ் சத்துப்பொருள். இப்பொருள்களெல்லாம் நாம் உட்கொள்ளும் உணவில் அளவாகக் கலந்திருந்தால்தான், உடல், நல்ல நிலையில் வளர்ந்துவரும்.

பாலைக் காப்பாற்றும் முறை: (1) பால் பொடியாகுமளவும் அதை வெயிலிற் காயவைத்து, அப்பொடியை ஒரு புட்டியிற் போட்டு, காற்று உள்ளே செல்லாதபடி சடையால் அடைத்து, கம்பியால் இருகக் கட்டி வைக்க வேண்டும். இவ்வாறு செய்யப்பட்ட பாற்பொடி, நெடுங் காலம் வரையில் கெடாமல் இருக்கும். வேண்டும்போது அப் பொடியை அளவான தண்ணீரில் கலக்கினால், அஃது அப்போது கறந்த பால்போலவே இருக்கும்.

(2) கறந்த பாலைப் புட்டியிலே வார்த்து அதனுள் காற்றுப் புகாதபடி சடையினால் அடைத்து, கம்பியினால் இருகக்கட்டி, குளிர்ச்சியான இடத்தில் வைக்கவேண்டும். அவ்வாறு செய்தால், அந்தப் பால் சில நாள்வரையில் கெட்டுப் போகாமல் இருக்கும். குளிர் மிகுந்த

நாடுகளில் கறந்தபாலை அப்படியே வைத்திருந்தாலும், சிலநாள்வரையில் அது கெடாமலிருப்பதே இதற்குத் தக்க திருஷ்டாந்தமாகும்.

பாலை விற்பவர், அதில் பல வகையான கலவைப் பொருள்களைச் சேர்த்து, ஏமாற்றுகின்றனர். நம் நாடுகளில், பாலில் நீரைக் கலப்பது பெரு வழக்கு. நீரைக் கலவாமல் அதனை விற்பது பெரும்பாவம் என்று சிலர் சொல்லுவர். அது கருதியே, உற்றார் உறவினருக்குக் கொடுக்கும் பாலிலும் ஒரு துளியளவு நீரையேனும் விட்டுக் கலந்து கொடுப்பது சிலருக்குள் வழக்கம்.

இங்கிலாந்து நாட்டவர், கோதுமைமாவைப் பாகாக்கிப் பாலிற் கலந்து, தண்ணீர் விட்டு, அளவாகச் சர்க்கரையும் சேர்த்து விற்பர். அவ்வழக்கம் இந்தியாவிலும் இப்பொழுது தலைகாட்டுகின்றது.

பாரசீகரும், பால் வியாபாரத்தில் செய்யும் கள்ளத்தனம் மிகப் பெரிதாம்: அன்னார், வாதுமைக் கொட்டையை அரைத்து, நீரிற் கரைத்துப் பிழிந்து, பாலோடு சேர்த்து விற்றுக்கொண்டிருந்தனர். அதுவும் விலையுள்ளதாயிருந்தமையால், பின்னர், சணவின் பருப்பை அவ்வாறு செய்து பாலிற் கலந்து விற்பாராயினர். இவ்வாறு செய்யும் கள்ளத்தனமெல்லாம் நாளடைவில் வெளிப்படுவனவாயின. அரசாங்கத்தார், அக் கள்ளத்தனத்தைக்


கண்டு பிடித்து அடக்க முயலவே, அது சிறிது சிறிதாகக் குறைந்து வரலாயிற்று.

உணவுப் பொருள்களில், அவைபோன்ற வேறு பொருள்களைக் கலந்து விற்றல் மோசமாகும். விலையைச் சிறிது ஏற்றி விற்கலாமேயன்றி, மோசஞ் செய்து ஏமாற்றி விற்பது ஏற்ற செயலாகாது.

18. செஞ்சிக் கோட்டை

ஏறக்குறைய 220 யாண்டுகளுக்கு முன்னர் ஒரு பாளையப் பட்டுக்குத் தலைநகராக விளங்கியிருந்த செஞ்சிநகரம், இக் காலத்தே ஒரு சிற்றூராக இருக்கின்றது. அதனைப் பார்க்குமளவில், குன்றுகளும், அக்குன்றுகளின்மேல் அமைந்துள்ள கோட்டைகளும், அந் நகர் ஒரு காலத்தில் விளக்கமுற்றிருந்தது என்பதைத் தெளிவுபடக் காட்டும். அக்காட்சிகளைக் காண இக்காலத்தும் பலர் அங்குச் செல்கின்றனர்.

செஞ்சியில் — ராஜகிரி, கிருஷ்ணகிரி என்னும் இரண்டு குன்றுகள், ஒன்றுக்கொன்று கால் மைல் அளவுள்ள இடைவெளியில் அமைந்துள்ளன. அவற்றுள், ராஜகிரி 300 அடி உயரமும், கிருஷ்ணகிரி 250 அடி உயரமும் உள்ளவை. தேசிங்கு ராஜன் தன்



மனைவியுடன் வாழ்ந்த இடம் ராஜகிரி ; அவன் அமர்ந்து அரசாட்சி புரிந்த இடம் கிருஷ்ணகிரியாம்.

ராஜகிரி என்னும் குன்றின்மேல் ஏறிச் செல்லக் கருங்கற்களாற் கட்டப்பெற்ற தூய்மையான படிகள் அமைந்துள்ளன. அந்தக் குன்றின் முக்காற்பங்கு உயரம் சென்றால், காளியம்மன் கோயில் ஒன்று காணப்படும்; அக் காளியே தேசிங்கு ராஜனுக்குக் குலதெய்வம் என்கின்றனர்.

அக் காளி கோயிலை அடுத்த பாறையின் சரிவில் பெரியதோர் சுனை உண்டு. அஃது 200 அடி பரப்புள்ளது. அதன் நீர் எப்போதும் குளிர்ச்சியாகவே யிருக்கும்; தேசிங்கு அதில் இறங்கி நீராடுவது வழக்கமாம். அந் நீர்நிலையைச் சுற்றித் திண்ணைகளும் மேடைகளும் சிறப்பாக அமைந்துள்ளன.

அச் சுனைக்கரையினின்றும் 50 அடிமேலே ஏறினால், குன்றின் உச்சியை அடையலாம். அங்குச் செல்லக் கற்படிகள் இல்லை. மரப்படியின்மீதே ஏறிச் செல்ல வேண்டும். அங்கே, அந்தப்புரம் அமைந்து இருந்தது. சுற்றிலும் மதிற்சுவரும், எண்கோண வடிவமான இரண்டு மண்டபங்களும் இன்றும் உருக்குலையாமல் அமைந்துள்ளன. மண்டபங்களைச் சுற்றி அகழ்போன்ற பள்ளம் வெட்டப்பட் டுள்ளது. மண்டபத்துக்குச் செல்ல, குறுக்கே மரப்பாலம்

அமைக்க வேண்டும். அம் மண்டபத்து அறைகளுக்குள் காற்று மிக்க இன்பமாக வந்து வீசுகின்றது. அம் மண்டபத்தின் உச்சியில் ஏறிப் பார்த்தால் நிலம் பாதாளத்திலிருப்பது போலவும், பார்ப்பவர் வானில் பறப்பது போலவும் தோன்றும்; உடனே கிறுகிறுப்பால் மயக்கம் உண்டாகும்.

ராஜகிரிக்கும் கிருஷ்ணகிரிக்கும் இடையே 100 அடி உயரமும், 20 அடி அகலமும் உள்ள சுவர் ஒன்று கருங்கல்லாற் கட்டப்பட்டுள்ளது. தேசிங்கு ராஜன் அச் சுவரின்மேல் குதிரையூர்ந்து செல்வது வழக்கமாம். கிருஷ்ணகிரியின் உச்சிக்குச் செல்ல இரண்டு வழிகள் உள; மாந்தர் ஒரு வழியாகவும், போர்வீரர் மற்றொரு வழியாகவும் ஏறிச் செல்வர். அக் குன்றின் உச்சியில், அரசன் அமர்ந்து அரசியல் நடத்த அழகிய மண்டபம் ஒன்று உண்டு. அதனில் அரசனும் அமைச்சரும் வீற்றிருக்க வசதியான இடங்கள் ஏற்பட்டுள்ளன. அரசன் அமர்வதற்கு இயற்றியுள்ள கல்லூஞ்சல் ஒன்று மிக்க வேலைப்பாடுள்ளது; மிகவும் அழகு வாய்ந்தது. ஊஞ்சலின் சங்கிலியைப் பூட்டுவதற்கு இரண்டு வளையங்கள் கல்லினாலே செய்யப்பட்டுள்ளன. அவை மிகவும் பெரியனவாய், சிறந்தனவாய் இயன்றுள்ளன.

ராஜகிரியின் அடிவாரத்தின்கீழ் ஐந்து கோட்டைவாயில்கள் அமைந்துள்ளன. அவ்

வாயிற்படியில் போர்வீரர்கள் தங்குவதற்குச் சிறந்த கட்டடங்களும், அவற்றின் அருகில் நெற் களஞ்சியங்களும், எண்ணெய் நெய் முதலிய பொருள்களைச் சேர்த்து வைப்பதற்கான கிணறுகளும் ஏற்பட்டுள்ளன. இவையேயன்றி, வீரர், மற்போர் பயிலும் தொழிற்கூடங்களும், குதிரைக் கொட்டகைகளும் அழியாமல் இன்றும் உள்ளன. அங்கே பள்ளி வாசல் ஒன்று அமைந்துள்ளது.

தேசிங்கு ராஜன், போர்வீரருக்கும், பணியாளருக்கும் உணவுப் பொருள்களையே ஊதியமாகக் கொடுத்துவந்தான்போலும்! இல்லாவிடின், அவ்வளவு பெரிய நெற் களஞ்சியங்களும், எண்ணெய்க் கிணறும், நெய்க் கிணறும் வாய்ந்திருப்பதற்கு நியாயம் இல்லையே!

கிருஷ்ணகிரிக்கு வடக்கில் அரங்கநாதகிரியென்று ஒரு குன்று விளங்குகிறது. அஃது, 200 அடி உயரம் உள்ளது. அக் குன்றின் உச்சியில் அரங்கநாதருக்கான கோயில் ஒன்று உண்டு. அதில் அரங்கநாதர், பள்ளிக்கொண்டிருக்குங் கோலமாக விளங்குகின்றனர். ஆர்க்காட்டு நவாபு படையெடுத்து, செஞ்சிக்கருகில் வந்தபோது, தேசிங்கு சென்று, அரங்கநாதரை வணங்கிப் போர்மேற் செல்ல விடை கேட்க, அப் பெருமான், 'இன்று நின்று, நாளைக்குச் சென்றால், நலமுண்டு' என்று கூற, தேசிங்கு சிந்தைநொந்து திரும்பிவிட்டான்; அதன்மேல்,

பெருமான் தம் முகத்தை மேற்குப் புறமாகத் திருப்பிக்கொண்டனர் என்று கூறுகின்றனர். அப் பெருமான் உருவமும், சுவர்ப்புறமாகத் தம் முகத்தைத் திருப்பிக்கொண்டது போலவே யிருக்கின்றது. அக் கோயிலின் முற்புறத்தில் நந்தியாவட்டச்செடி யொன்றும், எலுமிச்சஞ்செடி யொன்றும் நிலைத்திருக்கின்றன. அவை இரண்டும் நாள்தோறும் குறைந்தது ஒருமலரும் ஒரு பழமும் பெருமான் பூசைக்காகக் கொடுத்து வருகின்றன. அன்றியும், அங்கே, மிக்க ஆழமான சுனை ஒன்று காண்கின்றது. அதிலுள்ள தீர்த்தத்தினாலேயே அப் பெருமானுக்கு நாள்தோறும் திருமஞ்சனம் நடைபெறுகின்றது. அச் சுனைநீர் எக்காலத்தும் வற்றுவதில்லையாம்.

அரண்மனை என்பதற்குக் காவலுள்ள வீடு என்பது பொருள். மலையரண், காட்டரண், நீரரண், மதிலரண் என நான்கு அரண்கள் சூழ்ந்த மனையில் அரசன் வாழ்வது பண்டைக் கால வழக்கு. இவ்வகையான நான்கு அரண்களும் செஞ்சிக் கோட்டைக்குச் சிறப்பாக அமைந்துள்ளன.

தேசிங்கு மன்னன் சிறந்த வீரன். அவன் ஆர்க்காட்டு நவாப்புடன் பெரும் போர் புரிந்து, பேராற்றல் காட்டினான். அவனுக்கு நீங்காத-துணையாக நின்று பேருதவி புரிந்து வந்தது, 'பாரா அஜார்' என்னுஞ் சிறந்த குதிரையாம்.

19. தஞ்சை நகரம்

'சோழ வளநாடு சோறுடைத்து' என்றனர் அவ்வையார். இக்காலத்தும் சோழநாட்டை, 'தென்னிந்தியாவின் நெற் களஞ்சியம்' என்பர். தஞ்சாவூர் ஜில்லாவும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவும் சேர்ந்த பகுதியே, பண்டைக்காலத்தில், சோழநாடாக விளங்கிற்று. இதனைவலியுறுத்த,

'கடல்கிழக்குத் தெற்கு கரைபுரள்வெள் ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம் — வடதிசை
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம் [யில்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்'

என்னும் வெண்பா ஒன்று வழங்குகின்றது.

சோழ மண்டலத்துக்குப் பண்டைக் காலத்தே உறையூர் தலைநகராகவும், புகார் துறைமுகமாகவும் விளங்கியிருந்தன. கரிகாலன் முதலிய பேரரசர்கள் திகழ்ந்த காலத்தில், சிராப்பள்ளி உறையூரைச் சேர்ந்த ஒரு சிற்றூராக இருந்தது; இக் காலத்தே, உறையூர், சிராப்பள்ளியைச் சேர்ந்த ஒரு சிற்றூராக அமைந்திருக்கின்றது.

பிற்காலத்துச் சோழர்கள் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டிருந்தனர். அங்கே ஓர் அரண்மனையும் இப்போது சிதைந்து விளங்குகின்றது. அங்குள்ள சிவாலயமும் திருக்குளமும் மிகப் பெரியவை; அவ்விரண்டும்

தனித்தனி ஐந்து வேலி, அல்லது, 33 ஏகரா அளவினதாகும்.

விஜயாலயன் என்னுஞ் சோழ மன்னன் திருவாரூரிலிருந்து அரசு புரிந்த காலத்தில், பல்லவர்களின் சிற்றரசனாகிய முத்தரையன் ஒருவன் தஞ்சாவூரை அரசாண்டு வந்தான். விஜயாலயன் அவன்மேற் சென்று, அவனை வென்று, தஞ்சை நகரை இரண்டாந் தலைநகராகக் கொண்டு, அங்குப் போவதும் வருவதுமாக இருந்தான்.

விஜயாலயனுடைய வழித்தோன்றல்களுள் ஒருவனாகிய இராஜராஜன் என்பவன் தஞ்சை நகரையே தலைநகராக்கி, அங்கு வந்து வதிவானாயினான். அவன் தஞ்சை நகரைச் சீர்திருத்திச் சிறப்புடையதாக்கி, பெரிதும் விளங்கச் செய்தான். இப்பொழுது அங்கு விளங்கும் பெரிய கோயிலும் அவனால் கட்டப்பட்டதே. அக் கோயிலின் சிறப்புருவம் இப் புத்தகத்தின் முகப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அக் கோயிலைச் சூழ அரண்மனை அமைந்திருந்தது. கோட்டையின் அரண்மனையைச் சூழ்ந்த உறுப்புக்கள் எல்லாம் இக் காலத்தே சிதைந்து சீரழிந்துள்ளன. இராஜ ராஜன் சேரநாடு, பாண்டிநாடு, தொண்டைநாடு ஆகிய இவற்றைத் தன்னடிப்படுத்தி அரசாண்டு வந்தான். இவன் காலத்தில், மலேயநாட்டுமன்னன் ஒருவன் நாகப்பட்டினத்தில் புத்த விஹாரம்

ஒன்று எடுக்க அனுமதி பெற்று, அதனைக் கட்டி முடித்தான். அவன் வேண்டுகோளின்படியே, இராஜராஜன் அக் கோயிலுக்குச் சில ஊர்களை நன்கொடையாக நல்கினான். இவற்றால், இராஜ ராஜன் இயல்பும் வெற்றித்திறமும் பெரிதும் வியக்கத் தக்கனவாகும்.

பெரிய கோயில் எனவே, அதன் பெருமை நன்கு விளங்கும். அக் கோயிலும் பெரியது ; அதில் விளங்குஞ் சிவலிங்கமும் பெரியது ; அக் கோயிலிலுள்ள நந்தியும் மிகப் பெரிய உருவமுடையது. அங்குள்ள சிவபெருமானுக்குத் ‘தஞ்சைப்பெருவுடையார்’ என்றும், அம்மைக்குப் ‘பெரிய நாயகி’ என்றும் பெயர்.

அக் கோயிலின் மூலஸ்தானத்திற்குமேல் சிறந்த கோபுரம் ஒன்று விளங்குகிறது. அது, தன் நிழல் பூமிமேல் விழாதபடி, அடியகன்று, நுனி சிறுத்து, நாற்கோணவடிவமாக அமைந்துள்ளது. அதன் நான்குபக்கங்களிலும் நான்கு மனித உருவம் அமைக்கப்பெற் றுள்ளன. அவற்றுள் ஒன்று ஐரோப்பியன் உருவமாயுள்ளது ; அஃது எப்படி ஏற்பட்டது என்று காண்போர் வியக்கின்றனர். சிற்பி செய்த வேலையில் அஃது எப்படியோ அவனையும் அறியாமல் அமைந்துவிட்டது என்பர் ஒரு சிலர்.

அது சரியன்று, சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஐரோப்பியர் வந்து இந் நாட்டில் அரசாட்சி செய்வர் என்பதை அறிந்தே

அவன் அவ்வாறு அதனை இயற்றினான் என்பர் வேறு சிலர்; உண்மை யாதோ புலப்படவில்லை.

சோழ மன்னர்களுக்குப் பின்னர், கீழைச் சளுக்கியர் தஞ்சை நகரில் அமர்ந்து ஆட்சி புரிந்தனர். அவர்களுக்குப் பின்னர், அது விஜயநகரத்து அரசாட்சிக்கு அடங்கியிருந்தது. அப்பொழுது சேவப்ப நாயக்கன் என்பவன் தஞ்சையில் ராஜப்பிரதிநிதியாக இருந்தான். இவன் விஜயநகர் அரசனுக்கு மைத்துனன்; இவன் மனைவிக்குத் தஞ்சைச் சீமை சீதனமாகக் கொடுக்கப்பட்டது.

அவ்வழியில் கடைசியாகச் செங்கமல தாஸ் என்பவன் அரசு செலுத்தினான். அக்காலத்தில், மதுரையிலிருந்த அரசரின் தளகர்த்தனை அழகிரி நாயக்கன் படையெடுத்து வரவே, செங்கமல தாஸ் முஹம்மதியரின் உதவியைப் பெரிதும் நாடி நின்றான். அப்பொழுது, பீஜபூர்-சுல்தான், பெங்களூரில் தன் பிரதிநிதியாயிருந்த வெங்காஜியை அவனுக்குத் துணைபுரியுமாறு அனுப்பினான். அவன் வந்து, அழகிரி நாயக்கனை ஓட்டி, செங்கமல தாஸுக்கு முடி சூட்டினான். ஆயினும், செங்கமல தாஸ் அரசியல் திறமை யற்றவனா யிருந்தமையின், பின்னர், வெங்காஜியே அவ் வரசாட்சியை மேற்கொள்ள லானான்.

அதன் பின்னர், சிவாஜி என்னும் வெற்றி வேந்தன் தஞ்சை நகரின்மேல் படையெடுத்து

வந்து, அதனை வென்று, தன் தமையனாகிய ஏகோஜி என்பவனை அதற்கு அரசனாக்கிச் சென்றான். அவன் வழியில் வந்த மகாராட்டிர மன்னர் சிலர் அதனை ஆண்டு வந்தனர். அவர்களுள் சரபோஜி என்னும் மன்னன் தஞ்சாவூர் அரசாட்சியை ஆங்கிலேயர் வசம் ஆக்கினான்; அதுமுதல் தஞ்சாவூர் ஜில்லா ஆங்கில அரசாட்சியிற் சேர்ந்தது.

மகாராட்டிரர் கட்டிய அரண்மனைக்குள் ஒரு பெரிய நூல்நிலை (Library) யும், துரைத்தனக் கச்சேரிகளும் அமைந்துள்ளன. அதில் ஒரு பெரிய கூடத்தில், சரபோஜி மன்னரின் உருவச்சிலை சலவைக்கல்லினால் அழகுபெற அமைக்கப்பட்டுள்ளது.

கங்கையிற் சிறந்த தென்னக்
கம்பனும் வியந்து கூறும்
பங்குறக் கால்கள் பல்கிப்
பரந்துசெல் பொன்னி யாற்றின்
மங்கலில் வளத்த தாகி
மாண்புற விளங்கி யென்றும்
பொங்கிய செல்வம் மல்கப்
பொலிவது புனலி நாடு.

செய்யுள்

I - கடவுள் வாழ்த்து

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை. (1)

நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோர் அமுத மானாய்
மறைநான்கும் ஆனாய் ஆறங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே நின்னை
என்னானாய் என்னானாய் என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி ஏத்து கேனே. (2)

பொன்னானாய் பொழிலேழும் காவல் பூண்ட
புகழானாய் இகழ்வாய தொண்ட னேன்நான்
என்னானாய் என்னானாய் என்னில் அல்லால்
என்னறிவேன் ஏழையேன் உலகம் ஏத்தும்
தென்னானாய் வடவானாய் குடபா லானாய்
குணபால மதயானாய் இமையோர்க் கென்றும்
முன்னானாய் பின்னானார் வணங்குஞ் சோதி
திருமூழிக் களத்தானாய் முதலா னாயே. (3)

தனன தனன தனன தனன
தனன தனன — தனதான.

தமரு மணியும் அரசும் இனிய
தனமு நிலையு மிவைபோகத்
தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே
கமல அமல நடன வுபய
கனக மணிகொ ளிருபாதம்
கருத அருளி எனது தனிமை
கழிய அறிவு தரவேணும்
குமர சமர புரியின் முருக
குலவு பழனி மலையோனே
கொடிய கிரியை முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா
அமர ரிடரும் அவுண ருடலும்
அழிய அமர்செய் தருள்வோனே
அறமும் நிறமும் அயிலும் மயிலும்
அழகு முடைய பெருமாளே. (4)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே. (5)

II - தனிப்பாடல்

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள் — மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டா புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண். (1)

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை — அடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
இயானெனச் சம்போல் அறு. (2)

உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி—எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்குங் காலறுவான் றன்கிளையும்
எச்சமறும் என்றால் அறு. (3)

வெண்பா இருகாலிற் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானைப் — பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று. (4)

ஆலைப் பலாவாக்க லாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ — நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கரைச்சீ ராக்கலா மோ. (5)

தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் — ஆயவாழ்
வுற்றாருடன்போம் உடற்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம். (6)

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தாம் செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (7)

சிரம்பார்த்தான் ஈசனயன் தேவிதனைப் பார்த்தான்
கரம்பார்த்தான் செங்கமலக் கண்ணன்—உரஞ்சேர்
மலைவெளுத்த திண்புயத்து வண்ணான்சீ ராமன்
கலைவெளுத்த நேர்த்திதனைக் கண்டு. (8)

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையப்பன் ஊர். (9)

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் — என்னை
விரைந்தேற்றுக்கொள்ளாதவேந்துண்டோவுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு (10)

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ — மேதினியில்
கொல்லிமலை நாடாளுங் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம். (11)

III - நீதி வெண்பா

பகைசேரும் எண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித் தவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில். (1)

இக்கு விடந்தலையில் எய்தும் இருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (2)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (3)

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி. (4)

தூய அறிவினர்முன் சூழ்துன்பம் இல்லையாம்
காயும் விடங்கருடற் கில்லையாம்—ஆயுங்கால்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீதம் இல்லையாம்
துன்முகனுக் குண்டோ சுகம். (5)

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும்
கனமொன்று மேலவர்தங் கண். [ஒன்றே

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே — நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் தான்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். (7)

பெண்ணுதவுங் காலைப் பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் இன்றதாய்—நண்ணிடை
கூரியநற் சுற்றம் குலம்விரும்பும் காந்தனது [யில்
பேரழகு தான்விரும்பும் பெண். (8)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே — காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. (9)

உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே — முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து. (10)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ — அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ விளம்பு. (11)

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும் — முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. (12)

IV - நன்னெறி

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலா
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல் [ய்
புல்லினும் திண்மைநிலை போம். (1)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (2)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (3)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே — வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்
காக்கை விரும்புங் கனி. [பன்றோ

அறிவுடையார் அன்றி அதுபெறூர் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும் — பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு. (5)

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (6)

இல்லானுக் கன்பீங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும் — நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (7)

தம்மையும் தங்கள் தலைமையையும்பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் — தம்மின்
இழியினும் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினும்செல் லாதோ கடல். (8)

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் இகை மறுப்பரோ — பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. (9)

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே — பொன்செய்
ததிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். (10)

நல்லோர் வரவான் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார் — வல்லோர்
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர. (11)

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் — நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. (12)

V - நாயின் நல்லியல்பு

ஆசையை அறவே நீத்த
    அறிவனோர் காட்ட கத்தே
மாசிலா மனத்த ஞகி
    மரநிழல் வதிந்தி ருந்தான்
தேசுறும் ஒளியாம் ஈசன்
    திருவடி சிந்தை சேர்த்தி
ஆசிலாத் தவமு ஞற்றி
    அன்னவன் இருக்கும் நாளில். (1)

பறவைகள் பறந்து வந்து
    பரிந்தவன் பக்கல் தங்கும்
திறமுறும் உழுவை சீயம்
    செறிந்தவன் திசையில் சேரும்
அறனுறுந் தவசி நோக்கி
    அவற்றுடன் ஆடிப் பாடி
உறவுகொண் டிருப்ப இன்பம்
    உற்றன அவையும் மாதோ. (2)

எழிலுறும் மலரை நோக்கி
    இன்பமே பூத்த தென்பான்
பொழிலுறு கனியைக் கண்டு
    புண்ணியம் பழுத்த தென்பான்
அழிதலில் தளிரைக் கண்டே
    அருள்மிகத் தழைத்த தென்பான்
கழிமகிழ் வெய்த அன்னன்
    கண்டனன் காட்சி யெல்லாம். (3)

நன்னய முனிவன் ஓர்நாள்
நகரினைக் காண எண்ணித்
துன்னிய அருளாற் செல்லத்
தொன்னகர் மாந்தர் சில்லோர்
மன்னிய அவனைச் சூழ
வந்தனர் வறிய கோலத்
தன்னவன் அருகில் நின்றார்
அவன்செயல் நோக்க லுற்றார். (4)

அறிவனும் ஆங்கண் நின்ற
அழுகிதோர் நாயைக் கண்டு
செறிமகிழ் கொண்டந் நாயின்
திருவடி தனில்வ ணங்கி
நெறியுடன் வலமா வந்து
நிலத்தினில் விழுந்தான் கண்ட
பொறியிலா மாந்தர் சேர்ந்து
பொள்ளெனச் சிரித்து நின்றார். (5)

முதியவன் ஒருவன் முன்னி
முனிவரன் தனைவ ணங்கி
மதியுளீர் தாமும் இந்த
வன்குரல் நாயைப் போற்றிப்
புதியதோர் உவகை பூத்தீர்
புகலுமின் இதன்சீர் என்ன
வதியுமம் மாக்கள் தேர
வழுத்துவன் முனிவன் ஆங்கே. (6)

தன்னொரு தலைவன் வீசுஞ்
சாரமில் எச்சில் உண்டே
அன்னவன் றன்பால் நீங்கா
அன்புகொண் டிருக்கும் அன்றிப்
பொன்னியல் புலியைக் காட்டிப்
போவெனப் பொரமேற் செல்லும்
மன்னுமோர் பெருங்கூட் டத்தும்
மாறிடா தவனைச் சாரும். (7)

இந்தநன் றியல்பு தானும்
எவ்வகை நாய்க்கும் உண்டால்
அந்தநல் லியல்பு தானும்
அறிவுள மாந்தர்க் குண்டோ
வந்தபல் பண்டந் தம்மை
வகைவகை யாகத் தந்த
சிந்தலில் அருளான் இசன்
செயல்முறை அறிகி லோமோ. (8)

நன்மையும் தீமை தாமும்
நலமுறக் காட்டி வைத்தும்
புன்மையே நாடி நின்றேம்
புனிதனிங் கொருவ னேயென்
றுன்னவுங் கில்லோம் அன்றி
ஒளியிலாச் சிறுதெய் வங்கள்
மன்னவே கொண்டு தாழ்வோம்
மதியிதோ மதியி லீரே. (9)

எனப்பல இடித்து ரைத்த
இணையிலான் றன்னைத் தாழ்ந்து
நினைப்புறு மனத்த ராகி
நெறிமுறை அறிந்து நின்றார்
இனப்பகை கடந்த நல்லோன்
இதுநன் னெறிய தென்றே
வனப்புறு நகரந் தோறும்
மாந்தருக் குணர்த்தச் சென்றான். (10)

காட்டினில் வதித லானும்
கனி பல அருந்தலானும்
நாட்டுமோர் நன்மை யில்லை
நகரியிற் சென்று மாந்தர்
இட்டமே மேவி யன்னார்
இழிமதி தீரச் சொல்லிக்
காட்டலே நலனா மென்னாக்
கனிவொடுஞ் சென்றா னன்றே. (11)

குறிப்புரை

வசனம்

அகங்களித்து - மனமகிழ்ந்து.
அடுக்கம் - அடுத்திருப்பது; பக்கமலை.
அடைகாத்தல் - முட்டைகளின்மேல் சேர்ந்திருத்தல்.
அணி - ஆபரணம்.
அண்மை - சமீபம்.
அநுமதி - உத்தரவு.
அந்தப்புரம் - அரசியரிருக்கும் உள்வீடு; உவளகம்.
அந்தணர் மரபினர் - பிராமண குலத்தினர்.
அமிதமாக - அளவில்லாமல்.
அமைய - உண்டாக.
அரங்கம் - ஆற்றையடுத்துள்ள பூமி.
அரசவை - இராஜ சபை.
அருந்த - உண்ண; குடிக்க.
அலெக்ஸாந்தர் - மாசிதோனியா நகரத்தில் பிறந்த பெரிய வெற்றி வேந்தன்.
அலெக்ஸாந்திரியா - எகிப்து தேசத்திலுள்ள நகரம்.
அவதாரஞ் செய்தல் - கீழிறங்குதல்; பெரியோர் பிறத்தற்குக் கூறும்மரபுச்சொல்.
அவயவம் - உறுப்பு.
அழகிது - அழகுடையது.
அன்றுடம் - நாள்தோறும்.
அன்னார் - அவர்கள்.
ஆல்ப்ஸ் - இத்தாலியா தேசத்தின் வடக்கிலுள்ள மலை.
ஆரியபாஷை - ஸம்ஸ்கிருதம்.
ஆறுமுகம் - ஒருதுறைமுகம்; இஸ்த் இந்தியா கம்பெனியார் இங்கு வர்த்தகசாலை கட்டினர்; அவர்களுக்கு ஆறுமுக முதலியார் என்பவர் கவர்னராக இருந்தார்; அவர் பாட்டனார் பெயரால் ஏற்பட்ட ஊர்.
ஆற்றல் - வல்லமை.
ஆஸ்தி - உடைமை.
இத்தகைய - இப்படிப்பட்ட.
இமயமலை - பனிமூடிய மலை; ஹிமம் - பனி.

இயலவில்லை - முடியவில்லை.
இயல்பு - தன்மை.
இயன்று - அமைந்து.
இரங்க - வருந்த.
இல்லம் - வீடு.
இறந்தகாலம் - முடிவுகாலம்.
இடு - சமம்; ஒப்பு.
உடன் கட்டை ஏறுதல் - மனைவி கணவனோடு தீயில் மூழ்குதல்.
உதாரணம் - எடுத்துக் கூறுதல்; எடுத்துக்காட்டு.
உடந்நியாசம் - அருகில் வைத்தல்; தெரியாத விஷயத்தைத் தெரியச்செய்தல்.
உப்பரிகை - மேல்மாடி.
உயிரணு - உயிருள்ள அணு; நுண்ணுயிர்.
உய்த்து உணர்தல் - ஆராய்ந்து அறிதல்.
உரியவன் - சொந்தக்காரன்.
உவப்பு - மகிழ்ச்சி.
உறவினர் - சிநேகர்.
உற்றார் - பந்துக்கள்.
உன்னதமான - உயர்வான.
ஊகித்து - குறிப்பாலறிந்து.
ஊடே - நடுவில்.
ஊன் - தசை, சதை.
ஐயம் - சந்தேகம்.
ஓவியப் புலவன் - சித்திரம் வல்ல அறிஞன்.
ககோளசாஸ்திரம் - வானசாஸ்திரம்
ககோளம் - வான வட்டம்.
கண்துஞ்சார் - உறங்கார்.
கயம் - பொய்கை, குளம்.
கரம்பு - பயிராகாத நிலம்.
கரையார் - பரதவர்; கடற்கரையில் வாழ்பவர்.
கலங் கரை விளக்கம் - கப்பலைக் கரைக்கு அழைக்கும் விளக்கு; தீபஸ்தம்பம்.
கலம் - கப்பல், கரை - அழைக்கின்ற.
கல்கத்தா - காளி கட்டம்.
கல்லூரி - கலாசாலை, காலேஜ்.
காமுறுவர் - விரும்புவர்.
காலி - மாடு, கால்நடை.
காவதம் - 10 மைல் தூரம்.
கிடங்கு - அகழி.
கிஸ்தி - கப்பம்.
குஞ்சம் - கொத்து.
கூழை - குட்டையானது.
கெலிப்பு - வெற்றி.
கேளிக்கை - விளையாட்டு.
கைவன்மை - செய்திறன்.
கோட்பாடு - கொள்கை.
சகோதரர் (ஸஹ - உதரர்) - ஒரே வயிற்றிற் பிறந்தவர்; உதரம் - வயிறு.
சந்திரகிரி - சித்தூர் ஜில்லாவிலுள்ள ஒரு நகரம்.
சப்ததாது - ஏழு தாதுக்கள்; அவை-உமிழ்நீர், இரத்தம், வீரியம், மூளை, தசை, எலும்பு, தோல் என்பன.

சரசேனர் - (Syracuse)ஸிரகிஸ் என்னும் வகுப்பினர்.
சல்லிவேர் - சிறுவேர்.
சாகபட்சணி - இலை முதலிய வற்றைத் தின்பவை.
சாசனம் - ஆணை; நிலையான எழுத்து.
சாந்தோம் - பரிசுத்த தோமையார் என்னும் அடியவர் பெயரால் மயிலாப்பூருக்குக் கிழக்கில் உள்ள ஓர் ஊர்.
சாவடி - பொது இடம்.
சிசு - குழந்தை.
சிற்பசாஸ்திரம்-கல், உலோகம் முதலியவற்றால் உருவம் அமைப்பதைப் பற்றிச் சொல்லும் நூல்.
சீதோஷ்ணங்கள் - (சீத- உஷ்ணங்கள்) - குளிர்ச்சியும் வெப்பமும்; காலநிலை.
சூரத்து - பம்பாய் ராஜதானியிலுள்ள ஒரு நகரம்.
சூரியகடிகாரம்-சூரியனுடைய கிரணம் பூமியில் விழுவது கண்டு காலம் கணிக்கும் கடியாரம்.
செல்வப்பிள்ளை - அருமைக் குழந்தை.
செவ்வி - காலம்.
சென்னப்பநாய்க்கன் - இவன் பூந்தமல்லியிலிருந்த சிற்றரசனுக்குத் தந்தை; அவன் சந்திரகிரி யாரசனுக்குக் கீழ்ப்பட்டவன்.
சேய்மை - தூரம்.
ஞாயிறு - சூரியன்.
டில்லி - இந்தியாவின் தலைநகரம்.
தகர்த்து - இடித்து.
தசை - சதை.
தத்தளிக்கையில் - தடுமாறும் போது.
தத்துவசாஸ்திரம் - உண்மைப் பொருளை விளக்கிக் கூறும் நூல்.
தத்துவம் - உண்மை.
தரகிரி - தரகர்; துவிபாஷி.
தல யாத்திரை - சிறந்த இடங்களுக்குச் செல்லுதல்.
தலைகாட்டுதல்—தொடங்குதல்
தாமிரச் சிலை - செம்பினால் செய்த உருவம்.
தாவரம் - நிலையாக இருப்பது. மரம் முதலியவை.
திபெத் - (Tibet) இமய மலையின் வடக்கிலுள்ள தேசம்.
திரிந்து - வேறுபட்டு.
திரு - செல்வம்.
திருப்பணி - சிறந்த வேலை.
திருப்பதி - திவ்ய க்ஷேத்திரம்.
திறவுகோல் - தாழ்க்கோல், சாவி.
துய்ப்பார் - அனுபவிப்பார்.

துருவம் - பூமியின் வடக்குத் தெற்குத் திசைகளிலுள்ள பிரதேசம்; வட துருவம், தென் துருவம் என்பன.
துலாக்கோல் - தராசு.
தூய்மை - பரிசுத்தம்.
தெருமுகம் - தெருப்பக்கம்.
தேகவியோகம்-(உயிர்) உடலை விட்டுப் பிரிதல்.
தைலமாட்டி - எண்ணெயிற் கிடத்திவைத்து.
தோங்குபாலம் - பிரிந்துகூடும் பாலம்.

நந்தவனம் - பூஞ்சோலை.
நறுமணம் - நல்லவாசனை.
நான்று - தூக்கிட்டு; தொங்கி.
நியதி - ஏற்பாடு.
நிருபன் - அரசன்; மாந்தரை ஆள்பவன்.
நிருமித்தவன் - செய்தவன்.
நிலவுவது-நிலைபெற்றிருப்பது.
நிலை - வாசற்கால்.
நீடுநினைந்து - நெடுநேரம் எண்ணி.
நீத்தான் - விட்டான்.
நுண்ணறிவு - சூக்ஷ்ம புத்தி.
நூதன நகரம் - புதிய நகரம்.

பகவத்கீதை - ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசஞ் செய்த செய்தியைக் கூறும் நூல்.
பணியாளர் - வேலைக்காரர்.
பண்டைக் காலம் - (பண்டு ஐ - காலம்) பண்டு - முன். ஐ - சாரியை.
பத்திரிமேடை - பீரங்கிகள் வைக்கத்தகுந்தமேட்டுநிலம்.
பயில் - நெருங்கிய.
பரணி - பரணை.
பருகி - குடித்து.
பாபிலோன் நகரம் - ஆசியாவின் துருக்கி தேசத்தில் இயூபிரடிஸ் நதியின் கரையில் உள்ள நகரம்.
பாவப்பேற்ற - பரப்பப்பெற்ற.
பாவனை - கருத்து.
பாளையக்காரன் - படைத்தலைவன்.
பிரகிருதிசாஸ்திரம்-இயற்கைப் பொருள்களைப் பற்றிக் கூறும் நூல்.
பிரதிநிதி-பதிலாகஇருப்பவன்; அரசனுக்குப் பதிலாக ஆள்பவன்.
புதல்வன் - மகன்.
புயல் - மேகம்.
புலமை - அறிவு.
புலம் - விளை நிலம்; காட்டு நிலம்.
புலவர் - அறிஞர்.
பூகம்பம் - பூமியதிர்ச்சி.
பூர்வநகரம் - பழைய நகரம்.
பெருங்கடல் - சமுத்திரம்.
பெருமிதம் - பெருந்தன்மை; களிப்பு.

பேடு - பெட்டை.
பேதைமை - அறிவில்லாமை.
பேரரும்பு - மலரும் பருவத்தி லுள்ள அரும்பு.
பொன் வினைஞர் - பொன் வேலைசெய்பவர்; தட்டார்.
போந்து - வந்து.
போர்ச்சுகல் - ஐரோப்பாக் கண்டத்தின் தென்மேற்குப் பாகத்தில் உள்ள தேசம்.

மந்தி - குரங்கு.
மந்திராலோசனை-ரகசியமான ஆலோசனை.
மருவி - (ஒரு சொல்லின்) சார்பாகி.
மரை - ஒரு வகை மான்.
மற்போர் - மல்யுத்தம்; குஸ்தி.
மாகாணம் - ஒரு தேசத்தின் பெரும் பிரிவு.
மாசூல் - விளைவு.
மாடம் - மேல்நிலை வீடு.
முகப்புவாசல் - முன்வாசல்.
முடுக்கு - அகலமில்லாத சிறு தெரு.
முதற்கண் - முதலில்.
முனிந்து - வெறுத்து.
மூதுரை - பழமொழி.
மெய் - உடம்பு.

யந்திரசாஸ்திரம்-யந்திரங்களை அமைத்தலைப் பற்றி அறிவிக்கும் நூல்.
யாண்டும் - எவ்விடத்துக்கும்.

வனபரிபாலனம் - காடுகளைப் பாதுகாத்தல்.
வனப்பு - அழகு.
வாய்ப்பு - அமைப்பு.
வானவூர்தி-ஆகாய விமானம்.
வான் - ஆகாயம்.
விக்கிரக ஆராதனை - கடவுளை விக்கிரகத்தின் மூலமாகப் பூசித்தல்.
விசாரணை - ஆராய்ச்சி.
வியப்பு - ஆச்சரியம்.
வியாகரணம் - இலக்கணம்.
விலங்கு - மிருகம் ; உடல் குறுக்காக இருப்பது.
வீறு - மேம்பாடு.
வெள்ளி வினைஞர் - வெள்ளி வேலைசெய்பவர்; தட்டார்.
வேதாந்தம் - வேதத்தின் முடிவு, உபநிஷதங்கள்.

ஸாமந்தராஜுலு - சிற்றரசர்.
ஸ்விஸ் - ஸ்விஸ் தேசத்தவர்.
க்ஷேத்திரகணிதம்-நில அளவு நூல் (Geometry)

குறிப்புரை

செய்யுள்

1. கடவுள் வணக்கம்

திரு - செல்வம். பீடு - பெருமை. உரு - அழகு. (1)

இது, மூத்தநாயனர் திருவிரட்டை மணிமாலையில் முதற் செய்யுள் - இதனை இயற்றியவர் கபிலதேவ நாயனர்.

நின் ஆவார் - உனக்கு ஒப்பானவர். மன் - அரசன். மறை - வேதம். ஆறு அங்கம் - ஆறு சாஸ்திரம்; அவை, சிட்சை, வியாகரணம், நிருக்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம் என்பன. போகம் - இன்பம். என் ஆனய் - என்ன பொருளானய். ஏத்துகேன் - துதிப்பேன். (2)

இது, திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த தேவாரம்.

பொழில் - உலகம். ஏழையேன் - அறிவில்லாதவனுகிய அடியேன். உலகம் - உலகத்தவர். தென் ஆனய் - தென் திசையிலுள்ள ஆனை போல்பவனே. குடபால் - மேற்குத் திசை. ஆனய்-ஆனையே. குணபால மத யானய்-கீழ்த்திசையிலிருக்கும் மதயானையே. தென்திசை-திருமாலிருஞ்சோலைமலை. வடதிசை - திருவேங்கடம். மேற்றிசை - திருவரங்கம். கீழ்த்திசை - திருக்கண்ணபுரம் என்ப. பின் ஆனர் - பிரமன் முதலியோர். திருமுழிக்களம்-மலைநாட்டிலுள்ள ஒரு திருப்பதி. (3)

இது, திருமங்கையாழ்வார் அருளிச் செய்தது.

தமர் - சுற்றத்தார். அனை - அன்னை; மனை எனவும் பிரிக்கலாம். தனம்-பொருள். தறுகண் மறலி-அஞ்சாமையை

யுடைய யமன். முறுகு கயிறு - முறுக்கிய பாசம். கமலம் - தாமரைப்பூ. அமலம் - பரிசுத்தம். உபயம் - உபகாரம். கனகம் - பொன். மணி - இரத்தினம். கொள் - கொண்டுள்ள. தனிமை - (அடியவர் கூட்டத்தில் சேராமல்) தனித்திருக்கும் நிலைமை. சமரபுரி - திருப்போரூர்; இது தொண்டை நாட்டி லுள்ளது. முருக - இளமைப்பருவ முடையவனே. குலவு - விளங்குகின்ற. கிரி - கிரவுஞ்சமலை. முடிய - அழிய, பிளவுபட. முடுகு - கோபித்த. குறவர் சிறுமி - வள்ளியம்மை, அமரர் - தேவர். அவுணர் - அரசர். அயில் - வேல். (4)

இது அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ்.

மண் கண்ட - உலகத்தைத் தன்னுள் அடக்கிய. வெண் குடை - வெண் கொற்றக் குடை. பண் - சந்தம். படைப் போன் - பிரமன். விண் கண்ட - விண்ணுலகத்தவர்கள் வணங்கும். சகலகலாவல்லி - சகல சாஸ்திரங்களுக்கும் அதி தேவதை. (5)

இது குமாகுருபரசுவாமிகள் இயற்றிய சகலகலாவல்லிமாலை.

II. தனிப்பாடல்

கல்லா - படியாத நூல்கள். உற்ற - பொருந்திய. கலை மடந்தை - கலைகளுக்குரிய அதிதேவதை; சாசுவதி. (1)

தண்டாமல் - அலைக்காமல். தாளாண்மை - (கொடைத் தொழிலிலுள்ள) ஊக்கம். தண்டி - அலைத்து. தண்டி இவது வண்மை எனக் கூட்டுக. கால் கூலி - அலைந்ததற்காகக் கொடுக்குங் கூலியாகும். எச்சம் - சந்ததி.

இயாதவனது சந்ததி அழியும் என்பது கருத்து. (2)

பொது - அம்பலம்; சபை. கால் - சந்ததி. (3)

இருகாலில் - இரண்டு முறை சொன்ன அளவில். கல் லானை - கற்காதவனை. எற்று - எதற்கு. இழிவு தோன்ற, எற்று என மூன்று முறை அடுக்கினர். மற்று - அசை. (4)

சுணங்கன் - நாய். நீலம் - கறுப்பு. கருணை - இரக்கம். மூர்க்கர் - அறிவில்லாதவர். (5)

சேய் - பிள்ளை. ஆய - உண்டாகிய. உடன் பிறப்பு - சகோதரர்கள். பொன் தாலி - பொன்னாற் செய்த தாலியை யுடையவள், மனைவி ; அன்மொழித் தொகை. (6)

வரி வடி வேலோய் - நீண்டகூரிய வேலாயுதத்தையுடையவனே. பேடு - அலி. நயத்தல் - விரும்புதல். வானவர் நாடு - சொர்க்க லோகம். (7)

இந்த ஏழு பாட்டுக்களும் அவ்வையார் பாடிய தனிப் பாடல்கள்.

சிரம் - தலை. ஈசன் - சிவபெருமான். அயன் - பிரமன். தேவி - மனைவி; சரஸ்வதி. கரம் - கை. செங்கமலக் கண்ணன் - செந்தாமரை மலர்போன்ற கண்ணையுடையவன் ; திருமால். உரம் - வலிமை. மலை வெளுத்த திண்புயத்து - மலையை ஒத்த வலிய தோள்களையுடைய. கலை - ஆடை. நேர்த்தி - அழகு. ஈசன் சிரத்தைப் பார்த்தது, கங்கையின் வெண்மையை ஒப்பிடுதற்கு. சரஸ்வதி வெள்ளை நிறத்தையுடையவள் ; அதனால் பிரமன் அவளை நோக்கினான். திருமால் கரத்தைப் பார்த்து, கரத்திலுள்ள சங்கின் வெண்மையை நோக்க.

வண்ணான், ஆடையை மிக்க வெண்மையாக வெளுத்து வந்தான் என்பது கருத்து. (8)

மோட்டு எருமை - பெரிய எருமைகள். வாவி புக்கு - குளத்திற்குள் இறங்கி. முட்டு வரால் - தம்மை முட்டிய வரால் மீன்களை. கன்று என்று - தம் கன்று என நினைத்து. வெண்ணெய் - திருவெண்ணெய் நல்லூர். அஞ்சல் - பயப்படாதே. சடையப்பன், கம்பரை ஆதரித்த வள்ளல். (9)

நீயோ - நீ ஒருவன்தானோ. வளநாடும்-வளமை யமைந்த எல்லா நாடும். உன்னதோ - உனக்கு உரியதோ. ஓதினேன் - கற்றுணர்ந்தேன். சோழநாடு 24 காத அளவு உள்ளது. (10)

காசினி - பூமி. முனிதல் - கோபித்தல். (11)

இந்நான்குபாட்டுக்கள் கம்பர் பாடினவை எனவழங்கும்.

III. நீதி வெண்பா

நல் நா - நல்ல நாக்கு. வகை சேர் - ஆறுவகையாகச் சேர்ந்த. சுவை - சுவையுள்ள உணவு. தொகை-கூட்டமாகிய. அருந்துமாபோல் - உண்ணுகின்ற விதம் போல; அருந்து - மாறு என்பதில், று - தொகுத்தல். பாவித்து - நினைத்து. (1)

விடம் - விஷம். எய்தும் - சேரும். இரும் - பெரிய. வாய்த்த - அமைந்த. நோக்க அரிய - பார்த்தற்கு முடியாத. பைங்கண் அரவு - பசிய கண்ணையுடைய பாம்பு. துர்ச்சனர் - தீயோர். அங்கம் - உடம்பு. (2)

கொம்பு உள தற்கு-கொம்புள்ள மிருகங்களுக்கு. ஐந்து- ஐந்துமுழ அளவு. வெம்பு கரி-கோபமுள்ள யானை, மதயானை. வம்பு செறி - வீண் செயல்கள் மிக்க. நெறி - முறை. (3)

சிற்றுணர்வோர் - அற்பபுத்தி யுள்ளவா். சிலுசிலுப்பர் - படபடத்துப் பேசுவர். ஆன்று - விசாலமாகி. விரி - ஒளி விரிகின்ற. ஒண் கலம் - பிரகாசமான பாத்திரம். (4)

தூய - பரிசுத்தமாகிய. காயும் - வருத்துகின்ற. பல்முகம் சேர் - பல நாக்குக்களை யுடைய; தீக்கு, எழுநா என்பது ஒரு பெயர். பயில் சீதம்-மிக்க குளிர்ச்சி. துன்முகன்-துஷ்டன்.(5)

மன்னு - நிலைபெற்ற. வினை வேறுபட்டவர்பால் - தீவினையுடையவரிடத்தில். மேவும் - பொருந்தும். அனமே - அன்னம் போல்பவளே. வான் பொருளும் - சிறந்த செய்கையும். கனம் ஒன்றும் - மேன்மை பொருந்திய. (6)

நிந்தை இலா - பழிப்பில்லாத. தூயவர்-பரிசுத்தமானவர். ஆன் தன் பால்-பசுவின் பால். தம் இடம்-நிந்தை இல்லாதவரிடம். தாலம்-பனைமரம். அருந்திடினும்-குடித்தாலும். (7)

பெண் உதவுங்காலை-பெண்ணை (ஒருவனுக்குக்) கொடுக்க எண்ணும்பொழுது. பிதா - தந்தை. விரும்பும் - விரும்புவான். இன்ற - பெற்ற. நண் இடையில் - சேரும் இடைப்பட்ட காலத்தில். கூரிய - மிக்க. காந்தன் - கணவன். (8)

ஆக்கை - உடல். இசை - குரல். கோலம் - உருவம். (9)

மானுவர் - ஒப்பர். முத்து அலரும் - முத்தைப் போல் மலர்கின்ற. கமுகு - பாக்கு மரம். அதமர் - கீழ்மக்கள். தேங் கதலி - இனிமையுள்ள வாழைமரம். தேர்ந்து - தேர; ஆராயின். (10)

காதலித்து - விரும்பி. அல் ஆரும் - இரவில் பொருந்திய. வான்மீன் - நட்சத்திரம். இலகிடினும் - விளங்கினாலும். விளம்பு - சொல்லு. (11)

சின்னம் பட-உருவம் அழிய. நலிந்தாலும் - வருந்தினாலும். நயந்து - விரும்பி. (12)

IV நன்னெறி

இது, சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியது.

நீக்கம் அறும் - நீங்குதல் இல்லாத; விட்டுப் பிரியாத. புணர்ந்தாலும் - சேர்ந்தாலும். நோக்கின் - ஆராய்ந்தால். நொய்து - அற்பமானது. பூக் குழலாய் - பூவை முடித்த கூந்தலையுடையவளே. நெல்லின் - நெல்லினின்றும். உமி நெல்லின் சிறிது நீங்கி எனக் கூட்டுக. பழமைபோல் - முன் போல. புல்லினும் சேர்ந்தாலும். திண்மையிலை - உறுதியிலை; முளைப்பதற்கு ஏதுவாயிருந்த உறுதியிலை. (1)

கவர்ந்து - தன்வயப்படுத்தி. சினம் - கோபம். குணம்-சிறந்த குணம். தடம் - விசாலமான. (2)

தீர்வு உள்ளரார் - தீர்த்துக் கொள்ளுதலை நினையார். தளர்ந்து - மனமிரங்கி. உறாஉம் - பொருந்தும். வெம்குறை - கொடிய குறை. தீர்க்கிற்பார். - தீர்ப்பார்; (தீர் - பகுதி.

கில் - ஆற்றலுணர்த்தும் இடைநிலை; ப்-எதிர்கால இடைநிலை). விழுமியோர் - மேலோர். திங்கள் - சந்திரன். கறை இருள் - களங்கமாகிய கறுப்பினை. (3)

கீழ் - கீழ்மக்கள். கொண்டு - மேற்கொண்டு. புகல்வது - சொல்வது. மலர்ச் சேக்கை-மலர்ப் படுக்கை. பொழில்வாய்- சோலையில்; வாய் - ஏழுனுருபு. 'இங்கு ஒருவர்க்குக் குணம் உண்டு எனினும்' எனவும், 'காக்கை விரும்புங் கனி வேம்பு அன்றோ' எனவும் கூட்டுக. (4)

அது பெறார் - அந்த அறிவைப் பெறாதவர். தம்பால் - தம்மிடத்து; பால் - ஏழுனுருபு. செறி பழியை - சேரும் பழிக்கு. சிறிதும் அஞ்சார் என மாற்றுக. பிறை நுதால் - பிறைச்சந்திரன் போன்ற நெற்றியையுடைய பெண்ணே; பிறைநுதல் - அன்மொழித் தொகை. வண்ணம் - அழகு. வாள் விழி - ஒளிபொருந்திய கண்கள். மறை - ஒளி மறைந்த. இருளைக் கண்டு அஞ்சுமோ எனக் கூட்டுக. (5)

காமுறுவர் - விரும்புவர். மேன்மக்கள் - (கல்வியறிவுடைய) மேலோர். மற்றையர் - கீழோர். வேல்வேண்டும்- வேலை ஒத்த. புளிங் காடி - புளிப்பாகிய காடி. (6)

இங்கு - இவ்வுலகத்தில். அன்பு இல்லானுக்கு - (பிற உயிர்களிடத்தில்) அன்பு இல்லாத ஒருவனுக்கு. ஏவல் - ஏவிய தொழில் செய்வோர்; தொழிலாகு பெயர். மற்று எல்லாம் - வாகனம் முதலிய பலவும். அவற்கு - (அன்பிலாத) அவனுக்கு. என் செய்யும் - என்ன பயனைத் தரும். நல்லாய் - நற்குணமுடையவளே. மொழியிலார்க்கு - ஊமைகளுக்கு. முது நூல் - பழமையான நூல்கள். ஏது - என்ன பயன்தரும். தெரியும் - (பொருள்களை) அறிதற்குரிய. (7)

தலைமையையும் - (செல்வம் முதலியவற்றா லாகிய) உயர்வையும். மதியார்-(தாங்களே) மதித்துக்கொள்ளார். தம்மின், இன் - ஐந்தனுருபு. இழியினும் - தாழ்ந்தவராயினும். அல்கு கழியினும் - சிறிய உப்பங்கழியிலும்; உம்-இழிவு சிறப்பு. (8)

எந்தை - எம் தந்தை. நல்கூர்ந்தான் - வறுமையடைந்தான். பைந்தொடீஇ - பசும் பொன்னாற் செய்த வளையலை அணிந்த பெண்ணே. பயன் - (கனியாகிய) பயனை. நில்லா - நிலையாத; அழிவடைந்த. அரம்பை - வாழைமரம். (9)

இருநீர் - கடல் சூழ்ந்த. வியன் - பரந்துள்ள. பொன் செய்து - பொன்னால் செய்யப்பட்டு அதிர் - ஒலிக்கின்ற. வளையாய் - வளையலை யணிந்த பெண்ணே. அழல் கதிரால் - சூரியனால். தண்ணென் கதிர் - குளிர்ச்சியுள்ள கிரணங்களை யுடைய சந்திரன். (10)

நகைமுகம் - முகமலர்ச்சி. இன்புறீஇ - மனமகிழ்ந்து. அல்லோர் - தீயோர். அழுங்குவார்-வருந்துவர். வல்லோர் - (கல்விகேள்விகளில்) வல்லவர். திருந்தும் - அழகுடன் விளங்கும். தே மா - இனிய கனிகளைத் தரும் மாமரம். சுழல்கால் - சுழல் காற்று. தேமா, தென்றல் வரத் தளிர் காட்டித் திருந்தும்; சுழல்கால் வர வருந்தும் என்க. (11)

முனிவு - கோபம். நல்குவர் - கொடுப்பர். மூதறிஞர் - முதிர்ந்த அறிவுடையோர். கயவர் - கீழோர். நனி விளைவு இல் - நன்றாக முற்றுதல் இல்லாத. கதலி - வாழைமரம்: ஆமோ - பயன்படுமோ; அறை - சொல்வாய். (12)

V. நாயின் நல்லியல்பு

இது, கா. நமச்சிவாய முதலியார் இயற்றியது.

அறவே - முழுதும். நீத்த - நீக்கிய. அறிவன் - ஞானி. மாசு இலா - குற்றம் இல்லாத. வதிந்திருந்தான் - தங்கியிருந்தான். தேசு உறும் - அழகு நிறைந்த. ஒளி ஆம் ஈசன் - ஒளி வடிவாகிய கடவுளது. சிந்தை - (தன்) மனத்தில். சேர்த்தி - (இடைவிடாது) சிந்தித்து. ஆசு-குற்றம். உஞற்றி- செய்து. (1)

பரிந்து - அன்புகொண்டு. அவன் பக்கல் - அந்த அறிவன் பக்கத்தில். உழுவை - புலி. சீயம் - சிங்கம். செறிந்து- கூட்டமாக வந்து. அவன் நிசையில் - அம்முனிவன் இருக்குமிடத்தில். அறன் உறும் - தருமநெறி யமைந்த. அவையும் - அந்தப் பறவைகளும் விலங்குகளும். (2)

எழில் உறும் - அழகு மிக்க. அழிதல் இல் - கெடாத. பொழில் உறு - சோலையில் பொருந்திய. கழி மகிழ்வு - மிக்க மகிழ்ச்சி. எய்த - அடைய. (3)

நல் நயம் - மிக்க நீதியையுடைய. துன்னிய - மிகுந்த. தொல் நகர் - பழமையான நகரத்திலுள்ள. மாந்தர் சில்லோர்- சில மனிதர். வறிய கோலத்து - எளிய நிலைமையுடைய. (4)

ஆங்கண் - அவ்விடத்தில். நெறியுடன் - முறைப்படியே. பொறியிலா - அறிவில்லாத. பொள்ளென - விரைவாக. (5)

முதியவன் - வயது முதிர்ந்தவன். முன்னி - முன்வந்து. முனிவான்தனை - முனிவர்க்குள் சிறந்தவனாகிய அவ்வறிவனை. மதியுளீர்-அறிவுடையவரே. வன்குரல்-வலிமையாகக் குரைத்தலையுடைய. புதியது-புதியதாகிய. ஓர் - ஒப்பற்ற. உவகை பூத்தீர் - மகிழ்வடைந்தீர். புகலுமின் - சொல்வீராக. அதன் சீர் - அந்த நாயின் சிறப்பை. வதியும் - (அங்கு) வாசம்செய்கின்ற. மாக்கள் - அறிவில்லாதவர்கள். தேர - உணரும்படி. வழுத்துவன் - சொல்வானுயினன். ஆங்கு - அவ்விடத்தில். (6)

தலைவன் - எஜமானன். வீசும் - எறிகின்ற. சாரம் இல்-சுவையற்ற. எச்சில் - எச்சிற் பொருள்கள் ; தொழிலாகு பெயர். பொன் இயல் - பொன்போன்ற. போ என - போர் செய்யப் போவாய் என்று கட்டளையிட. பொரமேற்செல்லும்- (ஆராயாது உடனே) போர் செய்யும்படி போகும். மாறிடாது - மாறுபாடு அடையாமல், அவனை - தன் தலைவனையே. சாரும் - போய் அடையும். (7)

இயல்பு - குணம். வந்த - (உபயோகத்துக் குரியதாகத்) தோன்றிய. வகைவகையாக - பற்பலவாக. சிந்தலில் - (என்றும்) அழிதலில்லாத. செயல்முறை-செய்கையின் தன்மையை. அறிந்திலோம் - அறிந்தோமில்லை. (8)

காட்டி வைத்தும் - தெரிவித்தும். புன்மையே - தீவினையையே. புனிதன் - பரிசுத்தனாகிய கடவுள். உன்னவுங்கில்லோம் - எண்ணவும் அறிவுடையோம் அல்லோம்; கில் - ஆற்றலை யுணர்த்தும் இடைச்சொல். ஒளி இலா-அறிவில்லாத. தாழ்வோம் - வணங்குவோம். (9)

இடித்துரைத்த - உறுதி மொழிகளைக் கூறிய. இணை இலான் தன்னை - ஒப்பில்லாதவனாகிய அம் முனிவனை. நினைப்பு உறும் - ஆராய்ந்து பார்க்கத்தக்க. நெறிமுறை-நன்னெறியின் முறைமையை. இனப்பகை - (மும்மலக்) கூட்டமாகிய பகையை. கடந்த - வென்ற. இது-இவ்வாறு அறிவுறுத்தலே. வனப்பு உறு - அழகு மிக்க. (10)

வதிதலானும் - வாசஞ் செய்வதனாலும். அருந்தலானும்- உண்ணுதலினாலும். நாட்டும் - நிலைபெறச் செய்வதற்கு உரிய. நகரியில் - நகரத்தில், இட்டமே - கூட்டத்தையே. மேவி - அடைந்து. இருமதி - அறிவில்லாமை. நலன் ஆம் - நன்றாகும். கனிவு - மகிழ்ச்சி. (11)

3428.

Printed at the 'Tamil Kadal' Press, San Thome, Madras.